
# தேவர் கோயில் ரோஜா




இந்திரா சௌந்தர்ராஜன்

முதற் பதிப்பு : அக்டோபர், 2014
உரிமை : ஆசிரியருக்கு

# DEVAR KOIL ROJA

**by :** Indra Soundarrajan

**First Edition** : October, 2014
**No.of Pages** : **176**
**Paper Used** : **11.6 N.S. Book Print**

விலை : ₹.85.00

**Thirumagal Nilayam**
**New No.13, Old No.28,**
**Sucons Apartments**
**Sivaprakasam Salai**
**T.Nagar, Chennai - 600 017.**
**Phone : 044-2434 2899, 2432 7696**

**E-mail ID : enquiry@thirumagalnilayam.com**
**Website : www.thirumagalnilayam.com**

**Laser at** : *Goodwill Computers,* T Nagar, Chennai - 17
Cell:9940254493

*Printed at* : **NOVENA OFFSET PRINTING CO.,** Chennai - 5 ✆ 28446166, 28446891

# என்னுரை

இந்த நாவல் நான் செய்த வித்தியாசமான முயற்சிகளில் ஒன்று. விட்டு விடு கருப்பாவைத் (விடாது கருப்பு) தொடர்ந்து நான் முயன்ற மற்றுமொரு கிராமத்து புதினம் இது.

ஓர் எழுத்தாளனைப் பொறுத்த அளவில் சில கருக்கள் மட்டுமே அவனுக்குள் சொல்ல முடியாத அளவு ஒரு தன்னம்பிக்கையையும் எழுதும்போது மிகமிக சுகமான உணர்ச்சியையும் அளிக்கும்.

என்வரையில் இந்த நாவலை அந்த லிஸ்டில் சேர்க்கலாம். எப்பொழுதும் ஓர் எழுத்தாளன் கதையை இழுக்கக்கூடாது. கதைதான் அவனை இழுக்க வேண்டும்...

இந்தக் கதையும் என்னை இழுத்தது.

இதை இரண்டு பாகமாக எழுத நினைத்தேன்.

இது முதல் பாகம்தான். இதன் இரண்டாம் பாகம் எப்பொழுது என்னால் எழுதப்படும் என்பது எனக்கே தெரியாது.

முதல் பாகம் கங்கை வெள்ளமாய் பொங்கிப் புரண்டது... இந்தக் கதையின் நாயகன் தேவமாயன் என்வரையில் ஒரு பரிபூரணன். அற்புதமான ஒரு பாத்திரப் படைப்பை உடையவன். தங்கமுத்துப் பாண்டியர் என்கிற பாத்திரமும் அப்படியேதான்.

'ஒரு பாணம் ஒரு சொல்' என்று ஒரு பழமொழி உண்டு. மனிதன் சொல்லில் நிற்க வேண்டும், பேசிய படி நடக்க வேண்டும் என்பதெல்லாம் ஒவ்வொரு வரும் வரவேற்றுப் போற்றும் ஓர் உன்னத விஷய

மாகும். சொன்ன சொல்லில் நின்று காட்டுவது என்பது அவ்வளவு சுலபமான ஒன்றல்ல. அரிச்சந்திரன் கதை ஒன்று போதும் சொல்லில் நிற்க அவன் பட்ட பாட்டை உலகுக்கு உணர்த்த! ஆனால் நின்றுவிட்டாலோ அதன்பின் உலகம் எந்த நாளும் அவரை மறக்காது.

இந்தக் கதையின் அடிநாதமும் இதுதான்.

எனக்கு மிக மனநிறைவைத் தந்த தொடர்களில் இதுவும் ஒன்று.

'குங்குமம்' வார இதழில் வெளிப்பட்டு எனக்கு சிறப்பு சேர்த்தது. வாசக உலகம் இதை வரவேற்று சிறப்பிக்கும் என்பதில் எனக்கு சந்தேகமில்லை. நல்ல முறையில் இதைப் புத்தகமாக வெளிக்கொணரும். திருமகள் புத்தக நிலையத்தாருக்கும், அதன் உரிமையாளர் திருப்பதி ஐயா அவர்களுக்கும் என் நன்றிகள்.

அன்புடன்
**இந்திரா சௌந்தர்ராஜன்**

# தேவர்கோயில் ரோஜா!

## 1

'மாயத்துக்கு கண்ணன் - அது அந்த மகாபாரதத்துல!
மாயத்துல மன்னன் தேவமாயன்-அது இந்த பாரதத்துல.
சொல்லி அடிப்பான் மாயன் - அவன்
சொல்லுலயே மடக்கிட்டானே காலன்!'

**கொ**ழித்து வளர்ந்திருந்த ஒரு மாமரத்தினைப் பார்க்கிறார்போல இருந்தது அந்த மினி பஸ்ஸைப் பார்த்தபோது...!

பஸ்ஸின் சிகப்பும் மஞ்சளுமான வண்ணமே தெரியாதபடிக்கு அதன் கூரைமேல், வாசல்மேல், இடைப்பட்ட ஜன்னல்களில் எல்லாம் தேவர்கோயில் கிராமத்து ஜனங்களின் அடைசல்!

இவர்கள் போதாதென்று கோழியும் சேவலும் ஒருபுறம் என்றால் பலர் கழுத்தில் மாலை போலக் கிடந்த வெள்ளாட்டுக் குட்டிகளும் இதில் அடக்கம்.

நல்லவேளை...

முந்தைய கிராமமான அய்யன்பட்டியில் அம்பு ரோஸ் என்கின்றவன் சில பன்றிக்குட்டிகளோடு பஸ்ஸில் ஏறப் பார்த்தான். கூரைமேல் இருந்த சண்முகம் என்கிற சம்முகமணி அம்புரோஸைப்

பார்த்து ஒரு முறை முறைத்து, "ஏலேய்... ஒம் பன்னிக்கு மினி பஸ்சு கேக்குதாடா?" என்று நாக்கை மடிக்கவும் அம்புரோஸ் அப்படியே தேங்கி விட்டான்.

பஸ்சும் தேவர்கோயில் என்கிற அந்தக் கிராமத்தை நோக்கிய புழுதிமண் சாலையில் தமுக்குதிமுக்கு என்று புழுதி பறக்க உருளத் தொடங்கிவிட்டது.

முதல்நாள் இரவில் திடும்மென்று ஒரு மழை. ஒரு அரைமணி பெய்திருந்தால் அதிகம். அந்த மழைக்கே சாலையின் மேடு பள்ளங்களில் பழுப்பாய் நீர் தேங்கி அதில் தவளைக் குஞ்சுகளும் குடித்தனம் நடத்த வந்துவிட்டிருந்தன! அவைகளிடமும் காதைத் திருகும் குஷிக்கச்சேரி.

பஸ்ஸின் டயர் அதில் இறங்கும்போது சரே லென்று அவைகளிடம் ஓர் அமைதி, நீரிடம் மட்டும் ஒரு பீறிடல்! வவ்வாலாய் தொங்கிக்கொண்டிருந்த பலரது இடுப்பு வரை அப்படிப் பீறிட்ட நீர் பாய்ந்து நனைத்தது.

"ஏலே செங்காளியப்பா... கோளாறா ஓட்டுறா சாமி. மனுஷன் இங்க வேதாளம் கணக்கா தொங்கி கிட்டு வர்றாங்கறத மறந்துபிடாதே..." என்று இதன் காரணமாக டிரைவர் பெயரைச் சொல்லி ஒருவன் சப்தமாய் கத்தினான்.

பக்கவாட்டில் இரண்டு பக்கங்களிலும் பச்சைக் கம்பளம் விரித்தமாதிரி வயல்கள். கதிர்களில் எல்லாம் அப்பொழுதுதான் பால் பிடித்திருந்தது. இன்னும் நாற்பது ஐம்பது நாள்கள் செல்ல வேண்டும்... அப் பொழுதுதான் அறுப்பதற்காக சொதி அறுவாளை எடுக்கலாம். மற்றபடி வயலுக்கு அப்பால் வளைத்துக் கட்டி அரண்போல நிற்கும் வருசநாட்டு மலைகளின் தொடர்ச்சி.

வெகு தூ...ரத்தில் பச்சைக் கூமாச்சி மலை தெரிந்தது. அதன் கூர்முகட்டுக்கு மேல் மட்டும் எப்பொழுதும் எதனாலோ கழுகுப் பட்சிகளின் ஆலவட்டம்.

சில பல வருடங்களுக்கு முன்பாக ஒரு மழைக் கால நாளில் இந்திய விமானம் ஒன்று அந்த மலை முகட்டில் மோதி விழுந்ததை யாராலும் அவ்வளவு சுலபமாக மறந்துவிட முடியாது.

ஒரு வாரம் வரை அதன்பின் விமானத்தில் பயணம் செய்து பிணமானவர்களைத் தேடினார்கள். அப்பொழுது தைரியமாக அந்த மலைமேல் ஏறி பிணங்களைத் தோளில் போட்டுச் சுமந்து வந்தவர்களில் தேவர்கோயில் இளைஞன் வேலப்பனும் ஒருவன்.

அவனும் மினி பஸ்சுக்குள் இருந்தான். எப்படியோ சிரமப்பட்டு இடத்தைப் பிடித்து ஜன்னலோரமாக அமர்ந்திருந்த அவன் ஒரு வளைவில் பஸ் திரும்பும்போது அந்த தூரத்துப் பச்சைக் கூமாச்சி மலையின் உச்சாணி விளிம்பைப் பார்த்து பல தடைவைகளில் ஒரு தடவையாக தான் பிணமாகச் சுமந்து வந்த ஏழு பேரைப் பற்றி நினைத்துக்கொண்டான்.

அதெல்லாம் மறக்கக்கூடிய நினைவுகளா என்ன? ஒரு பீடியை எடுத்து உதட்டுக்கு இடையே செருகி தீக்கங்கையும் பொருத்திப் பின் உள்ளிழுத்த புகையின் முதல் பாகத்தை மூக்குத் துவாரத்துக்கு இடம் மாற்றி ஒரு பாசஞ்சர் ரயிலின் வேகத்தில் அந்தப் புகையையும் அவன் வெளியே விட்டபோது அந்த பஸ்ஸில் யாரும் எதிர்க்கவில்லை.

பெட்டிக்கடை பெருமாள்சாமியும் பஸ்சுக்குள் இருந்தார். கம்மர்கட், தேன்மிட்டாய், டபர்ா தம்ளர் கட்டிய லக்கி பிரைஸ் அட்டை, ஊளை ஆரஞ்சுப் பழங்கள் என்று அவன் போடிநாயக்கனூரில் வாங்கி

யிருந்த பெட்டிக்கடை சரக்குகளுக்கு நடுவே ஒரு அலுமினியத் தூக்குவாளியில் கொஞ்சம் நாட்டுச் சரக்கும் இருந்து அதுவும் அதற்கே உரிய தொனியில் கமகமத்தது. பெருமாள்சாமியிடமும் நல்ல மப்பு.

டிக்கட் கொடுக்கும்போது கண்டக்டர்கூட "பச்சத் தண்ணின்னு பட்டைத் தண்ணியைக் கொண் டாந்து ஏய்யா கழுத்தறுக்கிறீங்க. ஒண்ணு குடிச்சுப் புட்டு அங்கையே கிடக்கோணும். இல்லாட்டி சரக் கோட நடந்து ஊர்ப்பக்கம் போகோணும். ரெண் டுக்கும் போவாம வண்டியில கொண்டாந்து மினி பஸ்ஸை மினி பார் ஆக்குறீங்களே" என்று சடைத்துக் கொண்டிருந்தான்.

அறுபது வயதை எட்டிப் பிடிக்கப் போகும் பெருமாள்சாமி காதிலேயே வாங்கிக் கொள்ள வில்லை. இன்று கூட்டமாக இருப்பதால் இப்படிக் கத்துகிறான். இல்லாவிட்டால், "ஒரு மடக்குக் கொடு" என்று அப்படியே அந்தத் தூக்குவாளியைத் தன் வாய்க்கு முன்னால் கவிழ்த்துக் கொண்டிருப்பான். தெரியாதாக்கும் இவனைப் பற்றி என்கிற ஒரு கணக் கான நினைப்பு அவரிடம்...

ஒருவழியாக தேவர் கோயில் ஊர் முகப்பு தெரிந் தது. முகப்பில் நன்கு உருண்டுதிரண்டு வளர்ந் திருக்கும் ஆலமரமும், அதனடியில் முட்டை விழிக ளோடு அமர்ந்திருக்கும் அய்யனாரும் மிகப் பிரசித்தி யானவர்கள்! அவர்களும் தெரிந்தார்கள்.

அய்யனாரின் சவாரிக் குதிரைக்குத்தான் ஒரு கால் போயிருந்தது. உடைந்த காலை அப்படியே ஒட்டவைத்து சுண்ணாம்பு பூசியிருந்தார்கள். அப்படிப் பட்ட அய்யனாரின் ராட்சஸ மூக்கே மேலும் விடைத்துப் போய் அவரே தும்முகின்ற அளவுக்கு புழுதிப் புரட்டலோடு அந்த மினி பஸ் அங்கே தேங்கி நின்றது.

மளமளவென்று பாதிக்குமேல் அங்கேயே உதிர்ந்துவிட்டார்கள். வேலப்பன்கூட அங்கே இறங்கிக் கொண்டான். மேலே வெள்ளாட்டுக் குட்டியும் கழுத்துமாக அமர்ந்திருந்த சம்முகமணியும் அங் கேயே இறங்கிக் கொண்டார்.

மீதம் இருப்பவர்களை உதிர்ப்பதற்காக அந்த மினிபஸ் ஊருக்குள் பிரவேசிக்கக் கிளம்பியது. அந்த ஒரு பஸ்தான் அவர்களுக்கும் நகரத்துக்குமான இணைப்பு. மற்றபடி எங்குபோவதாக வருவதாக இருந்தாலும் மாட்டு வண்டிகளும், விடலைக் காளை கள் பூட்டிய ரேக்ளா வண்டிகளும் தான் அந்த ஊரில் பிரசித்தம்.

ஊர் மிராசான செண்பகப் பாண்டியன் மட்டும் அந்த நாளைய ஃபியட் கார் ஒன்றை வைத்திருந்தார். வெண்ணிறத்தில் மொழுமொழுவென்று அதை அவரது டிரைவர் ஓட்டி வரும்போது, அதிலும் வயல் வெளிகளுக்கு நடுவில் உள்ள மண்பாதையில் அது சீறிக்கொண்டு வரும் பொழுது பார்ப்பதற்கே ரம்ய மாக இருக்கும்.

அப்பொழுதும் செண்பகப்பாண்டியனின் ஃபியட் கார் அதேபோல் எதிரில் வந்தபடி இருந்தது. அதைப் பார்த்தபடியே தோளில் ஆட்டுக்குடியோடு சம்முகமணி ஒருபுறமும், வேலப்பன் ஒருபுறமுக மாக ஒதுங்கி வழியை விட்டனர்.

காரும் அவர்களைக் கடந்து சென்றது. போன வேகத்தில் அப்படியே நின்றது. பின் அப்படியே பின்புறமாகவே வந்து அவர்களைச் சமீபித்தது. ஃபிலிம் ஒட்டிய கண்ணாடியாதலால் உள்புறம் யார் இருக்கி றார்கள் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

கண்ணாடி இறங்கவும் அதன் வழியே சூரிய காந்திப்பூ ஒன்று தலையை நீட்டுகிறமாதிரி இள

மஞ்சள் நிறத்தில் ஒரு இளம் பெண்ணின் முகம் வெளிப்பட்டது.

செண்பகப் பாண்டியனின் மகளான ரோஜா!

சம்முகமணியும், வேலப்பனும் அவளைப் பார்த்த மாத்திரத்தில் ஏதோ சப்பரத்தில் வரும் சாமியைப் பார்த்தது போல ஒருவித பரவசத்துக்கு உள்ளானார்கள். ரோஜா, சம்முகமணியின் கழுத்தில் ஒயிலாகப் படுத்திருந்த அந்த வெள்ளாட்டுக் குட்டியைத்தான் ஆசையாகப் பார்த்தாள். "ஓ... இட்ஸ் வெரி ஸ்வீட்" என்று தனது பழரச உதட்டை சற்றே நெளிசலுடன் குவித்தாள். மறுபக்கமாய் செண்பகப் பாண்டியன் இறங்கியிருந்தார். அவருக்கே உரிய வேட்டி, சந்தனக் கலர் ஜிப்பா, பருத்த தடிமனான ஒன்பது பவுன் சங்கிலி, அதில் அவரே வேட்டையாடிக் கொன்ற வேங்கைப் புலியின் பற்கள்.

"கும்புட்றேன் சாமி..." என்றார் சம்முகமணி.

அதை ஒரு புன்னகையோடு அங்கீகரித்த செண்பகப் பாண்டியனும், "எத்தன நாள் குட்டிடா இது..?" என்றுதான் பேச்சை ஆரம்பித்தார். இத்தனைக்கும் சம்முகமணி அவரோடு பள்ளியில் ஒன்றாகப் படித்தவர்.

"நேத்துதாங்க இது பொறந்துச்சு. முழுசா இன்னும் ஒரு நா கூட ஆகலை..."

"அதுக்குள்ளார தாயை விட்டுப்போட்டு இதை நீ தூக்கிட்டு வந்துட்டியாக்கும்...?"

"அப்படி இல்லீங்க... இதோட தாயாரு வெள்ளங் கோயில் பேச்சியோட வெட்டாடுங்க. இன்னிக்கு அங்க திருவிழா. அதை இன்னேரம் போட்டுத் தள்ளி பிரியாணி கூட பண்ணித் தின்னுருப்பாங்க. அதான் இந்தக் குட்டியை நூத்தம்பது ரூவா கொடுத்து நான்

வாங்கிட்டு வந்தேன். எனக்கும் நம்ம ஊர் அய்யனார் கிட்ட நேர்த்தி இருக்குதுங்குல்ல?"

அவர் பதிலில் அந்தக் குட்டி ஆட்டுக்கும் மிகச் சமீபத்தில் ஒரு முடிவு இருப்பதைத் தெரிந்துகொண்ட செண்பகப் பாண்டியன் சரேலென்று தன் பாக் கெட்டில் கையை விட்டு இரண்டு நூறு ரூபாய் நோட்டுகளை எடுத்து நீட்டினார். சம்முகமணிக்குப் புரிந்துவிட்டது.

"சாமீஈ..!"

"நீ வேற ஒரு ஆட்ட வாங்கி அய்யனாரப்பனைக் கவனி... இதை என் மக ரோசா கேக்கறாடா..."

அவர் பதிலைத் தொடர்ந்து ஆட்டுக்குட்டி கைமாறி அவளிடம் காருக்குள் சென்றது. அவள் ஏதோ குழந்தையை மார்போடு அணைப்பது போல அணைத்து அதன் முகத்தில் முத்தமாகப் பொழியத் தொடங்கினாள். கூடவே, "உங்கம்மாவை வெட்டிக் கொன்னுப்பிட்டாங்களா கண்ணு... கவலப்படாதே, இனி நான் இருக்குறேன்..." என்றவள் படுவேகமாக நிமிர்ந்து டிரைவரைப் பார்த்து, "வண்டியை வேகமா வீட்டுக்கு விடு" என்றாள். பின்னர் செண்பகப் பாண்டியனும் காரில் ஏறிக்கொள்ள கார் திரும்பவும் சீற ஆரம்பித்தது.

சம்முகமணியிடம் பெருமூச்சு. அதுவரை மௌன சாமியாக இருந்த வேலப்பன் வாயைத் திறந்தான். "சம்மு மாமோவ்... நம்ம பெருசுக்கு மக எதைக் கேட்டாலும் வாங்கிக் கொடுத்துடணும்போல... பார்த்தியா?" என்றான்.

"அந்தப் பொண்ணுக்கு ஆனாலும் பூஞ்சு மனசு. எப்படித்தான் இவ்வளவு இளகின மனசோட இவ ருக்கு மகளா வந்து இது பொறந்துச்சுன்னு தெரிய

லியே..." என்கிற அங்கலாய்ப்புதான் சம்முகமணி யிடம் பதிலுக்கு வெளிப்பட்டது.

அப்பொழுது பக்கவாட்டுச் சரிவில் வயல் வரப்பு ஒன்றின் முடிவில் இருந்து தோளில் மண்வெட்டி யுடன் அந்த சாலைமேல் ஏறிக்கொண்டிருந்தான் ராஜேந்திரன். அவனைப் பார்க்கவும் இருவரிடமும் மெல்லிய தடுமாற்றம்.

"என்னலே... பாக்கவும் அப்படியே அடங்கி ஒடுங்கிப் பம்முறீங்க. என் மாமன் வந்துட்டுப் போன மாதிரி தெரிஞ்சிச்சே..."

ராஜேந்திரன் மண்வெட்டியைக் கீழே வைத்தவ னாக வேட்டி நுனியால் முகத்தைத் துடைத்தபடியே கேட்க, சம்முகமணியும், வேலப்பனும் மிடறு கட்டி னர்:

"ஏண்டா... வாயத் தொறந்து பேசமாட்டீங் களோ?"

"அதெல்லாம் ஒண்ணுமில்ல ராஜேந்திரா... ஆட்டுக்குட்டி ஒண்ணோட இப்பதான கார்ல இருந்து இறங்கி நடக்க ஆரம்பிச்சேன். அந்தக் குட்டி ஆடு உன் மாமன் மக கண்ணுல பட்ருச்சு. உடனே அது உன் மாமனைத் தொணப்பியிருக்குமாட்டம் தெரியுது. தேவரும் காரை நிறுத்தி ஆட்டுக்குட்டியை வாங்கி மக கைல கொடுத்துட்டாரு. அம்புட்டுதான்...

"அவரு கேட்ட உடனே நீயும் தூக்கிக் கொடுத் துட்டியாக்கும்?"

"பொறவென்ன பண்ணச் சொல்றே?"

"முடியாது... எனக்கு வேணும்... உங்களுக்கு வேணும்னாக நீங்க போய் சந்தைல வாங்கிக்குங் கன்னு சொல்ல வேண்டியதுதானே?"

"எதுக்கு ராஜேந்திரா அவருகிட்டால வீறாப்பு. அவருக்குத்தான் எதுத்து பேசுனாலே பிடிக்காதே?"

"போடாப் போடா வெண்ண வெட்டி. இப்படியே பயந்து பயந்துதாண்டா அந்த ஆளை நல்லா வளர்த்து விட்டுருக்கீங்க. அவரும் என்னவோ இந்த தேவர் கோயிலுக்கு சுத்தி உள்ள பதினெட்டு பட்டிக்கும் தான்தான் பாளையக்காரர்னு நினைச்சுகிட்டு அளம்பல் பண்ணிக்கிட்டு திரியறாரு..."

"அது நெசம்தானே..? ஒரு காலத்துல உங்க மாமன்வழி தாத்தனுங்கதானே இந்தப் பக்கத்துப் பாளையக்காரங்களாவே இருந்து வந்துருக்குறாங்க."

"அந்தப் பழைய கதையை இப்ப பேசாதே... இன்னிக்கு படிச்சவன்தான் பெரியவன்."

"சரிப்பா... சும்மா வாயப் புடுங்காதே! உங்க குடும்பத்துக்கும் உன் மாமன் குடும்பத்துக்கும் பகைங்கறது ஊருக்கே தெரியும். அந்தப் பகையை எங்ககிட்ட காட்டாதே அப்பு..."

- என்றபடியே அவர்கள் நடக்கத் தொடங்க ராஜேந்திரனும் அவர்களைத் தொடர்ந்தான். திடீரென்று "ஆமா, காருக்குள்ள ரோசா இருந்தாளா?" என்று கேட்டான்.

"இல்லாமத்தான் குட்டி ஆட்ட வாங்கிக் கொடுத்தாராக்கும் உன் மாமன்?"

"ஆமா, ரோசா எந்தக் கலர் சேலை கட்டியிந்தா?"

"அது சரி, பெருசை நேருக்கு நேர் உத்துப்பாத்தாலே கண்ணைப் புடுங்கப் பாப்பாரு. இதுல அவர் மவளைப் பாத்துட்டாலும் நாங்க கிழியாமத்தான் ஊட்டுக்குப் போய் சேருவோமாக்கும்?" என்றான் வேலப்பன்.

"எ அப்பேவ்... அது மஞ்சக்கலர்ல துப்பட்டா போட்டுக்கிட்டிருந்துச்சி. அதான் கண்ணுக்குத்

தெரிஞ்சிச்சு. இப்ப நீ அதையெல்லாம் தெரிஞ்சு என்ன பண்ணப்போறே..?" என்றார் சம்முகமணி.

அந்த நொடியில் அவர்கள் அந்த மண் சாலையை ஒட்டி வளர்ந்திருக்கும் நன்கு சதை பிடித்த மரமான புளியமரத்தடிக்கு வந்திருந்தனர்.

அந்த மரத்தடியில் சாதாரணமாக யாரும் போய் தேங்கி நிற்கமாட்டார்கள். அண்ணாந்தால் அக்டோபஸ் கால்களைப் போல ஒன்பது கிளைகள் எட்டுத் திக்கும் வளைந்து பிரிந்திருக்கும்.

அந்த ஒன்பது கிளைகளிலும் வருச மலைக் கள்ளன் தேவமாயனும், அவன் ஆட்களும் ஒருசேர தூக்கில் தொங்கிய சம்பவம் ஒன்று சில பல வருடங் களுக்கு முன்பு அரங்கேறியிருந்தது.

தேவமாயனும் அவன் சகாக்களும் கன்னம் வைப்பதில் ஜித்தர்கள். சொல்லி அடிப்பதிலும் நிக ரில்லாதவர்கள். அங்கே வந்தாலே அந்த ஒன்பது கள்ளர்கள் முறுக்கு மீசையோடு முறைத்துப் பார்க்கிற மாதிரி எல்லாம் ஒரு பிரமை தட்டும். கூடவே இடிச் சிரிப்பு, எக்காளம், விசும்பலான அழுகுரல்கள் எல்லாமே கேட்பதாகப் பலரும் பல மாதிரி சொன்னதில் எப்பொழுதும் அந்த மரமும் அதன் அடிநிழலும் வெறிச்சோடித்தான் கிடக்கும்.

அன்றும் வெறிச்சோடித்தான் கிடந்தது. ஆனால் ஒரு ஆச்சரிய அதிர்ச்சியாய் ஒன்பது கிளைகளிலும் தலை அறுக்கப்பட்ட ஒன்பது சேவல்கள் ரத்தம் சொட்டச் சொட்ட காற்றில் ஆடியபடி இருந்தன. புளியமரத்தின் தடித்த மரத்தண்டில் சுண்ணாம்பைக் கொண்டு 'தேவமாயன் திரும்ப வந்துவிட்டான்' என்று எழுதப்பட்ட எழுத்துகள்!

அதை வாசித்த மாத்திரத்தில் ராஜேந்திரனும், சம்முகமணியும், வேலப்பனும் உச்சிமுடி இழுக்கப் பட்ட மாதிரி ஒரு விடைப்புக்கு மாறினர்.

# 2

'தேவமாயன் சாகஸம், ஒரு புராண பரவசம்
தேவைக்கு மேல உள்ளவனுக்கெல்லாம்
அவன் பேரே ஒரு ஆலகால விஷம்!'

**வி**டைப்புக்கு மாறிய மூவரின் கண்களும் அப் படியே அகண்டுபோய் திரும்பவும் காற்றிலாடிக் கொண்டிருந்த தலையில்லாத அந்த சேவல்களைத் தான் பார்த்தன.

நெடுநேரம் வரை அவர்களிடையே பேச்சே எழவில்லை. பிறகு சம்முகமணி மட்டும் மெல்ல ஈன சுரத்தில் வாயைத் திறந்தார்.

"எலே... என்னலே இது? தேவமாயன் திரும்ப வந்துட்டான்னா என்னலே அர்த்தம்...?"

"யாருக்குத் தெரியும்? ஒம்பது கிளை புளிய மரம்னாலே நமக்கெல்லாம் எப்பவுமே டர்ர்ருதான். இனிமேட்டு டர்ரோ டர்ர்ருதான் போல...?"

"வேலப்பன் அந்த மண்ணின் இளைஞர்களுக்கே உரிய பாணியில் சடைத்துக்கொள்ள ராஜேந்திரன் மட்டும் அந்தப் புளிய மரத்தை ஒரு சுற்றுச் சுற்றி வந்தான். பின் கண்ணுக்கு எட்டிய தொலைவு ஒரு பார்வை பார்த்தான். வாலிபத்தினவு அதில் பளிச் சிட்டது.

"யாரைன்னு தேடுறே ராசேந்திரா?"

"இங்க பூசை நடந்துருக்குது வேலப்பா... இதைப் பண்ணவங்க இங்க யாராச்சும் ஊர்க்காரங்க

வந்து கவனிக்கறாங்களான்னும் பாத்துக்கிட்டிருக்க லாம் இல்லியா?"

"அப்படிப் பார்த்து...?"

"என்ன அப்படிப் பார்த்து... பார்த்தாத்தானே ஊருக்குள்ள தகவல் போகும்?"

"ஓ... நீ அப்படி வர்றியாக்கும்?"

"அப்ப எவனோ மொத்த ஊரையே மிரட்டத் தான் இப்படிச் செஞ்சுருக்கானா?"

"ஊரை இல்ல... இந்த மிரட்டல் என் மாம னுக்கு... ஏன்னா அவருதானே ஒம்போது பேரும் தூக்குல தொங்கவே காரணம்?"

"ஆமாம்ல... சரி சரி இனியும் இங்க நின்னு எதையும் பேச வேணாம். இது பழி எடுத்த இடம். பொழுது வேற சாயப்போவுது பார்..."

சம்முகமணியிடம் எச்சரிக்கை வெளிப்பட்டது.

"அப்படியே போய் என் மாமன்கிட்ட இந்த விஷயத்த சொல்லு. அப்புறமா அவர் என்ன பண்றா ருன்னு பாப்போம்."

ராஜேந்திரன் சம்முகமணியையே போகச் சொன்னவனாக வேட்டியை திரும்ப மடித்துக் கட்டி னான்.

"வேலப்பா... நீயும் கூட வா..." என்றார் சம்முக மணி.

**தே**வர்கோயில் ஜனங்களின் பாஷையில் சொல்வதாக இருந்தால் செண்பகப் பாண்டியனின் வீடு முரட்டு வீடு!

இத்தனைக்கும் நூறு வருஷத்துக் கட்டடம். ஆனாலும் நடப்பு சிவில் என்ஜினியரிங்கையும் பிடித்துப் போட்டு முகப்பில் நிறைய டிசைன் எல்லாம் செய்திருந்தார். பட்டணத்து பங்களாக் களுக்கே உரிய போர்ட்டிகோ வேறு.

வீட்டைச் சுற்றிலும் ஏராளமாக மரங்கள். அதில் வாதா மரம் மட்டும் ஒரு விரித்த குடையைப் போலவே இருந்தது. செங்காவி நிறத்தில் அதில் காய்கள். வயலட் கண்களுடன் அணில்கள் கிளைகளில் மராத்தான் ஓட்டம் ஓடிக் கொண்டிருந்தன.

மரத்தைத் தாண்டி நடக்கும்போது இதமான ஒரு வாசமும், பூசினமாதிரி ஒரு குளிரும் உடம்பைத் தாக்கும். பரம சுகமாக இருக்கும்.

சம்முகமணிக்கும், வேலப்பனுக்கும் கூட அப்படித்தான் இருந்தது. ஆனால் ஒன்பது கிளைப் புளிய மரத்து முண்டச் சேவல்கள் மனத்தில் ஒருவித பயமூட்டம் போட்டிருந்தன.

முகப்பில் போர்ட்டிகோவில் அவரது பியட் கார்... அதைப் பார்த்தபடியே நடந்தவர்கள் காதில், "ஏ... பிடி... பிடி..." என்று ஒரு குரல் விழ அதைத் தொடர்ந்து ஆட்டுக்குட்டி முன்னால் ஓடிவர, பின்னாலேயே சுடிதாரில் ரோஜா ஓடிவந்தபடி இருந்தாள்.

சம்முகமணி சட்டென்று ஆட்டுக்குட்டியைத் தாவிப் பிடித்துவிட்டார். அப்படியே மார்புக்குத் தூக்கினார். பவுடர் வாசம் கமகமத்தது. அதன் கண்ணுக்கு மை எல்லாம் போடப்பட்டிருந்தது அவருக்குப் புரிந்துவிட்டது.

ரோஜாவிடம் ஆட்டுக்குட்டியை நீட்டியபடியே "பெரியவர் இல்லையா தாயி?" என்றார். அவள் உடனே பதில் கூறாமல் ஒரு மாதிரிப் பார்த்தாள்.

"உன்னைத்தான் தாயி..."

"நீதானே இந்த ஆட்டுக்குட்டிய வித்தவன்?"

"அ... ஆமாம்..."

"இது திரும்ப வேணும்னு கேக்கத்தானே வந்துருக்கே? முடியாது. நான் தரமாட்டேன்... பொன்னிக்கு இன்னும் பணம் வேணும்னா கேளு தரேன். திருப்பி மட்டும் கேக்காதே..."

"அப்ப இதுக்குப் பேர் பொன்னியா தாயி..."

"ஆமா... செத்துப்போன எங்கம்மா பேர். என்னமோ தெரியல. இதப் பார்த்ததுல இருந்து எங்க அம்மாவைப் பார்க்கற மாதிரியே ஒரு ஃபீலிங்! ப்ளீஸ் இதைத் திருப்பிக் கேக்காதே..."

அவள் தேவையே இல்லாமல் கெஞ்சினாள். அதற்குள் பின்னாலேயே செண்பகப் பாண்டியன், "யாரங்கே?" என்றபடி வந்துவிட்டார்.

ஜிப்பாவைக் கழட்டிப் போட்டுவிட்டு வேட்டியும் பனியனுமாய் தெரிந்தவரை சம்முகமணியும், வேலப்பனும் பார்த்து பம்மினர்.

"எலே... என்னாடா! என்னா விஷயம்? இப்பதானேடா உங்களை வழியில பார்த்தேன்..."

"ஆமாங்கய்யா... இது வேற விஷயமுங்க..."

"என்ன? ரோசா நீ உள்ளார போ கண்ணு."

செண்பகப் பாண்டியன் ரோஜாவை அனுப்பியவராக அவர்களிடம் ஊன்றினார். அவர்களும் பவ்யமாகக் கையைக் கட்டிக்கொண்டு புளியமரத்து விஷயத்தைச் சொல்ல ஆரம்பித்தனர்.

**ரா**ஜேந்திரனும் தன் தாயான சொர்ணத்திடம் புளியமரச் சங்கதியைக் கூறி முடித்திருந்தான். சொர்ணம் அப்படியே பேயடித்தது போல வாயடைத்துப் போயிருந்தாள்.

"என்னம்மா... நான் சும்மா போற போக்குல புளுகறதா நினைக்கிறயா?"

"....................."

"உன்னியத்தாம்மா... வேலப்பனும், சம்முகமணி பெருசும்கூட அப்படியே விடைச்சுப் போய்ட்டாங்க. ஆமா தேவமாயனும் அந்த ஒம்பது பேர்ல ஒருத்தன் தானே?"

"ஆமாங்கண்ணு."

"பொறவு செத்துப்போன அவன் எப்படி திரும்ப வர முடியும்?"

"அதைத்தான் நானும் ரோசிக்கிறேன்..."

"மாமாவுக்குப் பிடிக்காத எவனாச்சும் சும்மா குட்டையக் குழப்பிவிட்டுப் பாக்கறானுங்களோ?"

"தெரியலியே..."

"அப்படித்தான் இருக்கும். ஊர்ல பாதிப்பயலுக நிலத்தை மாமாதானே அடகு பிடிச்சு அம்புட்டையும் விழுங்குனவரு. அதுல எவனாவது சும்மா விளை யாடிப் பாப்போம்னு விளையாடி இருப்பானுங்க."

"அப்படி இருந்தாத்தான் அண்ணனுக்கு நல்லது. இல்லாட்டி..." - சொர்ணம் இல்லாட்டி என்று கேட்கும் போதே கலக்கம் அதில் பளீரென்று தொனித்தது.

"ஏம்மா... தேவமாயன் என்ன அவ்வளவு பெரிய வனா? அவனும் மனுஷன்தானே?"

"ஆனா லேசுப்பட்ட ஆளா என்ன?"

"அப்ப வல்லாளகண்டன்னு சொல்லு."

"வல்லாளகண்டன் மட்டுமில்ல... ரொம்பப் பேருக்கு அவன் அந்த அய்யனார் சாமி மாதிரி..."

"புரிஞ்சுபோச்சு... இந்த மம்பட்டியான் மாதி ரின்னும் சொல்லு. இருக்கறவங்க கிட்டால எடுத்து இல்லாதவங்களுக்குக் கொடுக்கறவனாக்கும்?"

"அப்படியும் சொல்லலாம். ஆனா இவன் அதுக்கும் ஒருபடி மேலே..."

"அன்னிக்கு அப்படி என்னதான் நடந்துச்சு? ஏன் அந்த புளிய மரம்னாலே ஊரு நடுங்குது. நான்தான் அப்ப பொறக்கவே இல்லை. நீ இருந்ததானே..."

"என்னான்னு சொல்ல... இப்பத்தான் கொஞ்ச நாளா அந்த நினைப்பெல்லாம் இல்லாம இருந்தேன். இன்னிக்கு நீ திரும்ப அதை எல்லாம் கிளறி உட்டுட்டே..."

"எங்க... மென்னு மென்னுதான் துப்புறியே தவிர விஷயத்தைச் சொல்லமாட்டேங்கிறியே..."

ராஜேந்திரன் அவன் தாயிடம் பக்குவமாகத் தயிர் கடைகிற மாதிரிக் கடையவும், அவளும் அப்படியே அந்த நாளைய சம்பவத்துக்குள் விழ ஆரம்பித்தாள். அருகில் அவளது கணவரும் ராஜேந்திரனின் அப்பாவுமான பரமேஸ்வரன், போலீஸ் உடுப்பில் புகைப்படத்தில் தெரிய அந்தப் படத்தில் தொங்கியபடி இருந்த காய்ந்த சந்தன மாலை அவர் அமரராகி விட்டதைச் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தது. சொர்ணம் நினைப்போ சுருண்டு சுருண்டு பின்னோக்கிப் போயே போய்விட்டது.

அது ஒரு அமாவாசை நாள்.

நடுப்பகல் வேளையில் தமுக்கு போட்டு ஊர் பஞ்சாயத்துக்கு அழைப்பு விடுத்தபடியே போய்க் கொண்டிருந்தான் ஊர் காவல்காரனான மாடசாமி.

"தேவர்கோயில் மகாசனங்க அம்புட்டு பேர் கவனத்துக்கும் ஒரு சேதி. வாத்யார் மொக்கராசு மக தீயில பாஞ்சு உசுரை மாச்சுகிட்ட நிலைல, மொக்கராசு தன்னோட மாப்புள பேர்ல ஒரு அவசர பிராதுவைக் கொடுத்து விசாரிக்கச் சொல்லியிருக்கறதால எம்

ட்டு சோலி இருந்தாலும் அதை ஒத்தி வெச்சிப் போட்டுப்பிட்டு நம்ம ஒம்போது கிளை புளிய மரத்தாண்ட வரும்படி பஞ்சாயத்தார் உத்தரஊஊஊ..."

என்கிற அவனது செய்தி ஊர் மக்களை நண்டு கவ்வினமாதிரி ஒரு அவஸ்தைக்கு உள்ளாக்கிவிட்டது.

வாத்யார் மொக்கராசுவைத் தெரியாதவர்கள் கிடையாது. அவர் மகள் மகாலட்சுமியும் பேருக்கு ஏற்ப லட்சுமிதான். அவளா தீயில் பாய்ந்துவிட்டாள்?

அதிர்வும் ஆச்சரியமுமாகப் பாய்ச்சல் எடுத்து ஒன்பது கிளைப் புளியமரத்தைத் தொட்டுத்தான் அவ்வளவு பேரும் நின்றார்கள்.

சற்றைக்கெல்லாம் மொக்கராசுவும் வந்துவிட்டார். சும்மா வரவில்லை. தோளில் தன் மகளின் சடலத்தைத் தூக்கிப் போட்டுக் கொண்டுதான் வந்தார்!

பஞ்சாயத்தாருக்கு என விரிக்கப்பட்டிருந்த கம்பளத்துக்கு முன்னால் அப்படியே அவளை வெறுந் தரையில் கிடத்தவும் ஊரே உச்சு உச்சு என்று பரிதாபப்பட்டுப் போனது.

தீக்கருகலில் மகாலட்சுமி வெந்து அவிந்திருந்தாள். மொக்கராசுவின் தோளில், முதுகில், இடையில் எல்லாம் மகாலட்சுமியின் நைந்து உருகிப்போன சதைக் கொழுப்புப் பிசிறுகள்.

"ஐய்யோ என் அய்யனாரே... என்னா இது கொடுமை? மொக்கராசு... எப்படிடா இன்னும் மூச்சோட நீ நின்னு கிட்டிருக்கே. பதறுதடா எங்க நெஞ்சுக்கூடு" என்று அங்கங்கே சிலர் கேவியபடி வெடிக்க, ஃபியட் காரில் புழுதிப் புரட்டலோடு வந்து சேர்ந்தார் தங்கமுத்துப் பாண்டியர். கூடவே பஞ்ச பாண்டவர்கள் என்று அழைக்கப்படும் அவரது பஞ்சாயத்து சகாக்கள். ஒருவர் முகத்தில்கூட சுரத்

தில்லை. தங்கமுத்துப் பாண்டியரோடு பட்டுப் பாவாடை தாவணியில் சொர்ணமும் வந்திருந்தாள்.

கூட்டத்தைக் கடந்தவள் சடலமாகக் கிடக்கும் மகாலட்சுமியைப் பார்த்து அப்படியே மயங்கிவிட்டாள். அவளுக்கு மூர்ச்சை தெளிவிக்க சிலர் முனைய, "இதுக்குத் தான் வராதேன்னு சொன்னேன். கேக்கல இந்தப் புள்ள..." என்றபடியே கூட்டத்தைப் பார்த்தார் தங்கமுத்துப் பாண்டியர்.

"ஐயா... என்னாங்க இது அநியாயம். அந்தப் படுபாவிய சும்மா உடக்கூடாதுய்யா..." என்று வேகமாக முன்வந்தாள் ஊர்ப் பெண் ஒருத்தி. தங்கமுத்துப் பாண்டியரும் அதை அங்கீகரித்தவராக மொக்க ராசுவை நெருங்கி, "ஆமாம், எங்க அந்தப் பய?" என்று கேட்டார். அவர் கேட்டது மொக்கராசுவின் மாப்பிள்ளை மணிக்குட்டி என்கிற குட்டியை. மொக்க ராசுவால் பதில் கூற முடியவில்லை. விம்மிப் புடைத்தது மார்பு. கூடவே வந்திருந்த ஒருவர்தான் வாயைத் திறந்தார்.

"அந்தக் குட்டிப்பய இப்ப மானூர்ல அந்தத் தேவடியாளோட இருக்கான்யா... தகவல் சொல்லி உட்டும் வரலை... கேட்டா கூறு கெட்டுப்போய் அவ தீக்குளிச்சா அதுக்கு நானா பொறுப்பு- ஆம்பளைன்னா ஊருக்கு ஒருத்திய கூட வெச்சுக்குவான். இவ அப்பன் கூட மூணு பொண்டாட்டிக்காரன்தானேன்னு எகத்தாளம் பேசறான்..." என்றார். பஞ்சாயத்தாருக்கு கொஞ்சம் பகீர் என்றது. மொக்கராசுவுக்கோ அந்த நிலையிலும் புடைத்துக்கொண்டு கோபம் வந்தது.

'தலைவரே... என் முதல் இரண்டு சம்சாரத்து வயித்துலயும் ஒரு புழுபூச்சிகூட வெக்கல. அதனால அவங்க சம்மதத்தோடதான் நான் மூணாவதா வள்ளிப் பொண்ணைக் கட்டுனேன். அதை அவன் புரிஞ்சி

கிட்டு தான் என் பொண்ணைக் கட்டுனான். இப்ப என்னையே குத்தம் சொல்றது அநியாயமுங்க. அதை விடக் கொடுமை நான் என் மகளுக்குப் போட்ட நகை நட்டுங்கள எல்லாம் அந்த மானூர்க்காரிகிட்ட கொண்டுபோய்க் கொடுத்தது. என் மகளும் போராடிப் பார்த்துத்தான் இப்ப இப்படி ஆயிட்டா. நான் இப்ப எல்லாத்தையும் இழந்து தனிமரமா நிக்கறேனுங்க. இந்தப் பஞ்சாயத்து அந்தப் பயலுக்கு ஒரு முடிவான தண்டனை தராட்டி இந்தப் பொணத்தைத் தூக்கி கிட்டு நான் போலீசுக்குதாங்க போவேன்... எனக்கு வேற வழி இல்லீங்க..." என்று விம்மி வெடித்தார் மொக்கராசு.

அவர் தன் பேச்சில் போலீசுக்குப் போவேன் என்று சொன்னதுதான் தாமதம், தங்கமுத்துப் பாண்டியர் பஞ்சாயத்தைவிட்டே விலகி நடக்க ஆரம்பித்துவிட்டார்.

'ஐயா... ஐயா... ஐயா' என்று உடனேயே பலர் அவர் பின்னாலேயே ஓடினார்கள். சிலர் மொக்க ராசுவிடம் போய், "எலே... அறிவிருக்குதாலே. எதுக்குலே இப்ப போய் போலீசு கீலீசுன்னு வாய விட்றே. பாத்தியா இப்ப... பெரியவர் துண்டை உதறிக் கிட்டு கிளம்பிட்டதை..." என்றனர்.

மொக்கராசுவுக்கும் தான் உணர்ச்சிவசப் பட்டது புரிந்தது. "ஐயா என்னை மன்னிச்சிடுங்க" என்றபடியே அவர் முன்னால் போய் கைகளைக் கூப்பினார். கண்களில் மானாவாரியாய் கண்ணீர்.

கூட்டமே அதைப் பார்த்துப் பதறிப்போய் நிற்க, அந்தக் கூட்டத்தில் தலைப்பாகை கட்டி நெற்றி நிறைய திருநீறுடன் இருந்த ஒருவனுக்கு மட்டும் அந்தக் காட்சி ஆனாலும் ஆச்சரியமாக இருந்தது.

பக்கத்தில் இருந்த ஒருவரிடம் மெல்லிய குரலில் கேட்டான்.

"ஏங்க... போலீசுக்குப் போறேன்னு சொன்னது ஒரு குத்தமா என்ன?"

பதிலுக்கு முறைத்த அவர் அவனை ஒரு தினுசாகப் பார்த்தார்.

"ஆருலே நீ...?"

"நான்... நான் அசலூர்க்காரனுங்க."

"அதான் உனக்கு இந்த தேவர் கோயில் பத்தி ஒரு தெளிவில்லாமப் போயிடிச்சு. எங்க பெரியவருக்கு எதுக்காகவும் இந்த ஊருக்குள்ள போலீசு வரக்கூடாதுய்யா... தர்ம நியாயங்களை நாமளே பேசித் தீர்த்துக்கிடணும்கறது தான் அவர் விருப்பம். அப்படித்தான் இம்புட்டு நாளும் இருந்துகிட்டு வர்றோம்... தெரியும்ல?"

"அப்ப இப்ப அந்த மணிக்குட்டியை உங்க பெரியவர் என்ன பண்ணுவாராம்?"

அவன்தான் கேட்டான்.

"தீர்ப்பு சொல்லுவாரு பாரு" என்று அவரும் தற்காலிகமாக அவனை அடக்கினார். சில நிமிடங்களிலேயே தங்கமுத்துப் பாண்டியரும் தீர்ப்பைக் கூறிவிட்டார்.

அந்தத் தீர்ப்பைக் கேட்டவனுக்குக் குப்பென்று வியர்த்தேவிட்டது. அடி ஆத்தீ..!

# 3

'தெச்சது கட்டாரி, அச்சமான சேதியோட
துச்சமா நினைச்சாக்கா மிச்சமில்ல, மீதமில்ல

கச்சை கட்டிட்டான் கர்மதுரை தேவமாயன்
மச்சு வீடெல்லாம் மனம் பதறப் போகுதே...'

தங்கமுத்துப் பாண்டியர் சொன்ன தீர்ப்பில் அவன் ஆடியே போய்விட்டான்.

"எலேய்... இனி அவன் எந்த பொட்டப்புள்ளை யையும் ஏறெடுத்தும் பாக்கக்கூடாது. ஆம்பளைன்னா ஆயிரம் பேரை வெச்சுக்கலாம்கற அவன் சதைத் திமிரை அடக்காட்டி மகாலட்சுமி மாதிரி பத்தினிப் பொண்ணுங்க அநியாயமா தீயில பாஞ்சுகிட்டே இருக்கவேண்டி வந்துடும். ஆகையால எது வந்தாலும் சரி, யார் வந்தாலும் சரி நான் பாத்துக்கறேன், அவனைக் காயடிச்சிடுங்கப்பா..."

தங்கமுத்துப் பாண்டியர் சொன்னது அவன் காதில் திரும்பத் திரும்ப எதிரொலிக்கத் தொடங்கியது.

"என்னங்க இது... இப்படிக்கூடவா தீர்ப்பு சொல்லுவாங்க..." என்று பக்கத்தில் இருந்தவரிடம் மாய்ந்தான். அவர் ஒரு முறை முறைத்தார்.

"வந்ததுல இருந்தே பாத்துகிட்டுதான் இருக்கேன். நீ சொணங்கிகிட்டே இருக்கே. எங்க பாண்டியர் தீர்ப்பெல்லாம் இப்படித்தான் - அப்பத்தான் ஒரு பயம் இருக்கும்..."

"அதுசரி... விஷயம் போலீசுக்குப் போனா என்னாவறது? கோர்ட்டு குளம்னு ஏறுவீங்களோ? கோர்ட்ல கேப்பாங்க... பஞ்சாயத்துக்கும் ஒரு எல்லை இருக்கும்பாங்க."

"தாபார்... இன்னொரு வட்டம் இங்க போலீசு கோர்ட், குளம்னு எதாவது பேசுனே உன் சில்லி மூக்கு தெறிச்சிடும்.

ஒரு விஷயத்தை நல்லா தெரிஞ்சுக்க. இந்த ஊருக்குள்ள இதுநாள்வரைல காக்கிச்சட்டை போட்டு

போலீஸ்னு சொல்லிக்கிட்டு ஒரு பய வந்தது கிடை யாது. போலீசுக்கும், கோர்ட்டுக்கும் வேலை இல்லாப் படி ஊர் கட்டுமானமா இருக்கணும்கறதுதான் எங்க பாண்டியரு விருப்பம்..."

"அப்படியா... இப்படிக் கூடவா ஒரு ஊரு இருக்கும்?"

"எப்படி எப்படியோல்லாம் ஊருங்க இருக்கு துய்யா, இப்படி மான ரோஷத்தோட கட்டுக்கோப்பா இருக்கறது தானா ஒரு குத்தம்?"

விட்டால் அந்த நபர் அடிக்க வருவார் போலக் கூடத் தெரிந்தது. அவன் அதற்குமேல் அவரிடம் வாயைக் கிண்டவில்லை.

பஞ்சாயத்துக் கூட்டமும் கலைந்து போகத் தொடங்கியது. அதில் தங்கமுத்துப் பாண்டியரோடு வந்திருந்த சொர்ணமும் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றாள்.

அங்கு தென்பட்ட பெண்களிலேயே அவள் ஒருத்தி தான் தலையை அழுந்த வாரிப் பின்னி அதில் பூவெல்லாம் வைத்திருந்தாள். பாவாடை தாவணி யிலும் நல்ல பவிசு. ஆனால் மற்ற பெண்டுகள் அள்ளி முடிந்த கொண்டையும் கொசுவக் கட்டுமாகத்தான் தெரிந்தார்கள்.

அந்தச் சூழலில் ஒரு சன்னமான மின்னலாகத் தெரிந்த சொர்ணத்தை அவன்கூட விழுங்கிவிடுகிற மாதிரிதான் பார்த்தான்.

பார்க்கத் தூண்டுவதுதானே கன்னிமை. அதிலும் ஒச்சமில்லாத பளிச்சென்ற செழிப்பான கன்னிமை கண்களையே கிள்ளக்கூடியவை. சொர்ணமும் அவன் வரையில் கிள்ளினாள்.

"ஓய் அப்பு... வெள்ளியூரா?" காதோரமாய் ஒரு குரல் கேட்டது. அவனும் திரும்பினான். ஒரு கூரான

ஈடக்குக்காரன் பொட்டுப் பொட்டு வியர்வை முகத்துடன் அவனையே பார்த்தபடி நெருங்கி வந்தான்.

"வெளியூரான்னு கேட்டேன்ல...?"

"ஆமா..."

"அதான் எங்க பாளையத்தார் பொண்ணை அம்புட்ட தைரியமா பாக்கறே..."

"அது பாளையத்தார் பொண்ணா?"

"இல்லையா பின்னே.. ஓடிப்போயிடு. இப்படியே பாத்துகிட்டு இருந்தே கண்ணாமுழியைத் தோண்டி பல்லாங்குழி சோழிங்களோடச் சேர்த்து ஒரு ஆட்டம் ஆடிப்புடுவேன், ஆமாம்..."

"என்னைய்யா இது... சாதாரணமா பார்த்தேன். அது ஒரு குத்தமா?"

"இந்த ஊர்ல பொட்டச்சிங்களைப் பார்த்தா அது குத்தம்தான்... கொஞ்சம் முந்தி ஒருத்தனுக்குச் சொன்ன தீர்ப்ப கேட்டில்ல..."

"........"

"என்ன பேச்சேக் காணோம்? ஞாபகம் இருக்கட்டும்...."

அவன் ஒரு விரட்டு விரட்டிவிட்டு நகர்ந்து கொள்ள அந்தப் புதியவனுக்குள் ஒரே ஆச்சரியம்!

மேகப்பொதிகளால் மூடிப்போயிருந்தது அந்த மலைத்தொடர். காற்றும் ஈரப்போர்வைக் கணக்காக பனியும் மழையும் கூடி கனத்தபடி வீசிக் கொண்டிருந்தது. திகிடுதிப்பாகத் தழைத்துக் கிடந்தன மலைத் தாவரங்கள். அவற்றில் ஆவாரையும், மஞ்சக்கண்ணியும், பிரண்டையும், பிச்சிச் செடியும்தான் பெயருள்ளவை. மற்ற தாவரங்களுக்கு என்ன பெயர் என்று யாரிடமாவது கேட்டால் தான் தெரியும் போலிருந்தது.

ஊடே ஊடே பாறை மண்டைகளும், அதன் மேல் மஞ்சள் தலை ஓணான்களும் தங்கள் வால்களை 'விசுக், விசுக்'கென்று ஆட்டிக்கொண்டிருந்தன. சில இடங்களில் சாம்பல் நிறத்தில் முயல்கள் இருந்து தங்கள் வயலட் விழிகளால் அவைகள் வெறித்தவிதம் அந்த மலைத் தலத்தில் ஒரு கோலைப் பற்றிக்கொண்டு மேலேறியபடி இருக்கும் அவனுக்கு ரசனைக்குரிய தாகவே இருந்தது. எங்கே அவன் தன்னைப் பிடித்து விடுவானோ என்கிற பயத்தில் ஒரு பந்துபோல் அவை கள் எம்பிக் குதித்ததில் அந்த மலைத் தாவரங்களிடம் ஒருவித உதறல். அதனால் பனித் துளிகளில் சிதறல்.

அவன் ஒரு பெரிய யானை முதுகு போன்ற பாறை மேல் ஏறி நின்றான். பிறகு வாயருகே தன் வலக்கையைக் கொண்டு ஒரு பக்கவாட்டு அடைப்பைக் கொடுத்து 'ஓஹோய்ய்ய்...' என்று குரல் எழுப்பினான். அந்தச் சப்தம் மலை முழுக்க எதிரொலித்துவிட்டு அவனுக்கே திரும்பவும் வந்து சேர்ந்தது. சற்றைக் கெல்லாம் அந்த் மலையின் இன்னொரு மூலையில் இருந்து அவன் ஒலித்தது போலவே ஒரு குரல். அவன் உடனேயே அந்தப் பாறையில் இருந்து நகர்ந்து தொடர்ந்து மேலே ஏற ஆரம்பித்தான். அந்த மலைச் சரிவில் தனக்குமட்டும்தான் பாதை தெரியும் என்பது மாதிரி இருந்தது அவனது வேகமான நடை. சரிவு களில் அடப்பமாக வளர்ந்து கிடக்கும் சில மரங்களில் தேன் அடை பிடித்திருந்தது. சில உள்ளான் பறவை கள் உதிர்ந்துவிடுவது போன்ற வால்பாகச் சிறகு களுடன் கிளை நுனிகளில் அமர்ந்துகொண்டு அவன் கடக்கும்போது 'க்கர்ரொய்ய்க்' என்கிற சப்தமும் ஒரு கூட்டமாய் வானில் எழும்பிவிட்டுத் திரும்ப அதே மரக்கிளைகளில் தஞ்சம் புகுந்துகொண்டன.

அவன் நிறைய தமிழ் சினிமா பார்த்திருக்கிறான். அதில் சில புராணப்படங்களில் தலையே தெரியாத

படி ஒரே புகைப்பொதியாய் இருக்கும். தேவர்கள் எல்லாம் அப்படித்தான் இருக்க முடியும் என்கிற கற்பனைக் காட்சி அது. ஆனால் அவனுக்கு அந்த மலைச்சரிவில் மேகப் பொதிகளை நிஜமாலுமே விலக்கிக்கொண்டு நடக்கும்போது அந்த சினிமா ஞாபகம்தான் வந்தது.

நடுநடுவே திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண் டான். அவன் முகத்தில் எச்சரிக்கை ரேகைகள் ஏராள மாகப் படிந்திருந்தன. ஒரு இடத்தில் அவன் முன் ஒரு பெரும் கயிற்று நுனி வந்து கொத்தென்று விழுந்தது. பக்கவாட்டில் ஒரு வளர்ந்த பாறைச்சரிவு. அவன் அந்தக் கயிற்றைப் பற்றிக்கொள்ளவும் அந்தப் பாறைச் சரிவில் அவன் உடல் சர்ரென்று யாராலோ மேலே இழுக்கப்பட்டது. கிட்டத்தட்ட ஒரு முழுப்பனை உயரத்திற்கு இழுக்கப்பட்டான்.

அதன்பின் மேலே தளம். தளத்தில் அவனை எதிர் நோக்கியபடி சிலர். அவர்கள் பெருமூச்சு மார்பில் கபடி விளையாட அவனைப் பார்த்தனர். ஒருவன் மார்பு பொங்கி மடங்கிய உப்புவயல் போல மடிந்து மடிந்து மேலேறி பூரி போல புடைத்திருந்தது. கழுத் தருகே மட்டும் ஒரு மரவட்டை படுத்திருக்கிற மாதிரி தழும்பு.

இன்னொருவன் தன் தோள்மேல் ஒரு உடும்பை அமர வைத்துத் தன் கரத்தால் அதன் முதுகை வருடி விட்டுக் கொண்டிருந்தான். இன்னொருவன் கையிலோ நல்ல வளர்ந்த நாட்டு நாய். நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு 'ஹ... ஹ... ஹ...' என்று அது இளைக்க இளைக்க ஆனால் ஸ்னேகத்துடன் கயிற்றைப் பிடித்துக்கொண்டு ஏறியவனைப் பார்த்தது.

"என்னலே... போன சோலி வெல்லம்தானே?"

"வெல்லம் மட்டுமல்லே... கட்டிவெல்லம், லட்டுப் புதையலு..."

"அப்ப நமக்கெல்லாம் வேட்டைதான்னு சொல்லு காளியப்பா..."

அந்த நாய் பிடித்திருப்பவன் காளியப்பா என்று கூப்பிட்ட பிறகே அவன் பெயர் தெரிய வந்தது.

"ஆமா வீரண்ணா. தேவர்கோயில் பத்தி கேள்விப் பட்டிருக்கியா நீ?"

"நல்லாத் தெரியுமே.... அந்தக் கால பாளையத் தான் ஊராச்சுதே அது..."

"தெளிவாச் சொன்னே... அந்தப் பாளையத் தாரையே பார்த்தேன். ஆமா எங்க தல?"

"காலைல கள்ளக் குடிச்சுப்புட்டு கட்டில்ல சாஞ்ச ஆளுதான். கொறட்டை புரட்டி எடுக்குது பார்..." வீரண்ணன் என்பவன் சொல்ல, அந்த மறைவான மலைப் பாறை மேல்தளத்தில் ஒரு ராட்சச மலை வேம்பு மர நிழலில் 'டுர்புர்' என்று ஒரே குறட்டை சப்தம்.

காளியப்பன் சகாக்களுடன் அருகே போய் நின்றான். நாயை இழுத்துப் பிடித்தபடி இருந்தவன் பிடியை விடவும் அது ஒரே ஓட்டமாக ஓடி கட்டிலில் ஏறி குறட்டை விட்டுக்கொண்டிருந்தவன் கழுத்து, கன்னமருகே 'ஹங்க்... ஹங்க்' என்று இளைத்தபடி கிச்சு கிச்சு மூட்டி விளையாடத் தொடங்கியது.

அதற்குமேல் குறட்டை சப்தமும் எடுபடவில்லை. விசுக்கென்று வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தான் - அவர்களால் தலை என்று வர்ணிக்கப்பட்ட தேவ மாயன்.

"மாயா...."

"வந்துட்டியா, காளியப்பா..."

"இப்பத்தான் வாரேன். சக்கையா ஒரு இடம் மாட்டியிருக்கு..."

"விவரமா சொல்லு..."

"தேவர்கோயில் பாளையத்தார் தங்கமுத்துப் பாண்டியர் வீடு..."

"பாளையத்தான்னா ஒரு படையேல்ல இருக்கும்."

"இருக்குதான்... கூடவே ஒரு ஆச்சரியமான சங்கதியும் உண்டு."

"என்ன?"

"தேவர் கோயிலுக்குள்ளார போலீஸே வராதாம்."

காளியப்பன் என்பவன் பதில் தேவமாயனைக் கூர்மையாக்கியது.

"இதுநா வரைல ஒரு போலீஸ்காரன் கால்கூட அந்த மண்ணுல பட்டதில்லையாம்!"

"எதனால அப்படி?"

"பாளையத்தாருக்கு தனக்கு மிஞ்சி ஊருக்குள்ள யாரும் இருக்கக்கூடாதுங்கற நினைப்புதான். வேற என்ன?"

"இப்ப எங்க இருக்கு பாளையமும் பதவியும்?"

"ஆனாலும் அந்த நினைப்பு தங்கமுத்துப் பாண்டியரை விட்டுப் போகலை. ஊரும் அவர் கிழிச்ச கோட்டுக்கு உள்ளதான் நிக்குது. நேத்துகூட ஒரு பஞ்சாயத்து. கட்னவ கல்லுமாதிரி இருக்கும் போது வைப்பாட்டி ஊடே கதின்னு இருந்துருக்கான் ஒருத்தன். கட்னவ பொறுக்க முடியாம தீயில பாஞ்சுட்டா. அப்பன்காரன் பஞ்சாயத்தக் கூட்டி நியாயம் கேட்டான். அந்த வைப்பாட்டிக்காரனைக் காய

டிக்கச் சொல்லிட்டார் தங்கமுத்துப் பாண்டியரு!"

காளியப்பன் சொன்னதுதான் தாமதம். விசுக் கென்று தொண்டையில் மீன்முள் ஏறிய மாதிரி ஆகி காளியப்பனை வெறித்தனர் அவனது சகாக்கள்.

தேவமாயன் மட்டும் கட்டிலில்... அந்த நாய்க்கும் காளியப்பன் சொன்னது புரிந்ததோ என்னவோ அதுகூட இளைப்பதை விட்டுவிட்டு வெறிப்புடன் பார்த்தது.

"மாயா... பாளையத்தானை விடக்கூடாது. தன்னை அந்த ஆள் ஒரு சக்கரவர்த்தியாட்டம் நினைச்சுக்கிட்டு திரியறான் போல இருக்குது..."

ஒருவன் எடுத்துக் கொடுத்தான். தேவமாய னிடம் ஒருவித மௌனம்.

"காளியப்பா... போலீசு வராதுன்னு சொன்னியே. அது எப்படி? ஒரு நல்லது கெட்டதுன்னா அவுக வரத்தானே செய்வாக..."

"வாஸ்தவம்தான். ஆனா போலீஸா வரக்கூடா தாம். உடுப்பைக் கழட்டிட்டுதான் வரணுமாம்..."

"இதைப் போலீஸ்கார ராங்கி பிடிச்சவங்க கேப்பாங்களா..."

"ஊரே ஒண்ணுமண்ணா நிக்கும்போது கேட்டுத் தானே தீரணும்..."

"அப்ப நாம போய் தேட்டையைப் போட்டா ஒரு பயலும் போலீசுக்குப் போகமாட்டானுங்களா?"

"அதை ஒரு வட்டம் தேட்டையைப் போட்டுப் பார்த்துத்தான் முடிவு பண்ணணும்..."

"அப்ப இன்னிக்கே அங்க போறோம். ஒரு வீட்ல கையை வைக்கறோம். அவன் என்ன செய்ய றான்னு பார்ப்போம்..."

"மாயா... அந்த வீட்டுக்காரன் போலீசுக்குப் போனா நமக்கென்ன... போகாட்டிதான் நமக் கென்ன? கன்னம் வைக்கறதும் களவு ஆட்றதும் நம்ம வரைல தொழிலப்பா. அதுவரை சுத்தமா நாம இருந்துட்டுப் போவோம்."

"அப்படியில்ல வீரண்ணா... சின்னச்சின்ன வேட்டையெல்லாம் நமக்கு இனி தோதுப்படாது. பெருசா ஒண்ணு. ஒரு வருஷம் இரண்டு வருஷம் உக்காந்து திங்கணும். அதுதான் வேணும். அப்படிப் பெரிய வேட்டைன்னா அது பாளையத்தார் வீடு தான்..."

"மாளிகைன்னு சொல்லு... முந்நூறு ஏக்கர் நிலம், எப்பவும் ஆயிரம் மூட்டை நெல் ஸ்டாக்குல இருக்குது. போதாக்குறைக்கு அம்பது அறுபது மாடுங்க, நாலு குதிரை, இரண்டு டிராக்டரு, இரண்டு காருன்னு பாண்டியர் பலமாத்தான் இருக்காரு. ஊருக்குள்ள முக்காவாசிப்பேர் அவர் தோட்டத்துல கூலிக்கு மாரடிக்கறவங்கதானே?"

"அப்ப ஒண்ணு பண்ணுவோம்..."

"என்ன மாயா?"

"எங்கடா... எல்லாரும் இருக்கீங்கல்ல..."

"இருக்கோம்ல... எண்ணி வேணா பார்த்துக்க. உன்னியச் சேத்தா ஒம்பது பேராச்சு..."

"நாமதாண்டா உண்மையான நவக்கிரகம். காசும் பணமும் உள்ள ஒரு கிரகத்தை நாம போய் பிடிச்சா அப்பால அந்தக் கிரகத்துல இருக்கறவன் நிமிரவே கூடாது..."

"இப்ப என்ன பண்ணப்போறோம்? திட்டத்தைச் சொல்லு."

வீரண்ணன் கேட்க, தேவமாயனும் அவர்களைக் கூட்டி முகத்தருகே குனியவைத்து அந்த விஷயத்தை

ஒரு ரகசியம் போலச் சொல்லி முடித்தான்.

அடுத்த நொடி, "மாயா... என்ன இது? என்னிக்கு நாம ஏழைபாழை சொத்துல கைய வைச்சுருக்கோம்..." என்று ஷாக்கடித்த மாதிரி கேட்டான் அந்த ஒன்பது பேரில் ஒருவனான மூக்கன் என்பவன்.

"நான் சொன்னா அதுல ஒரு அர்த்தம் இருக்கும்ல?" மாயன் தொனியே ஒரு மாதிரி இருந்தது. அவர்களும் மௌனமாக அங்கீகரித்தனர்.

"அப்ப மூடிக்கிட்டு சொன்னதைச் செய்யுங்க. விசயம் மட்டும் நாம கன்னம் வைக்கறதுக்கு முந்தியே பாளையத்தார் தங்கமுத்துப் பாண்டியருக்குத் தெரிஞ்சாகணும். அது ஞாபகம் இருக்கட்டும்."

"வழக்கம்போல கட்டாரில பேப்பரைச் சுத்தி எறிஞ்சுட்டேன்" என்றான் கிடாரி என்பவன்.

"அப்ப புறப்படுங்க. ரெண்டே பேர் போதும். கிடாரி, மூக்கன் நீங்க போங்க..."

"உத்தரவு தலை..." அவர்கள் புறப்பட்டனர். மலைக் குளிரின் எதிரொலியாக உடம்பை ஒருமுறை உதறிவிட்டுக் கொண்டனர்.

தங்கமுத்துப் பாண்டியரின் அந்த மாளிகை வீட்டுமுன் குடை விரித்த ஒழுங்கில் வாதா மரம். அதன் கிளைகளில் ஒரு வறட்டு அணில் காதைத் துருவுகிற தினுசில் கத்திக் கொண்டேயிருந்தது.

கீழ்ப்பாக்கத்தில் நாற்காலி போட்டு அமர்ந்திருக்கும் நிலையில் அன்றைய தினமணி பேப்பரைப் புரட்டிக் கொண்டிருந்தாள் சொர்ணம்.

'ஸ்ஸ்ருட்...!' அவள் காதோரமாய் ஒரு சப்தம் கேட்டுத் திரும்பினாள். வாதா மரத்து அடித்தண்டில் கட்டாரி ஒன்று பறந்து வந்து தைத்திருந்தது.

சுற்றுமுற்றும் பார்த்தார்.

யார் என்று தெரியாத தவிப்போடு கட்டாரி அருகே சென்றாள். அதன் கைப்பிடி பாகத்தில் ஒரு காகிதம் சுருட்டப்பட்டிருந்தது. அதை எடுத்து விரித்தாள். செய்தி அவள் கண்ணில் திகைப்பை உருவாக்கியது.

# 4

'மாயனோட கட்டாரி...
அதை மதிக்காட்டா ஒப்பாரி!
காயம்பட்ட தழும்பாட்டம்
கடைசிவரை
நிலைச்சிருக்கும்!'

கட்டாரியில் இருந்த செய்தி சொர்ணத்தை ஒரு அமட்டு அமட்டியது. நின்ற இடத்தில் இருந்தபடியே 'அண்ணே' என்றாள் ஓங்கலான குரலில்...

தங்கமுத்துப் பாண்டியரும் என்னவோ ஏதோ என்று ஓடித்தான் வந்தார். கையில் கட்டாரியுடன் முகத்தில் கலக்கமுடன் நிற்பவளையும் பார்த்தார். அவள் போட்ட சப்தத்தில் பண்ணையாட்களில் இருந்து வெளியே சாலையில் நெல் மூட்டைகளோடு வண்டி ஓட்டிக் கொண்டிருந்த வண்டிக்கார கரியன் வரை எல்லோருமே என்னவோ ஏதோ என்று ஓடி வந்து விட்டிருந்தனர்.

தங்கமுத்துப் பாண்டியர் எதிரில் செய்தியை நீட்டிக் காட்டினாள் சொர்ணம்.

'பிரசிடெண்ட் தங்கமுத்துப் பாண்டிக்கு... தேவர் கோயில்ல பத்து பசுவைக் களவாட தீர்மானம் பண்ணி இந்தத் தகவல். விரலை சொடக்கிக்க! இருபத்துநாலு மணிநேரம்தான் அவகாசம்... முடிஞ்சா தடுத்து பசுக்கள மீட்டுக்க... தடுத்துட்டா நாங்க

களவாட்ன செல்வம் அம்புட்டும் பஞ்சாயத்து போர்டு ஆபீஸ் வாசல்ல கிடக்கும். தேவர்கோயில் பக்கமும் தலைவெச்சே படுக்க மாட்டோம்.

இப்படிக்கு

'தேவமாயன்'

செய்தியைப் படித்த பத்தாவது நிமிடம் தங்க முத்துப் பாண்டியர் அந்தா இந்தா என்று ஊரைக் கூட்டிவிட்டார். சொர்ணமும் உடன் இருந்தாள்.

"ஆருவே இந்த தேவமாயன்... கள்ளத்தனம் பண்ற பயலுக இன்னுமா இருக்கானுங்க? அதெல்லாம் ஒரு காலம்... அப்பத்தான் அணைக்கட்டு கிடையாது, மின்சாரம் கிடையாது, பெருசா விஸ்தாரமா விவசாயம் கிடையாது...

கொட்ட அரிசில சோத்த தின்னுபுட்டு கெட்ட காத்தா விட்டுகிட்டு திரிஞ்சோம்.

மிட்டா மிராசு ஏழை பாழைன்னு ஏகத்துக்கும் ஏத்த இறக்கம்.

ஆகையால களவாட்னாதான் பொழப்புன்னு ஒரு நிலைப்பாடு இருந்திச்சு.

இப்ப என்ன அதுவா நிலை..?

எந்திரத் துப்பாக்கி, லென்ஸ் வெச்ச துப்பாக்கி, ரைஃபிள், ரிவால்வார், அது இதுன்னு எம்புட்டோ கண்டுபிடிச்சு அதை எல்லாம் கம்பயூட்டர்லையும் கொண்டுகிட்டு போய் பதிவே பண்ணி வெச்சிருக்கற தால்லாம் கேள்விப்பட்றேன்.

இப்படி ஒரு காலத்துலையும் கன்னம் வைக்கற ஒரு கூட்டம் - அதுலையும் துணிச்சலா முன்னால தகவலனுப்பி சவாலும் விட்றான்னா என்னலே அர்த்தம்?

யாரு இந்த தேவமாயன்?

நெசமா இவன் களவாணிக் கள்ளனா இல்லை பவனாவது தீவிரவாதியா... மிரட்டிப் பாக்கறானு களா?"

தங்கமுத்துப் பாண்டியர் ஊர்க்காரர்கள் முன் னால் உறுமினார்.

பதிலுக்கு ஒருவன் எழுந்திருந்தான். பணிவாக துண்டை இடுப்பில் கட்டிக்கொண்டு பேச வாயெடுத் தான்.

"பிரசிடென்ட்டய்யா... நா ஒண்ணு சொல்ல லாங்களா?"

"தாராளமா சொல்லு... பொறவு எதுக்கு நான் ஊரைக் கூட்டியிருக்கேன்?"

"இந்த தேவமாயன் பத்தி எனக்குக் கொஞ்சம் தெரியும்."

"என்ன தெரியும்?"

"இவன் கன்னக்கோல் போட்ற வம்சாவளில மிச்சமா இருக்கறவன். ரொம்பத் தெளிவானவன்."

"அதை எதை வெச்சு நீ சொல்றே?"

"நானு ஆடு மாடு விக்க சுத்துப்பட்டு சந்தைக் கெல்லாம் போய்வர்ற கேதாரிங்க. எனக்குத் தெரி யாததுங்களா...?"

"சரி முடிவா என்ன சொல்றே?"

"தேவமாயன் சொன்னா சொன்னதுதான். தலகீழா நின்னாலும் பத்து மாடு களவு போறத நாம தடுக்க முடியாதுங்க..."

"அது எப்படி... அவங்கவங்க, அவங்கவங்க மாடு கன்னுகளை கண்ணு முழிச்சிருந்து பாத்துகிட்டா பிரச்சினை தீர்ந்துச்சு. அவனால என்ன பண்ண முடியும்?" - கூட்டத்தில் ஒருவன் எழுந்திருந்து கேட்டான்.

மொத்தத்தில் தேவமாயன் மூட்டிய தீ பற்றிக் கொண்டுவிட்டது.

"எலே கூறு கெட்டவனே... இப்படி தகவல் சொல்லும்போதே நீ முழிச்சுக்குவியா, மாட்டியான்னு அவன் யோசிக்காமலா இருப்பான்.

கன்னம் வைக்கிற பார்ட்டிய என்னான்னு நீ நினைச்சே... பாத்துகிட்டிருக்கும்போதே முழியைத் திருடிக்கிட்டு போயிருவானுங்கப்பா...

"அது எப்படி அப்பு... நாம என்ன அம்புட்டு தூரத்துக்கா இளிச்சவாயனுங்களா இருப்போம்..."

"சரி... நீ இப்பவே போய் உன் மாடு கன்னுக் கெல்லா நல்லா இரும்புச் சங்கிலியா போட்டு பூட்டி வைய்யப்பா. என்னாவுதுன்னு பார்ப்போம்."

"எதுக்கு இம்புட்டு கொழப்பம். ஊரைச் சுத்தி ஆளுங்களை விடிய விடிய காவலுக்கு நிறுத்தி வைப் போம். எவன் எங்கிட்டு இருந்து வர்றான்னுதான் பாப்பமே..."

"அது சரி... ஒரு கள்ளப் பார்ட்டிக்கு பயந்து கிட்டு ஊரே காவல் இருக்கவா. வெக்கமா இல்லை. நான் இப்ப ஒரு விசயத்தைச் சொல்றேன். நல்லா கேட்டுக்குங்க."

ஒருவர் கம்பீரமாகக் கூட்டத்தைத் தன் பக்கம் திருப்பினார். அவர் பெயர் ராமர்.

"என்ன ராமரே... நீர் என்னத்த அளக்கப் போவுறீர்?"

"அளக்கல அப்பு, அம்புட்டும் சத்யமான வார்த்தைங்க..."

"சரி... என்ன அது சொல்லும்?"

"தேவமாயன் ஒரு போலீஸ் தேட்ற கள்ளன். அவன் தலைக்கு லட்ச ரூவா பரிசு வெச்சு போலீசு

அறிவிப்பு வெச்சே பல வருஷமாச்சு! அவனும் அதுக் கப்புறம் அப்படியே அடங்கி பச்சைக் கூமாச்சி மலையே கதின்னு தங்கிட்டான். இப்ப எல்லாத்தையும் எல்லாரும் மறந்துருப்பாங்கன்னு நினைச்சுதான் திரும்ப கன்னக்கோல் வைக்க தயாராவுறான்.

இப்ப இந்த மாடுங்கள பிடிக்க வந்துருக்கறது கூட ஒரு முன்னோட்டம்தான். அதுலையும் நம்ம தேவர்கோயிலக் குறிவெச்சு அவன் வர்றதுக்கு இன்னொரு காரணமும் இருக்கு...?"

"என்ன அது?"

"நாம எது வந்தாலும் போலீசுக்குப் போவ மாட்டோம்ன்ற தெகிரியம்தான், வேற என்ன?"

அவர் சொல்லி முடிக்க தங்கமுத்துப் பாண்டியர் மிளகாயைக் கடித்தமாதிரி விதிர்ப்புடன் பார்க்க மிகச் சரியாக இருந்தது.

"அப்ப போலீசுக்குப் போவோம்னு தெரிஞ்சா வரமாட்டானா?"

"சத்யமா வரமாட்டான். தேவமாயன் ஓலை விஷயத்த போலீசுக்கு போய் சொல்லவே வேணாம். காத்துவாக்குல போனாலே போதும் அவங்க வந்துருவாங்க.

நம்ம பிரசிடென்ட்டய்யா சொன்னமாதிரி எந்திரத் துப்பாக்கி, கண்ணீர்ப் பொக குண்டு, தண்ணிப் பீச்சற வண்டின்னு நம்ம போலீசுங்க இப்ப எங்கையோ போய்ட்டாங்க.

நாம இங்க உக்காந்து மண்டையப் பிச்சுக்கவே வேணாம். போலீஸ்கிட்ட விஷயத்த விட்றுவோம்."

ராமர் என்கிற அந்த மனிதரின் பேச்சைத் தொடர்ந்து தங்கமுத்துப் பாண்டியரிடம் ஒரே குமுறல்.

"எலே நமக்கெல்லாம் வீரமில்லையாடா? உன் மூக்குக்குக் கீழ முளைச்சிருக்கிறது முடியா இல்ல

புல்லாடா..? நம்மால அவனுங்கள மடக்கிப் பிடிக்க முடியாது...?

இதுக்கு எதுக்குடா போலீசு?

முதல்ல களவாணிய பிடிக்கறேன்னுதான் அவனுகளும் வருவானுங்க. பொறவு அவனுகளே களவாணிங்களா மாறி மாமூல் கேப்பானுங்க. கொடுப்பியா நீ?"

"பிரசிடெண்ட்டய்யா... நான் சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதீங்க... இதைவிட ஒரு வெட்டிப் பேச்சு நீங்க பேசமுடியாது. நான் தெரியாமதான் கேக்கறேன். போலீஸ் ஊருக்குள்ள வந்தா என்னய்யா? அவுகளும் மனுசங்க தானே?"

ராமரே அப்படித் திருப்பிக் கேட்பார் என்று தங்கமுத்துப் பாண்டியர் எதிர்பார்க்கவில்லை. முக மும் இருளத் தொடங்கிவிட்டது.

"அது அப்படி இல்ல ராமரே... இந்த ஊர் வரைல போலீசு, ராணுவம் எல்லாம் நம்ம பிரசிடென்ட்டு தான். அவரை நம்பாம அந்த அதிகாரிங்கள நம்பறது அவ்வளவு நல்லதில்லப்பா" என்றார் இன்னொருத்தர்.

"அண்ணன் சொல்றதுதான் சரி. நம்ம வரைல போலீசு, ராணுவம் எல்லாம் நம்ம பாண்டியருதான். வெட்டிப் பேச்சு பேசாம அவர் சொன்னதைக் கேட் போம்."

கடைசி கடைசியாக போலீசுக்கெல்லாம் போவ தில்லை என்றே தீர்மானிக்கப்பட்டது. இதை மாறு வேடத்தில் அங்கே இருந்த கிடாரியும், மூக்கனும் கேட்டு ஒருவரைப் பார்த்து ஒருவர் சிரித்துக் கொண்டனர்.

அவர்களை ஊர்க்காரர்கள் சிலரும் கவனித்துக் கொண்டிருந்ததுதான் ஆச்சரியம். அவ்வளவு ஏன்?

தங்கமுத்துப் பாண்டியரே அவர்களைக் கவனித்தவ ராக தன் சகாக்களுக்கு சைகை தர அவர்கள் இரு வரையும் சட்டென்று சூழ்ந்து கொண்டனர்.

கிடாரியும், மூக்கனும் விக்கித்துப் போய்விட்ட னர். அவர்கள் வாழ்நாளில் அவர்கள் களவுக்குப் போனபோதே அகப்பட்டதில்லை. ஆனால் உளவுக்கு வந்து மாட்டிக் கொண்டது அவர்களைக்கூட வதைத் தது.

இருவரையும் வாதாமரத்தில் இறுகக் கட்டிப் போட்டு விட்டு கையில் சவுக்குடன் வந்து நின்றான், தங்கமுத்துப் பாண்டியரின் ‘வலதுகை’ என்னும்படி யான வஜ்ரவேலு.

தங்கமுத்துப் பாண்டியர் வஜ்ரவேலுவை ஒதுக்கிவிட்டு முன் சென்றார். அவர்களிடம் பேசத் தொடங்கினார்.

“உங்களை அடிக்கறதால எங்களுக்கு ஆகப் போறது எதுவுமில்ல... இப்பவும் சொல்லுறேன்... உங்களை போலீசுல பிடிச்சுக் கொடுத்தும், இங்கேயே கண்ட துண்டமா வெட்டியும் என்னவேணா என்னால பண்ண முடியும். ஆனா எப்ப உங்க தலைவனான தேவமாயன் கட்டாரி மூலமா சவால் விட்டுட்டானோ அப்ப அதுல ஒண்ணு அவன் ஜெயிக்கணும், இல்லை அவனை நான் ஜெயிக்கணும்.

ஆகையால இருபத்துநாலு மணி நேரத்துக்கு உங்க மேல எங்க ஆளுங்களோட சுண்டுவிரல்கூட படாது.

உங்கள்ள ஒருத்தனை அவிழ்த்து விட்றேன். போய் தேவமாயன்கிட்டச் சொல்லுங்க. தப்பித் தவறி களவாட வந்தா இங்க இருக்கறவனை என்ன வேணா நாங்க பண்ணவேண்டி வரும்னு...”

சொல்லிக்கொண்டே அவர்கள் இருவரையும் அவிழ்த்துவிட்டார். இருவரும் ‘நீ போ... இல்ல நீ

போ' என்று தங்களுக்குள் பேசி ஒரு முடிவுக்கு வர முடியாமல் திண்டாட, இறுதியில் தங்கமுத்துப் பாண்டியரே அவர்களில் மூக்கனை அவிழ்த்து தேவ மாயனுக்கு பதில் செய்தி கொடுத்து அனுப்பினார். மூக்கனும் அவரைக் கட்டிக்கொண்டு அழுதுவிட்டு தேவமாயனுக்கு செய்தி சொல்ல ஓடினான். குறிப்பாக தன்னை யாராவது எந்த வகையில் தொடர்ந்தாலும் அது அவர்களுக்குப் பேராபத்தாகிவிடும் என்கிற எச்சரிக்கையோடு.

மறுநாள். அவனே திரும்பியும் வந்தான். அவன் முகத்தில் ஒருவித மந்தகாசப் புன்னகை. வாதாமரத் தில் கிடாரியிடம் மட்டும் தலை தொங்கிப் போயிருந் தது. ஆனால் அதெல்லாம் அவனிடம் துளியும் பாதிப்பை ஏற்படுத்தவேயில்லை. நேராக தங்கமுத்துப் பாண்டியர் முன் போய் நின்றான்.

"என்னவே... என்ன சொல்றான் உன் தலைவன்?"

"அவர் வெச்சா வெச்சதுதானாம். முன்வெச்ச காலைப் பின்னால வைக்கமாட்டாராம்."

மூக்கனின் பதில் தங்கமுத்துப் பாண்டியரைக் கீறியது.

"அப்படின்னா... அவன் களவாடப் போறது உறுதியா?"

"களவாடப் போறது இல்ல... களவாடுனது உறுதி..."

"என்னலே சொல்றே... விடிய விடிய முழிச்சுகிட் டிருக்கோம். ஒரு மாடுகூட இங்க களவு போகலை. தெரியும்ல..."

"அப்படியா?"

"என்ன அப்படியா... நீயே எண்ணிப் பார்த்துக்க எங்க ஊர் மாடுங்களை..."

"அப்ப நீங்க முழு கவனமா இருந்தது மாடுங்க மேல மட்டும்தானா?"

"என்னலே குரல் ஒருமாதிரி மாறுது. பத்து பசு களவு போகும்னுதானே உன் தலைவன் சேதி சொல்லியிருந்தான்..."

"உண்மைதான். ஆனா இங்க பசுன்னா மாடுன்னு யார் உங்களை அர்த்தம் பண்ணிக்கச் சொன்னது?"

அவன் கேள்வியில் பொளேரென்று ஒரு அறை தன் கன்னத்தில் விழுந்தமாதிரி இருந்தது தங்கமுத்துப் பாண்டியருக்கு...

"அப்ப பசுன்னா வேற என்ன?"

"சொல்றேன்... சொன்ன வேகத்துல நாங்க களவாடுன அது..."

தங்கமுத்துப் பாண்டியர் எதிரில் அந்தக் கள்ளன் மூக்கன் தன் உள்ளங்கையைத் திறந்தான். அதில்...?

# 5

'கண்ணன் கூட கள்ளன்தான், அவன்
வண்ணம்கூட கறுப்புதான், ஆனாலும்
மண்ணுல அவன் சாமி, தேவ
மாயன் கூட அப்படித்தான்
ஏழைக்கெல்லாம் இவன் சாமி'

மூக்கன் நீட்டிய கையில் பத்து பவுனுக்குக் குறையாத தங்கச் சங்கிலி! சங்கிலியைப் பார்த்த தங்கமுத்துப் பாண்டியருக்கு கண்களில் தீப்பிடித்தாற் போல் இருந்தது.

"இது உங்க ஆளுங்ககிட்ட அடிச்சதுதான்... எங்க களவாணிக பாஷைல நாங்க தங்கத்தையும் பசுன்னு சொல்வோம். அந்தக் காலத்துல தமிழ்ல பாட்டு எழுதற தாடி வெச்ச புலவருங்கெல்லாம் கூட தங்கத்துக்கு இன்னொரு பேரா பசுவை சொல்லுவாங்களாம்."

மூக்கனின் விளக்கம் கேட்ட நொடி தங்க முத்துப் பாண்டியருக்கு விளங்கிவிட்டது. தேவமாயன் அவன் போட்ட சபதத்தை சாதுர்யமாக நிறைவேற்றி விட்டான்.

ஒரு கள்ளன் கவித்துவமாகக் கூட ஏமாற்று வான் என்பதெல்லாம் பாண்டியர் வரையில் நினைத்துப் பார்க்க முடியாத ஒரு அதிசயமாகத்தான் இருந்தது.

மூக்கன் இப்பொழுது என்ன செய்யப்போகி றீர்கள் என்கிறமாதிரி பார்த்தான். தங்கமுத்துப் பாண்டியர் தன் சகாக்களை ஒரு பார்வை பார்த்தார்... அப்படியே பார்வை சொர்ணத்தின் மேலும் சென்றது.

இந்தச் சங்கிலி அவளுடையதுதான்!

எங்கே எப்பொழுது எப்படி அவள் கழுத்தில் கை வைத்தான் என்பதையே அவரால் யூகிக்க முடிய வில்லை.

நேராக அவளிடம்தான் சென்றார். சங்கிலியைக் காட்டிக் கேட்டார். .

"இது உன் சங்கிலிதானே?"

"ஆமாண்ணே...".

"இது களவு போனதே உனக்குத் தெரியாதோ?"

"தெ... தெரியும்... நேத்து ராத்திரி படுத்து உறங்கைலயே கவனிச்சேன். ஆனா இது இங்கதான் எங்கிட்டாச்சும் தவறியிருக்கும்னு நினைச்சேன். இந்தக் களவாணி கொண்டுகிட்டு போயிருப்பான்னு நான் நினைக்கலை..."

சொர்ணம் திக்கித்திக்கி ஈனசுரத்தில் பேசப் பேச பாண்டியர் முகத்தில் சிவப்பு கூடிக்கொண்டே போனது. அப்படியே திரும்பி மூக்கனிடம் வந்தார். அவன் கையில் திரும்பவும் சங்கிலியை வைத்தார். பிறகு கிடாரியைக் கட்டிப் போட்டிருக்கும் மரத்

தடிக்குச் சென்றார். அவனை அவிழ்த்துவிடத் தொடங்கினார்.

சுற்றி நிற்பவர்கள் முகத்தில் பலவிதமான உணர்ச்சிகள்.

"எலே பயலுகளா... உங்க பேர் என்ன சொன்னே?"

"என் பேர் மூக்கன்..... இவன் கிடாரி..."

"உள்ள பேரைத்தானே சொல்றீங்க. இது எனக் காண்டி சொல்ற கள்ளப் பேர் இல்லியே..."

"நாங்க பொய் பேசமாட்டோம் சாமி..."

"இதை நான் நம்பவா?"

"அதைப்பத்திக் கவலை இல்ல. ஆனா எங்க ளுக்கு சொல்லுதான் உசுரு."

"தருமர் மாதிரி பேசறே. ஆனா பண்றது கள வாணித்தனம்."

"அப்படின்னு நீங்க சொல்றீங்க. எங்க வரைல நாங்க இருக்கறவங்ககிட்ட இருந்து எடுத்துக்கறோம்."

"நீ வக்கீலுக்குப் படிச்சிருக்கலாம். நல்லாவே பேசறே. களவாணித்தனத்துக்கும் எடுத்துக்கறதுக்கும் வித்தியாசம் தெரியாதவன் இல்லை நான்."

"அப்படிப் பார்த்தா நீங்க எல்லாருமே கள வாணிங்கதான். அதை எங்களால நிரூபிக்கவும் முடியும்."

"எப்படி.... எப்படி நீ நிரூபிப்பே? எங்கே நீ நிரூபி பாக்கலாம்! நான் அடுத்தவன்கிட்ட இருந்து ஒரு கையெழுத்து போட்றதுக்குக் கூட ஒரு பேனா கேட் டது கிடையாது. அப்படி ஒரு ஒழுக்கம் உள்ளவன்."

"அதுசரி... உங்க ஒழுக்கமெல்லாம் வாயுள்ள மனுஷங்க கிட்டதானே. ஏன்னா அவுகதானே உங்க ஒழுக்கத்தைப் புகழ்ந்து பேசுவாக..."

"எலே வெண்ணை... புகழ்ச்சிக்காக ஒழுக்கமா யிருக்கறவன் இல்ல இந்த தங்கமுத்துப் பாண்டி! அது என் ரத்தம்!"

"அப்ப நீங்க யார்கிட்டையும் எதையும் கேக்காம எடுத்தது இல்லைன்னு சொல்லுங்க..."

"எங்க வந்து சத்தியம் பண்ணணும்னு சொல்லு பண்றேன்."

"அவசரப்பட வேண்டாம். ஆமா, இதோ இந்த மாமரத்துல காய்ச்சுத் தொங்குதே மாங்காயிங்க. இதை மரத்துகிட்ட கேட்டுகிட்டுதான் பறிக்கிறீங் களா?"

அவன் கேள்வி தங்கமுத்துப் பாண்டியரை ஒரு நண்டு காலைக் கவ்வுவது போலக் கவ்வியது.

இருந்தும் சுதாரிக்கத் தொடங்கினார்.

"எலேய்... மரமும் மனுஷனும் ஒண்ணாலே உனக்கு?"

"இல்லதான்... மரம் மனுஷனைவிட ஒருபடி மேலங்கறது எங்க நினைப்பு. ஏன்னா மனுஷன் ஆசைப்பட்டவனுக்கு தனக்குப் பிடிச்சவனுக்குத்தான் எதையும் கொடுப்பான்... ஆனா மரம் அப்படி இல்ல பாண்டியரே... அது யார் தன் மேல ஏறினாலும் எதுவும் செய்யறதில்ல... ஆகையால மனுசனைவிட நாங்க மரத்த பெருசாதான் நினைக்கறோம்."

மூக்கனின் அடுத்தகட்ட தாக்குதலில் தங்க முத்துப் பாண்டியருக்கு வெலவெலப்பு தட்டிற்று. அடுத்து இவனிடம் எப்படிக் கேட்டாலும் அதற்கு ஒரு சரியான பதிலைச் சொல்லிவிடுவான் என்று தோன்றிற்று.

"எலேய் களவாணி... அப்ப வயல்ல நெல் அறுக் கறவன், தோட்டத்துல காய் பிடுங்கறவன் இவன்லாம்

களவாணியா... உனக்குத்தான் பேசத் தெரியும்னு பேசறியாக்கும் நீ?" - அங்கு இருப்பவர்களில் ஒருவர் பாய்ந்தார்.

"அப்ப அதுக்கு பேர் என்னன்னுதான் சொல்லுங்களேன்..."

"நாங்க உழைச்சு பயிர் பண்ணுனதுடா அது. அதை நாங்க எடுத்துக்கிடாம எவன் எடுப்பான்?"

"அப்படிப் போடுங்க...

மூட்டை மூட்டையா காசு வெச்சிருக்கறவங்களையும் நாங்க அப்படித்தான் நினைக்கறோம். நம்மால வளர்ந்தவங்கதான் காசுள்ளவங்க. ஆகையால் அவங்ககிட்ட களவாட்றது எங்க வரைல திருட்டு கிடையாது."

"அப்ப உழைச்சுப் பொழைக்கிறதுங்கறதே உங்க அகராதி"யில இல்லன்னு சொல்லுங்க..."

"எங்க களவு முறை கலப்பை பிடிச்சு உழவறதை விட கஷ்டமானது சாமி. ஒரு வட்டம் எங்ககூட களவாட வந்து பாருங்க... அப்ப தெரியும். இப்பகூட இருவத்தி நாலு மணி நேரமா எங்காளு ஒருத்தன் மரத்துல கட்டப்பட்டுக் கிடக்கானே... அது எதோட சேர்த்தியாம்?"

மூக்கனின் பதிலில் நல்ல சூரியப் பிரகாசம். எதனாலோ அதை ரசித்த தங்கமுத்துப் பாண்டியர், "சரிலே... நீ களவாண்ட சங்கிலியோட நீ இப்ப திரும்பிப் போ. உனக்கு இது என் பரிசு. அதேசமயம் உன்னோட தலையான அந்த தேவமாயன்கிட்டையும் சொல்லு, இந்த தங்கமுத்துப் பாண்டிக்கும் சொல்லு தான் பெருசுன்னு... புறப்படு..."

அவர்கள் இருவரையும் அங்கிருந்து போகச் சொல்லி மெயின் கேட்டை நோக்கி கையைக் காட்டினார். கூட்டத்தில் ஒருவர் உடனே இடைமறித்தார்.

"பிரசிடென்ட்டய்யா... என்னங்க இது. களவாண்டவன போலீசுல பிடிச்சுக் கொடுக்காம விடுதலை கொடுத்து அனுப்புறீங்க. இவனுகளப் பிடிச்சுக் கொடுத்தா தலைக்குப் பத்தாயிரம்ங்க. அந்த தேவமாயனுக்கு மட்டுமே லட்ச ரூவாங்க."

அப்படிக் கத்தியவரை பதிலுக்கு ஒருமுறை முறைத்த தங்கமுத்துப் பாண்டியர், "பொத்திக்கிட்டு சும்மா இரு. ஒரு கள்ளன் அவன் சொன்னதுல நின்னுட்டான். நான் அவனுக்கும் மேலான மனுஷன். அவனைப்போல பத்து பங்கு நின்னு காட்ட வேண்டாம்?"

அவ்வளவுதான். அதன்பிறகு யாரும் எதுவும் பேசவில்லை.

கூமாச்சி மலையின் தளத்தில் தேவமாயன் பெரிதும் வியப்பில் இருந்தான்.

"ஊர்க்காரவுக பலபேர் போலீசுக்குப் போகச் சொல்லி சளம்பல் பண்ணியும் பாண்டியர் அசரலை. தேவமாயன் ஒரு கள்ளன். அவன் சொல்லுல நிக்கைல நானும் நின்னு காட்டவேணாமான்னுட்டாரு..." என்று மூக்கன் ஒருமாதிரி குரலில் சொல்லச் சொல்ல, இப்படிக்கூடவா ஒரு மனுஷர் இருக்க முடியும் என்பதுபோல அவனுக்குள் ஆச்சரியப் பூவாணம்.

"அப்ப அந்தப் பாளையத்தானுக்கு தன்னோட பேச்சும் முடிவும்தான் பெருசு... ஒருத்தருக்கு பத்து பேர் தலையை வாங்குனாலும் போலீசுக்குப் போவ மாட்டாருன்னு சொல்லு..." - இது அந்த ஒன்பது கள்ளர்களில் ஒருவனான வீரமுடி என்பவன்.

"நான் சத்தியம் பண்ணிச் சொல்லுவேன், பாண்டியர் இருக்கற வரை தேவர்கோயிலுக்குள்ளார போலீசு கால் வைக்க முடியாது. மீறி வெச்சா பாண்டியர், நாண்டுகிட்டு செத்துப்போனாலும் ஆச்சரியப்பட்றதுக்கில்ல." மூக்கனின் வ்லியுறுத்தல் தேவமாயனை ஆழமாக யோசிக்கச் செய்தது.

“மாயா, என்ன ரோசனை! சில மனுசங்களுக்கு இப்படித்தான் குரங்குத்தனமா புத்தி இருக்கும். புடிச்சா புடிச்சதுதான்னு இருப்பாக. இந்தத் தங்க முத்துப் பாண்டி அந்த லிஸ்ட்டுதான் போல. இது நமக்குத்தான் சாதகம்...”

“ஆமாம் மாயண்ணே... பாளையத்தார் நெல் கொட்டாரம் ஒண்ணு போதும்ணே.... மூணு நாலு வருஷத்துக்கு உக்காந்து கஞ்சி குடிக்கலாம்.”

“வாய மூடுறா... கஞ்சி குடிக்காமத்தான் இப்ப இருக்குறோமாக்கும். நகை நட்டுன்னு அந்தாளுகிட்ட மட்டும் ஆயிரம் பவுனு தேறும். அதுல கை வைக்கணும்.”

“சப்ஜாடா வீட்டுப் பத்திரம், நிலப்பத்திரம், அப்புறம் நகை நட்டு அம்புட்டையும் பாண்டியரு தன் ஊட்டு நிலவறைல இரும்புப் பெட்டிலதான் வெச்சுருக்கறதா தகவல். மொத்தமாகூட தாளிச்சுபுடலாம்...”

அவர்கள் ஆளுக்கு ஆள் பேசிக்கொண்டே போனார்கள். தேவமாயனோ தங்கமுத்துப் பாண்டியரின் வித்தியாசமான குண முகாந்திரத்திலேயே இருந்தான்.

அந்த நொடி அவர்கள் பதுங்கியிருக்கும் பாறைப் பக்கமாகக் கொம்பூதி கொம்பு ஊதுவது காதில் கேட்டது.

“யாரோ வாராங்க... கொம்பூதி ஊதறான் பார்...” - அவர்கள் சூதானமாகத் தொடங்கினர். சரேல் சரேலென்று வயல் எலிகள் போல கிடைத்த இண்டு இடுக்கில் பதுங்கிக் கொண்டு யார் அங்கே வரப்போவது எனப் பார்க்கத் தொடங்கினர்.

கருப்பராயசாமி பூசாரி நாடிமுத்துதான் வந்து கொண்டிருந்தார். ஒரு பிரம்புக் கூடையைத் தூணி

போட்டு மூடி அதை இடது தோளிலும் வலது தோளிலு மாக மாற்றி மாற்றிச் சுமந்தவராக வந்துகொண்டிருந் தார்.

தேவமாயனின் நாயானது பாய்வதற்குத் தயா ராகப் பாய்ந்து ஓடிவிட்டு, நாடிமுத்துவைப் பார்த்து வாலை ஆட்டியபடியே அவரைச் சுற்றிச் சுற்றி வர ஆரம்பித்தது.

"அட நம்ப பூசாரி..."

"வா பூசாரி..."

"வந்துகிட்டே இருக்கேன். நலமா இருக்கீங்களா துரைங்களா..."

"துரைங்களா... நாங்களா? பிடிக்காத வார்த்தை அதுன்னு தெரிஞ்சும் இது என்ன கேள்வி பூசாரி..."

"சும்மா தமாசுக்கு சொன்னேன். காலம்பற நம்ம கருப்பராயசாமிக்கு விசேஷ பூசை நடந்துச்சு. வெள்ளாடு அடிச்சுப் படையல் போட்டு கும்பிட் டோம். அப்படியே பிரியாணி கிண்டுனாங்க. வாசம் பட்டைய கிளப்புனுச்சு. சரிதான்னு நல்ல தொடைக் கறியா பாத்து எடுத்து வெச்சுகிட்டு கிளம்பிட்டேன்."

பூசாரி பதிலோடு கூடையை மூடி இருந்த துணியை விலக்கினார். உள்ளே பெரிய அலுமினியப் பாத்திரத்தில் பிரியாணியும், வெங்காய மோரும் அப்படியே இரண்டு பெரிய பாட்டில்களில் கள்ளும் இருந்தது.

கிடாரி பாய்ந்து வந்து எடுத்தான்.

"எல்லாம் உங்களுக்குத்தான் ராசாக்களா... ஆற அமர உக்காந்து சாப்புடுங்க. அப்புறம் தேவமாயா, உன்கிட்ட ஒரு முக்கிய விசயம் பேசோணும்..."

பூசாரி தேவமாயனை மட்டும் தனியே ஒதுக்கிக் கொண்டு போனார். பூசாரி மேல் ஒரு தனி பிரியம் தேவமாயனுக்கும்.

"என்னா பூசாரி விசயம்?"

"அதை எப்படிச் சொல்றதுன்னுதான் எனக்கு தயக்கமா இருக்குது தேவமாயா..."

"ஒரு விசயம்னு சொல்லி தள்ளிகிட்டு வந்துட்டு இப்படி மெட்டுனா எப்படி பூசாரி..."

"அப்படின்னா அது நல்ல விசயமில்லன்னு தெரிஞ்சுக்க..."

"விசயத்தைச் சொல்லுங்க..."

"இன்னிக்கு நம்ம முத்துரங்கம் மேல சாமி இறங்கி வந்துச்சு..."

"அதுக்கென்ன?"

"சம்மந்தமில்லாம உன் விசயம் பேசினிச்சுப்பா..."

"எப்படி?"

"தேவமாயனைக் களவு உட்டுப்பிடச் சொல்லு. அவன் காவிய கட்டி கோயில்ல இருக்கோணும். எட்டக்க எமன் தெரியறான். இது ரொம்ப அவசரம்னு சொன்னிச்சுப்பா சாமி..."

பூசாரியின் பேச்சைக் கேட்டு தேவமாயன் உடனே சிரித்தான்.

"என்னலே... நான் ஒண்ணும் இல்லாததைச் சொல்லல. சத்தியத்தைச் சொல்லுறேன். நான் வந்தது கூட கறியும், சோறும் கொடுக்க இல்ல. உன்னை எச்சரிக்கை பண்ணத்தான்.

நீ நம்புனா நம்பு... நம்ம கருப்பராயசாமி கால் பாகத்துல ஒரு ஓட்டை விழுந்து அதுல ஒரு கரு நாகமும் பூந்துடிச்சி. அப்பப்ப காலடில அது தலையை நீட்டிகிட்டு சீர்ற சீறு ரொம்ப பயமா இருக்கு. இது ஆனாலும் கெட்ட சகுனம் தேவமாயா..."

பூசாரி எச்சரித்துக்கொண்டே போனார்.

தேவமாயன் பதிலுக்கு அவரிடம், "ஒரே ஒரு களவு தான் பூசாரி... நல்ல பெரிய குறி, வசமான குறி இது. இதுக்குப் பொறவு களவுக்கே போறதில்லைன்னு நான் சத்யம் கூட செய்யறேன் போதுமா?" என்றான். அவன் மனத்தில் தேவர்கோயில் தங்கமுத்துப் பாண்டியரின் இரும்புப் பெட்டிதான் நிழலாடிக் கொண்டிருந்தது!

அந்தப் போலீஸ் ஸ்டேஷனுக்குள் முட்டாக்கு போட்டபடி ஒருவர் நுழைந்துகொண்டிருந்தார். தேவர் கோயில்காரரான அவருக்கு எங்கே தன்னை யாரும் பார்த்துவிடுவார்களோ என்கிற அச்சம்.

ஆனாலும் பாவம் அவரது துரதிர்ஷ்டம் தேவர் கோயில் தங்கமுத்துப் பாண்டியரின் மனைவி வழி உறவுக்காரனான பரமேஸ்வரன் ஸ்டேஷனில் சப் இன்ஸ்பெக்டர் சீட்டில் அமர்ந்து கொண்டிருந்தான்.

அவனைப் பார்க்கவும் அந்த மனிதருக்குத் தொண்டையில் முள் ஏறின மாதிரிதான் இருந்தது.

ஒளியத் தெரியாதவன் தலையாரி வீட்டிலா போய் ஒளிவது?

## 6

'விதிப்பாடுன்னு ஒரு வளையம் - அது
குதிச்சாடும்போது உயிர் வளையும்!
மதிப்போடும், மிதப்போடும் இருந்தாலும்
அதுப்படிதானே அம்புட்டும் விளையும்?'

**போ**லீஸ் ஸ்டேஷனின் வாசல்படி ஏறி உள் வரை வந்துவிட்ட அந்த தேவர்கோயில்காரர் அப் படியே தேங்கி, பின் தோள் துண்டை தலைக்கு மாற்றி மூடிக்கொண்டு வந்த சுவடு தெரியாதபடி திரும்பத் தான் பார்த்தார். ஆனால் அதற்குள் யாரைப் பார்த்துத்

திரும்பினாரோ அந்த எஸ்.ஐ.யான பரமேஸ்வரன் பார்வை அவர்மேல் பட்டுவிட்டது.

"ஏய்... யாருய்யாது?" பரமேஸ்வரனின் குரல் அவர் காதில் மாட்டி இழுத்தது. இருந்தும் முகத்தைத் திருப்பிக் காட்டத் துணிவில்லை. சற்று தேங்கி நின்று விட்டு திரும்பவும் வேகமாகச் செல்லக் காலெடுத்தார்.

"ஏய்... நில்லுவே. கேக்கக் கேக்க போனா என்ன அர்த்தம்... வாசல்ல யார்யா அது சென்ட்ரி?" பரமேஸ்வரனின் குரல் சென்ட்ரியை வரவழைத்து அந்த மனிதரையும் இழுத்து வந்துவிட்டது.

"யாருவே நீ... உள்ள வந்துபுட்டு என்னைய பாக்கவும் ஓசைப்படாம திரும்பிப் போனா என்ன அர்த்தம்?"

"அது... அது... கிளப்பு கடைன்னு நினைச்சு வந்துட்டேங்க. உள்ளார வந்தபொறவுதான் இது போலீஸ் ஸ்டேசனுன்னு விளங்கிச்சு. அதான்..." தடுமாறித் தடுமாறி வாயைத் திறந்தார் அந்த மனிதர்.

"உன் பேர் என்ன?"

"பிச்சமுத்துங்க..."

"எந்த ஊரு?"

"அது... அது... இந்த ஊருதானுங்க..."

உடனே பரமேஸ்வரன் அந்த மனிதர் காலைப் பார்த்தார். காலில் டயர் செருப்பு. பழைய லாரி டயர்களை வெட்டி மாட்டுத்தோல் கொண்டு பிளாஸ்டிக் வயர் வைத்துத் தைத்த செருப்பு. ஓரளவு நிலம் நீச்சு உள்ளவர்களும், அன்றாடம் வயலுக்குப் போகவேண்டிய கட்டாயம் உள்ளவர்களும் மட்டுமே அப்படி ஒரு டயர் செருப்பை செருப்பு தைக்கிற வரிடம் செய்து கொடுக்கச் சொல்லி வாங்கி அணிந்து கொள்வார்கள்.

மற்றவர்களில் பாதிப் பேர் செருப்பே போட மாட்டார்கள். அதில் மீதிப்பேர் பிளாட்ஃபாரக் கடைகளில் கிடைக்கும் சாண்டாக் ரக செருப்புதான் போடுவார்கள்.

செருப்பைத் தைக்கச் சொல்லிப் போடுவது என்பதெல்லாம் நிலம் நீச்சு உள்ள பார்ட்டிகள்தான்.

“ஆமாம்... என்ன தொழிலு?”

“விவசாயம்தாங்க...”

“விவசாயம்னா... நஞ்சைப் பயிரா, இல்ல புஞ்சப் பயிரா?”

“அது... அது... நஞ்சைதானுங்க...”

“திகட்டல் இல்லாமலே பதில் சொல்லமாட் டீகளோ. ஆமா இந்த ஊர்ல யாரும் நஞ்சைல பயிர் பண்றதே இல்லையே...”

“அது... அது...”

“ஒழுங்கா உண்மையச் சொல்லும். டயர் செருப்பு போட்டுக்கிட்டிருக்கீர். சொந்த ஊர் தேவர்கோயி லாக்கும்?”

கேள்வியே அவர் மண்டையைக் கொத்தியது. அதிர்வுடன் பார்த்தார்.

“கேக்கேன்ல...”

“அ... ஆமாமுங்க...”

“தேவர்கோயில்காரவுக போலீஸ் ஸ்டேஷன் பக்கம் போவறதே பாவத்தோடே சேர்த்தியாச் சேய்யா. இருந்தும் வந்திருக்கிறீர்னா ஏதோ கோளா றான விசயமிருக்குன்னு தான் அர்த்தம்...”

“........”

“வாயத் திறந்து பேசுய்யா. பயப்படாதீர். நீர் இங்க வந்தது, என்கிட்ட பேசப்போறது எல்லாமே ரகசியமாவே இருக்கும்.”

"அது வந்து... நீங்க நம்ம பாளையக்காரர் மருமவனில்ல..."

"ஓ... அந்த அச்சமாக்கும். இங்க நான் போலீஸ்காரன். அம்புட்டுதான். எதுக்கும் பயப்படாம வந்த விஷயத்தைச் சொல்லும்..."

"அது... அது..."

"அட சொல்லுய்யா... உனக்கு எந்தப் பிரச்சினையும் வராதுன்னு சொல்றேன்ல..." - பரமேஸ்வரன் ஒரு அதட்டு அதட்டவும் அவர் கொஞ்சம் பதறிவிட்டு வாயைத் திறந்தார்.

"கூமாச்சிமலைக் கள்ளன் தேவமாயனைத் தெரியும். தாங்களே..." - அவர் ஆரம்பிக்க பரமேஸ்வரனின் குனிந்த முதுகு நிமிர்ந்தது.

"அவனும் அவன் கூட்டாளிகளும் தேவர் கோயில் வந்து பாளையக்காரர் மவ சொர்ணத்தோட தங்கச் சங்கிலியையே அடிச்சுட்டுப் போய்ட்டாங்க."

அவரது செய்தி பரமேஸ்வரனை டேபிளில் லத்தியை எடுத்துக்கொண்டு உருட்டவிட்டது.

"இத்தனைக்கும் அந்தக் களவாணிப்பசங்கள்ள இரண்டு பேர் வசமா அம்புட்டுகிட்டாங்க. பாளையத்தாரும் மரத்துல கட்டி வெச்சாரு. ஆனா வாக்குல நிக்கறவன் நான், என் கிட்ட பேச்சு பிசகாது, அப்படி இப்படின்னு கண்டதைச் சொல்லி அவனுகள அவுத்து உட்டுபுட்டாரு. அவுக களவாண்ட சங்கிலியையும் அவுகளுக்கே கொடுத்துட்டாரு."

பரமேஸ்வரன் நெற்றியில் வரிப்பந்தல் விழ ஆரம்பித்திருந்தது.

"தேவமாயன் சரியான மாயக்கள்ளன். ஒரு வட்டம் ஒரு ஊருக்குள்ள வந்தா சப்ஜாடா அம்புட்டையும் தேட்டை போடாம போகமாட்டான்.

எனக்குக் காடுகரை, வெல்ல மண்டி, நெல்லுக் கொட்டாரம்னு இருக்குது. அவன் பாட்டும் என் சொத்துக்கும் கன்னம் வெச்சா நான் என்னாத்த பண்ணுவேன்?

ஊர்காரவுகளே, 'போலீசுக்குப் போவோம். தேவமாயனைப் பிடிச்சுக் கொடுத்தாக்க ரூவாயெல்லாம் போலீசுல தர்றாங்களாம்'னு எம்புட்டோ சொல்லிப் பார்த்தாங்க. ஆனா பாளையத்தார் மடங்கல. அவருக்கு எப்பவுமே அவர் புடிச்ச முயலுக்கு மூணுகால்தான்."

தயங்கித் தயங்கி நடந்தவை முழுவதையும் பேசி முடித்தார் அந்தப் பெருசு.

பரமேஸ்வரன் பதிலுக்கு எதுவுமே சொல்லவில்லை.

"தம்பி... நான் இங்க வந்தேன்னோ, இல்ல தேவமாயன் பத்தி பேசினேன்னோ பாளையத்தாருக்குத் தெரிஞ்சா அம்புட்டுதான். உங்கள நம்பித்தான்..."

"நல்லது, நான் என்ன பண்ணணும்னு எதிர் பார்க்கிறீங்க?"

"தேவமாயன் எப்ப வேணா எங்க ஊர் பக்கம் வருவான். நீங்கதான் மாறுவேஷத்துல எல்லாம் திரிவீங்களாமே... அப்படித் திரிஞ்சாச்சும் அவனைக் கோழிய அமுக்கற மாதிரி அமுக்கிப்பிடுங்க..."

"அப்ப நான் தேவமாயனைப் பிடிக்கணும். இதான் உங்களுக்குத் தேவை? அப்படித்தானே?"

"அதுமட்டுமில்ல..."

"என்ன... சும்மா சொல்லுங்க."

"அவனைப் பத்தி துப்புக் கொடுத்தா சன்மானம்னு சொல்லியிருக்கீங்கல்ல..."

"உங்களுக்கு அது வேணுமா?"

"ஆமாம். நானு, அப்புறமா இன்னும் ஒரு நாலைஞ்சு பேர் இதுக்காகக் கண்ணுமுழிய மூடப்போறதில்ல. தேவமாயன் வந்தா ரகசியமா தகவல் தந்துவிட்றேன். நீங்க யதார்த்தமா அந்தப் பக்கம் வந்தமாதிரி வந்து மடக்கிடுங்க..."

"ஆனா உங்க பேர் வெளிய வரக்கூடாது..."

"ஆமா... அதேதான்..."

"நல்லது. நீங்க புறப்படுங்க. நான் பாத்துக் கறேன்."

பரமேஸ்வரன் அவர் தோளில் தட்டிக் கொடுத்து அனுப்பி வைத்தார்.

அவரும் கொஞ்சம் நம்பிக்கையும், கொஞ்சம் சந்தேகமுமாகக் கிளம்பிச் சென்றார்.

பரமேஸ்வரன் முகத்திலோ ஒரு தெற்றுப் புன்னகை. கவனித்துக்கொண்டே இருந்த ஏட்டு அருகில் வந்தார்.

"என்னய்யா?"

"தேவமாயன் பத்தி என் காதுக்கு தகவல் வந்துச் சிங்க."

"ஏன் சொல்லலை...?"

"பாளையத்தார் உங்க மாமாவாச்சுங்களே..."

"அதனால..."

"என்ன சார் அப்படிக் கேட்டுட்டீங்க... அவரு தன்னை ஒரு சுப்ரீம் கோர்ட்டுக்கும் மேலால்ல நினைச்சுகிட்டு இருக்காரு. நேத்துகூட அவரு ஆளுங்க பஞ்சாயத்து தண்டனைன்னு ஒருத்தனைத் தூக் கிட்டுப் போய் காயடிச்சுட்டாங்க!"

பகீரென்றது பரமேஸ்வரனுக்கு.

"என்னய்யா சொல்றே?"

"ஆமாங்க... கொஞ்சம் பொம்பள களவாணி அவன். கூத்யாவோட சேர்ந்துகிட்டு ரவுஸ் பண்ணி யிருக்கான். கட்னவ தீயில பாஞ்சுட்டா. அவ அப்பன் பஞ்சாயத்துல பிராது கொடுத்ததுல தண்டனை நிறைவேறியிருக்கு..."

"அவனுக்கு உசுருக்கு..."

"அதெல்லாம் கில்லாடித்தனமா பண்ணியிருக் காங்க. இதுக்குன்னே வைத்தியன் ஒருத்தன் இருக் கான். ஓயாம திருடிகிட்டிருந்த ஒருத்தனுக்கு ஊரு பார்க்க அய்யனார் சாமி கோவில்ல வெச்சு வலது கையையே வெட்டிப் புட்டாங்க."

பரமேஸ்வரனுக்கு லேசாக தலையைக்கூடச் சுழற்றியது.

"இது எதுவுமே உங்களுக்குத் தெரியாதா சார்?"

"இல்லைய்யா. நான் படிப்பு, ட்ரெய்னிங்குன்னு பதினஞ்சு வருஷமா-பட்ணத்துலயே கழிச்சுட்டேன்."

"என்ன சார்... பாளையத்தார் மகள் சொர்ணத்த கூட உங்களுக்குக் கட்டி வைக்க உங்க வீட்ல முயற்சி பண்ணதாகவும், நீங்க போலீசுங்கறதால அவர் மறுத் துட்டதாகவும் கூட வேள்விப்பட்டேன். நிஜங்களா...?"

"பரவால்லியே... என் குடும்ப விஷயம் உங்க ளுக்கு இவ்வளவு தூரம் தெரிஞ்சிருக்குதே...?"

பரமேஸ்வரன் அதற்குமேல் எதுவும் பேசவில்லை. உடனேயே விறுவிறுவென்று கிளம்பிவிட்டார்.

அந்தப் போலீஸ் ஜீப்பின் சீற்றத்தை தேவர் கோயிலில் இருந்தவர்கள் பார்த்து ஆச்சரியப்பட்டுத் தான் போனார்கள். அதேசமயம் ஜீப்பில் பரமேஸ் வரன் இருந்ததால் விபரீதமாக எதையும் நினைக்க வில்லை.

ஜீப் புழுதிபடர்ந்த சாலைகளில் புகை மூட்டத்தோடு கடந்துபோய் பாளையத்தார் தங்கமுத்துப் பாண்டியர் வீட்டின் முன்தான் தேங்கி நின்றது.

வேலைக்காரர்களிடம் விதிர்ப்பு.

பாய்ச்சலாகக் குதித்து நடந்த பரமேஸ்வரனைப் பார்த்து ஒரு பக்கம் சந்தோஷம், மறுபக்கம் லேசாக அதிரவும் செய்தனர்.

வாதா மரத்தடியில் பிரம்பு நாற்காலியில் அமர்ந்தபடி குமுதம் படித்துக் கொண்டிருந்தாள் சொர்ணம்.

பூட்ஸ் சப்தம் கேட்டு நிமிர்ந்தாள்.

பரமேஸ்வரனைப் பார்க்கவும் அதிர்ந்தாள்.

"ஹலோ... சொர்ணம்தானே?"

கேள்வியோடு வந்து எதிரில் கிடந்த பிரம்பு நாற்காலியில் அமர்ந்தார் பரமேஸ்வரன். அவரை அவளால் சட்டென்று அடையாளம் காண முடியவில்லை. கூடவே அந்த தேவமாயனின் கள்ளர்கள் சம்பந்தமாகத்தான் தன்னிடம் விசாரணை நடத்த போலீஸ் வந்துவிட்டதோ என்றும் ஒரு பதற்றம். ஆகையால் சொர்ணம் முகத்தில் ஒரு மன்றாடல் நன்றாகவே தெரிந்தது.

"நீங்க... நீங்க..."

"என்னத் தெரியலியா... நான் பரமேஸ்வரன். தங்கம்மா அத்தையோட மகன்..."

"பரமேசா...?" கபாலென்று உற்சாகத்துக்கு மாறினாள் சொர்ணம்.

"இதுக்குத்தான் அடிக்கடி வந்து போய்க்கிட்டு இருக்கணும்கறது. உன் ஊர்க்காரங்களுக்கு என்னைத் தெரிஞ்சிருக்கு. உனக்குத் தெரியல பார். ஆமா மாமா எங்க?"

"அப்பா... அப்பா... புளியந்தோப்பு பக்கம் போயிருக்கார்..."

"அப்ப நீ மட்டும்தான் இருக்கியா?"

"ஆமாம்... இது என்ன யூனிஃபார்மோட?"

"ஏன்... நான் பக்கத்து ஸ்டேஷன்லதான் எஸ்.ஐ.யா சேர்ந்துருக்கேன். நீ கேள்விப்படலையா?"

"ஆமாம்... யாரோ சொன்னாங்க."

"யாரோ சொன்னாங்களாக்கும்... நல்லாருக்கு."

"சாரி... பாட்டிகூட உங்களைப் பார்க்கணும் னாங்க. அப்பாதான் தடுத்துட்டாங்க...."

"அம்மத்தா இப்ப எங்க...?"

"அதுக்கு மேலுக்கே முடியறதில்ல... இருட்டு ரூம்ல இருமிகிட்டே படுத்திருக்குது...."

பரமேஸ்வரன் உடனேயே எழுந்துகொண்டு அவள் வர்ணித்த இருட்டு ரூமுக்குத்தான் செல்லத் தொடங்கினார்.

"ஆமா எதுக்கு இப்படி போலீசுல போய் சேர்ந் தீங்க?"

அவரைப் பின்தொடர்ந்தபடியே அவள் இப்படி ஒரு கேள்விகேட்பாள் என்று அவர் எதிர்பார்க்க வில்லை.

"என்ன சொர்ணம் கேள்வி இது... போலீஸாக றது தப்பா என்ன?"

"இல்ல... நம்ப ஊட்ல போலீசுன்னாலே யாருக்கும் பிடிக்காதே... அதான் கேட்டேன்."

அவள் 'நம்ப ஊட்ல' என்று அவனைத் தன் வீட்டோடு இணைத்துச் சொன்னதைக் கொஞ்சம் போல ரசித்தவர், "இன்னும் அந்த நாளைய பாளையக் கார அதிகாரப் புத்தி போகல போல இருக்கு..." என்றார் கண்களைச் சிமிட்டியபடி...

அப்போது வீட்டின் மையத்திலுள்ள வட்ட மான பெரிய கெடிகாரத்தில் நான்கு மணிக்கு உண்டான சப்தம். இருட்டு அறைக்குள் அவரது அம்மத்தாவான பாட்டியின் இருமல் குரலும் கேட்கத் தொடங்கியது. இருவரும் அந்த அறைக்குள் நுழைந் தனர்!

சடைசடையாக புளியம் பழங்கள். கிளைக்குக் கிளை ஆட்கள் நின்றுகொண்டு கூத்தாடிகள் போல காலால் ஆடி மிதக்க பொலபொலவென்று தரையில் உதிரத் தொடங்கின புளியம்பழங்கள். ஒரு ஓரமாக நின்று பார்த்தபடி இருந்தார் தங்கமுத்துப் பாண்டியர். அவர் பார்க்கும் படியாக சற்று தூரத்தில் இருந்தது ஒன்பது கிளைப் புளியமரம். ஏனோ அதில் மட்டும் ஒரு பிஞ்சுகூட இல்லை... அந்த மரத்துக்குத்தான் ஏதாவது வியாதியா... இல்லை வேறு ஏதாவது காரணமா என்பதும் விளங்கவில்லை.

ஒரு வயதான புளி உலுக்கனைக் கூப்பிட்டார். அவனும் நெருங்கினான்.

“எலே.... ஏண்டா அந்த ஒம்பது கிளை மரம் மட்டும் காய்க்கல... ஏதாச்சும் சீக்கா?”

உடனே அந்த உலுக்கன் முகத்தில் ஒரு சின்ன தடுமாற்றம்.

“என்னலே மிரண்டு மென்னிய நெரிக்கறே, விவரம் தெரிஞ்சா சொல்லு. இல்ல தெரியல சாமின்னு சொல்லு...”

“தெரியும் ஆண்டே... ஆனா எப்படிச் சொல்ற துன்னு தான்...”

“என்னலே புதிர் போட்றே?”

“புதிர் இல்லீங்க. கம்பளத்தார் சிலரு அமாவாசை ராவுல வந்து அந்த மரத்துல ஆணியடிச்சு பூசை செய்துட்டுப் போறாங்க. காத்து கருப்பை அந்த

*மரத்துல கட்டிட்டுப் போறதாகவும் ஒரு பேச்சு இருக்குது. அதான் மரம் துளிர்க்கலைங்க. பிஞ்சையெல்லாம் காத்து கருப்பே உதிர்த்து உலுக்கிப்பிடுதுங்க..."*

*அந்தப் பெரியவர் சொன்ன பதிலால் பாண்டியர் இதயம் ஒருமுறை பலமாகவே அதிர்ந்து நடுங்கியது.*

# 7

'வெச்ச குறி தப்பாது மாயன் கிட்ட
மிச்சம் மீதி நிக்காது அவன் கன்னம்கட்ட
உச்சத்துல சூரியன் அவன் சாதகத்துல
மச்சமுள்ள கள்ளனவனோ கானகத்துல!'

*அதிர்ச்சியோடு தங்கமுத்துப் பாண்டியர் அந்தப் புளியமரத்தை நோக்கி நடந்தார். அருகே செல்லச் செல்ல மரத்தின் அடித்தண்டில் காய்ந்த மாலைச் சருகுகள்.... ஒருவிதமான பொம்மைகள்... ஒரு சாண் நீளத்துக்கு ஆணிகள் என்று வினோதமான காட்சிகள்... அங்கங்கே முட்டைக்கூடுகளும் கிடந்தன. மஞ்சளும், குங்குமமும் கூட சிதறிக் கிடந்தன.*

*தங்கமுத்துப் பாண்டியருக்குள் பதற்றம் தொற்றிக் கொள்ள ஆரம்பித்தது.*

*"எலே... என்னாடா இது அநியாயம். எந்த நாயுங்கடா இப்படி இந்த மரத்தை பேய் பிடிச்ச மரமா ஆக்குனது...?"*

*அவரோடு வந்தவர்கள் மௌனமாக நின்றார்கள்.*

*"கேக்கறேன்ல..." - அலறிப் புடைத்தார் பாண்டியர்.*

*"அதான் பெருசு சொன்னிச்சுங்களே... ராவானா வீதில வர்ற கம்பளத்து குடுகுடுப்பைக்காரனுவ புறப்படுமுன்ன இங்கதான் பூசை போட்றாங்க..."*

"அவனுக சுடுகாட்ல இல்லடா பூசை போடுவா னுங்க...

"ஒருவேளை இந்த ஒம்பது கிளை புளியமரத் தையும் சுடுகாட்டு மரத்தோட சேர்த்துட்டாங்களோ என்னவோ?"

"ஊர்ப் பொதுமரம் தானுங்களே... அதான் பூசை போட்டுட்டாங்க. சுத்தி வேலி போட்டுட்டா யாரும் வரமாட்டாங்க..."

ஆளாளுக்கு இப்படிக் கருத்து சொல்லும் போது, வீட்டு வேலைக்காரன் சீனி என்பவன் மூச் சிரைக்க ஓடிவந்து, "ஆண்டே.... உங்க மருமவப் பிள்ளை ஊட்டுக்கு வந்துருக்குறாரு" என்றான்.

"ஆருலே அது... ஜெயப்பிரகாஷா... இல்லை செந்தில்குமாரா...?"

"இல்லீங்க ஆண்டே, உங்க சித்தி மவனோட மகன் பரமேசுங்க..."

"பரமேசுவா..."

"ஆமாங்க... அந்த எஸ்.ஐ. தம்பிதாங்க..."

சீனி எஸ்.ஐ. என்ற உடனேயே மிளகாயைக் கடித்த மாதிரி ஆகிவிட்டது பாண்டியருக்கு. விறு விறுவென்று தூர நின்றபடி இருந்த ஃபியட்டை நோக்கி நடந்து அதில் ஏறினார்.

அதுவும் கார் புகையைக் கக்கிவிட்டுக் கிளம் பியது.

அம்மாச்சி பரமேஸ்வரனின் கன்னத்தை வருடி வருடிப் பேசினாள்... சரியாகக் கண் தெரியாததால் தொடு உணர்ச்சிதான். எல்லோர் நலனையும் விசா ரித்திருந்தாள்... இருந்தும் அவளும் "உனக்கு எதுக்கு போலீசு வேலை... காடு கழனிய பார்த்துகிட்டு கிடந்தா போதாதாக்கும். அந்தக் காசு வந்துதான்

செரிக்கப் போவுதா?" என்று குத்திக் காட்டத் தவற வில்லை.

"அம்மத்தா... அரைக்காசுன்னாலும் அரம்மனை காசு அம்மத்தா என் காசு. அடக்கி ஆளுற வேலை தான். இதுல என்னா குறை இருக்குது?" என்று திருப்பிக் கேட்ட பரமேஸ்வரன், அப்படியே அவ்வப்போது சொர்ணத்தைப் பார்க்க அவளிடம் வெட்கக் குழைச்சல்.

மணி நாலரையைக் கடந்துவிட்ட நிலையில் அம்மத்தாவைத் திரும்பவும் ஒரு தலையணையை அண்டக் கொடுத்து படுக்க வைத்துவிட்டு ஹால் பக்கமாக வந்தனர்.

சுவரில் பாடம் செய்த எருமையும், மானும் முறைத்துக் கொண்டிருந்தன.

புலி ஒன்றைச் சுட்டு அதன்மேல் காலை வைத்துக் கொண்டிருக்கும் தங்கமுத்துப் பாண்டியரின் வாலிபப் பிராயத்துப் புகைப்படம் சுண்டி இழுத்தது.

அங்கங்கே பாளையாதிபதிகளாக இருந்த அவ ரது தாத்தாக்கள் - கம்பீரமான தலைப்பாகை, கையில் வாள் என்று மிடுக்காகக் காட்சி அளித்துக் கொண் டிருந்தனர்.

குறுக்கும் நெடுக்குமாக வேலையாள்கள்.

ஒருவன் தேக்கு நாற்காலி ஒன்றைத் தேய்க்கிற மாதிரி பரமேஸ்வரன் பேசப்போகிற பேச்சுக்குக் காது கொடுத்திருந்தான்.

"சொர்ணம்... அம்மத்தாவைப் பாத்ததுல ரொம்ப சந்தோசமா இருக்கு. அப்புறம்..." என்று பரமேஸ் வரன் தேவமாயன் தொடர்பான விஷயத்துக்கு வர முயற்சிக்கவும், சொர்ணம் இதைத்தான் நான் எதிர் பார்த்தேன் என்கிற மாதிரி பார்த்தாள்.

“சொர்ணம்...”

“உம்... சொல்லுங்க.”

“என்னத்தச் சொல்ல... பெரிய பாளையாதி பதிக்கு மகளா இருந்துகிட்டு கழுத்துச் சங்கிலிய களவு கொடுத்தியாமே?” பரமேஸ்வரன் விஷயத்தைத் தொட்டேவிட்டார்.

சொர்ணம் மௌனம் சாதித்தாள்.

“என்ன... அந்தக் களவுபத்தி நான் பேசினது பிடிக்கலையாக்கும்?”

அவளிடம் மௌனம் தொடர்ந்தது.

“சொர்ணம் நீ படிச்ச பொண்ணு. இன்னிக்குக் காலம் இருக்கற இருப்பு உனக்கு எப்படின்னு தெரியும். இப்பவும் பஞ்சாயத்து, அதிகாரம்னு அந்தப் பழைய பலத்துலையே காலம் தள்ளிடலாம்னா அது முடியாது.”

சொர்ணம் துளியும் அசைந்து கொடுக்கவில்லை.

“என்ன சொர்ணம் நான் பேசிகிட்டே இருக்கேன், நீ சும்மா இருக்கியே. தேவமாயனும் அவன் ஆளுங்களும் இந்த ஊர்ல களவாட வந்தாங்களா... நீ அவங்களப் பாத்தியா?”

அந்தக் கேள்வியின்போது தங்கமுத்துப் பாண்டியர் உள்ளே நுழைந்து கொண்டிருந்தார். நடையில் நல்ல வேகம்.

பரமேஸ்வரன் எழுந்து நின்றார்.

ஆனால் தங்கமுத்துப் பாண்டியரிடமோ ஒரு அலட்சியமான பார்வை.

“என்ன மாமா எப்படி இருக்கீங்க?”

“இருக்கேன்... ஆமா இது என்ன கோலம் மாப்ள. இப்படியா போலீசு உடுப்போடையே வருவீங்க.”

"நான் போலீஸ்காரன்தானே மாமா?"

பரமேஸ்வரன் அழுத்தமாகச் சொன்னதில் ஆழ்ந்த பொருள். அது தங்கமுத்துப் பாண்டியருக்கும் புரிந்தது.

"வந்து ரொம்ப நேரமாச்சோ..."

"ஒரு அரைமணி இருக்கும் மாமா..."

"நல்லது... பெரிய போலீஸ்காரரு நீங்க. நிறைய வேலை கிடக்கும். உடனே புறப்பட வேண்டியிருக் கும். அப்படித்தானே?"

உடனே புறப்படச் சொல்லி சாமர்த்தியமாக அவர் பேசியது சொர்ணத்துக்கே பிடிக்கவில்லை. அதேவேளையில் வாயில்புறத்தில் ஒரு மோட்டார் பைக்கின் உறுமல். தங்கமுத்துப் பாண்டியரின் ஒரே மகனான செண்பகப் பாண்டியன்தான் பைக்கில் வந்திருந்தான்.

"அண்ணன் வுந்துடுச்சி..." என்றாள் சொர்ணம். செண்பகப் பாண்டியனும் பைக் சாவியைத் தூக்கிப் போட்டுப் பிடித்தபடியே உள் நுழைந்து கொண்டிருந் தான். பரமேஸ்வரனைப் பார்த்து, "யாரு பரமேஸ் மாப்ளையா... எப்படி இருக்கே மாப்ளை?" என்று கேட்டான்.

"நல்லாருக்கேன் செண்பா. எங்க போய்ட்டு வரே..."

"போடிநாயக்கனூர் வரை போய்ட்டு வர்றேன். என்டர் தி டிராகன்னு ஒரு கராத்தே சண்டைப் படம். என்னமா இருக்குது தெரியுமா? நம்மாளுங்க சண்டை எல்லாம் பரோட்டா பிசையற ரகம். ஃபைட்டுன்னா புரூஸ்லீதான்... அடி ஒண்ணு இடிமாதிரி உழுவுது..."

செண்பகப் பாண்டியன் டென்ஷனே இல்லாமல் பேசிவிட்டு விறுவிறுவென்று மாடிப்படி ஏறிவிட்டான்.

தங்கமுத்துப் பாண்டியர் பார்வை சொர்ணத்தையும் ஊடுருவியது. அவளும் புரிந்துகொண்டு விலகத் தொடங்கினாள்.

"அப்புறம் மாப்ளை..."

"இப்படிக் கேட்டா எப்படி மாமா... என் காதுக்கு என்னென்னவோ சேதியெல்லாம் வந்துச்சு..."

"தேவமாயன் விஷயம்னு உடைச்சே பேசு. அதுக்கென்ன இப்போ...?"

"ஏ மாமா.... நாங்க இருக்கறதே உங்களுக்கு மறந்து போச்சா. எங்க டிபார்ட்மென்ட்டு எதுக்கு மாமா இருக்குது?"

"அப்ப இது விஷயமா பேசத்தான் வந்துருக்கறே... ஒரு சொந்தக்காரனா நீ வரலை..."

"இரண்டு விதமாவும்னே வெச்சுக்குங்களேன்."

"மாப்ள... இந்த ஊட்டைப் பத்தியும், ஊரைப் பத்தியும் தெரிஞ்சும் நீ என்கிட்ட பேச வந்துருக்கறத நினைச்சா என்னன்னு சொல்றது?"

"மாமா நான் சொல்றேனேன்னு தப்பா எடுத்துக்காதீங்க. ஒரு களவாணிப்பய ஊருக்குள்ற வரலாம். களவாடிட்டு ஒரு குந்தகமும் இல்லாம திரும்பியும் போகலாம். ஆனா போலீசு வரக்கூடாதா... இது எந்த ஊர் நியாயம் மாமா?"

"இதோ பாரு. எனக்கு ஒண்ணும் உங்க பேர்ல வெறுப்பு கிடையாது. ஆனா இந்த தேவர் கோயிலை போலீஸ் துணை இல்லாமலே கட்டுக்கோப்பா வெச்சுருக்கேங்கற பெருமையை நான் இழக்கப் பிரியப்படலை..."

"அப்ப தேவமாயனை நீங்க எங்க துணை இல்லாமலே சமாளிச்சிடுவீங்களா?"

"நிச்சயமா..."

"எதுக்கு மாமா இப்படி சட்டத்தை நீங்க கைல எடுத்துக்கிறீங்க?"

"எலேய்... உங்களுக்கு ஒரு சோலியும் வைக்காம நாங்க இருந்தா சட்டத்தை கைக்குள்ளார எடுத்துக்க றேன்னு அர்த்தமா?"

"சரி... இப்படி இருக்கறதுல உங்களுக்கு என்ன கிடைக்குது?"

"பெருமிதம்லே- பெருமிதம்! அப்பன் பாட்டன்னு தலைமுறை தலைமுறையா கட்டிக்காத்து வந்ததை நான் தொடர்ந்துகிட்டிருக்கேன். இதெல்லாம் உனக்குப் புரியாது..."

"ஒத்துக்கறேன் மாமா... ஒரு கோணத்துல உங்களப் பார்த்தா பெருமையாதான் இருக்கு. ஆனா இதுக்கு ஊரில இருக்கறவங்க அம்புட்டு பேரும் ஒத்து வர ணுமே..."

"அப்படின்னா எவனோ இந்த ஊர்க்காரன் உன்னைப் பார்த்துப் போட்டு உட்ருக்கான்னு சொல்லு..."

தங்கமுத்துப் பாண்டியர் பேச்சில் சரேலென்று ஒரு வலை. அதில் வசமாக மாட்டிக்கொண்டது போல ஒரு திணறல் பரமேஸ்வரனிடம். அருகில் அறைக்குள் கதவுக்குப் பின்னால் நின்றுகொண்டு அவர்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தாள் சொர்ணம்.

"அது வந்து மாமா... யாரும் வந்து எதையும் சொல்லலை. நானாதான் கேட்டேன்..."

"இல்ல மாப்ள... நீ டூட்டில சேர்ந்த அன்னிக்கே வந்திருந்தா அது ஒருவிதம். கரெக்டா தேவமாயன்

களவுக்குப் பொறவு வந்துருக்கே. உனக்கு யாரோ தகவல் கொடுத்துட்டாங்க...."

"எதுக்கு மாமா அந்தப் பேச்சு. நான் உங்க உறவுக்காரன். போலீஸாவும் இருக்கேன். என்னை நல்லவிதமா பயன்படுத்திக்குங்க. தேவமாயனைத் தனியா ஃபேஸ் பண்றதா நினைச்சுகிட்டு அவன்கிட்ட மாட்டிக்கிடாதீங்க.

அவனும் அட்டைப்பூச்சியும் ஒண்ணு.

அவன் தலைக்குதான் லட்ச ரூவா பரிசு. அதை வாங்க முயற்சி பண்ணுங்க."

"சரி அப்பு, நீ கிளம்பு. அவன் இனி இந்த ஊர்ப் பக்கம் வரும்போது பாக்கலாம்."

"கொஞ்சம் யோசியுங்க. வறட்டுப் பிடிவாதம் வேண்டாம். குத்தமே செய்யாத ஊருங்கறதுதான் பெருமை. போலீஸே இல்லாத ஊருங்கறது ஒண்ணும் பெருமை இல்லை. நான் வர்றேன்."

பரமேஸ்வரன் புறப்படத் தயாரானார். போகும் போது எல்லோரிடமும் சொல்லிக் கொள்ளும் எண்ணத்துடன் செண்பகப் பாண்டிக்காக மாடியில் கால் வைத்தபோது தங்கமுத்துப் பாண்டியர் குரல் தடுத்தது.

"எங்க மாப்ள போறே?"

"செண்பகத்தைப் பாத்து ஒரு வார்த்தை சொல்லிக்கிறேன்.."

"சரி போ..." ஒரு மாதிரி சிரித்துக்கொண்டே சொன்ன விதத்தில் ஏகப்பட்ட உட்பொருள்.

**மா**டியில் நீண்ட துப்பாக்கிக் குழல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தான் செண்பகப் பாண்டியன். அருகிலேயே மேஜை மேல் பெட்டி பெட்டியாக கை

எறிகுண்டுகள். பிஸ்டல், ரிவால்வார் என்று துப்பாக்கிகள். அரிவாளும் பிச்சுவாக்களும் கூட ஏகத்துக்கும் இருந்தன.

"செண்பா என்ன இதெல்லாம்?" கேள்வியோடு உள்ளே நுழைந்த பரமேஸ்வரனைப் பார்த்துச் சிரித்தான் செண்பகப் பாண்டியன்.

"கேக்கறேன்ல..."

"ஏ மாப்ள... ஒரு தீவிரவாதிதான் இதையெல்லாம் வெச்சிருக்கணுமா, நாங்க வெச்சிருக்கக்கூடாதா?"

"அது இல்ல... இதெல்லாம் சட்டப்படி குத்தம்..."

"இப்படி எல்லாம் நீங்க பேசுவீங்கன்னுதான் எங்கப்பா உங்களை ஊருக்குள்ளையே வரக்கூடாதுங்கறாரு. நீயோ வீட்டுக்குள்ளையே வந்து தப்புன்னு வேற சொல்றே?"

"அட என்னப்பா நீ... தப்ப தப்புன்னுதானே சொல்லணும்?"

"இல்ல பரமேசு... இதெல்லாம் தப்பே இல்லை. ஒரு வட்டம் அந்த தேவமாயன்கிட்ட தோத்துட்டோம். அடுத்த வட்டம் அவன் வந்தா தோக்கக் கூடாது பாரு... அதுக்காகத்தான் இதெல்லாம்..."

"எலேய்... என்னப்பா நீயும் உங்கப்பா மாதிரியே தனி ட்ராக்குல போறே. விஷயத்தை என்கிட்ட விட்று. நான் பாத்துக்கறேன்..."

"அப்பா சொன்ன பதிலையே நானும் திருப்பிச் சொல்லணுமாக்கும்?"

"அது சரி... தேவமாயன் திரும்ப வருவான்கறது தான் உங்க முடிவா?"

"சங்கிலித் திருட்டு அவன் வெள்ளோட்டம். எங்க வீட்டையே தேட்டை போட்றதுதான் அவன்

லட்சியம். அவன் கோடு போட்டா நாங்க அதுல ரோடு போட்ற ரகம் பரமேசு..."

"சரி... உங்களுக்கு முந்தி நான் அவனை அரெஸ்ட் பண்ணிட்டா?"

"ரொம்ப சந்தோசம். ஆனா இந்த தேவர்கோயில்ல வெச்சு மட்டும் பண்ணவேண்டாம் மாப்ள."

"ஏன்... உங்க ஊர் பெருமையை நாங்க கெடுத்துருவோமாக்கும்...?"

"நிச்சயமா..."

"ஆனா நான் அதுக்கு உத்தரவாதம் தரமுடியாது செண்பகம். எனக்கு என் கடமைதான் முக்கியம். தேவமாயனுக்கு என் கையால இந்த மண்ணுலதான் முடிவுன்னா அதை யாராலையும் மாத்த முடியாது."

பரமேஸ்வரனின் பதில் செண்பகப் பாண்டியனுக்கு ஏமாற்றமாக இருந்தது. அதேசமயம் கீழே பயங்கரமான அலறல் சப்தம்!

# 8

'ஒரு பாணம் ஒரு சொல்லு
அது அந்த ராமனுக்கு!
ஒரே குறி ஒரே அள்ளு
அது இந்த மாயனுக்கு!

**கீ**ழிருந்து கேட்ட சப்தம் பரமேஸ்வரனையும், செண்பகப் பாண்டியனையும் அவசரமாக மாடியிலிருந்து கீழே இறக்கியது.

கீழே தங்கமுத்துப் பாண்டியர் தன் வீட்டு வேலையாட்களை சவுக்கால் விளாசிக் கொண்டிருந்தார்.

'நூறு அங்கண மாளிகை வீடு' என்பது பாண்டியர் வீட்டிற்கான பெயர். அதை முப்பதுக்கும்

மேலான வேலையாட்கள் பராமரித்து வந்தார்கள். அதில் ஒன்பது பேருக்கு மேஸ்திரி பொறுப்பு.

அந்த ஒன்பது பேர்தான் சவுக்கடி வாங்கிக் கொண்டிருந்தார்கள்.

வரிசையாக வேலிமரம் போல நின்று வியர்க்க விறுவிறுக்க பாண்டியர் விளாசுவதை வாங்கிக் கொண்டிருந்தார்கள். பலரிடம் மேல்சட்டை அறுந்தே போய்விட்டிருந்தது. சிலரிடம் இடுப்பில் ரத்தச் சொதசொதப்பு.

செண்பகப் பாண்டியனுக்கு அதைப் பார்க்கவும் பகீர் என்றது.

"அண்ணே... என்ன இது?" என்றபடி வேகமாக அந்த ஒன்பது பேருக்கு முன்னால் போய் நின்றான்.

அப்பாவை அண்ணனாகச் சொல்லியே நாக்கு பழகிவிட்டது. பாண்டியருக்கு வைரமணி என்று ஒரு தங்கை இருந்தாள், அவள் 'அண்ணே' என்றுதான் கூப்பிடுவாள். அதைப் பார்த்துப் பார்த்து இவர்களுக்கும் பாண்டியர் அண்ணனாகிவிட்டார்.

பாண்டியரும் பதிலுக்கு ஆசுவாசித்தவராக, "என்னாத்தடா இவனுங்க காவ காக்கறாங்க? அந்தக் கள்ளப் பய இங்க சொர்ணம் கழுத்துலையே கை வெச்சுருக்கான். இவனுங்கல்லாம் எந்தக் கம்மாய்க்கு மீன் பிடிக்கப் போயிருந்தாங்களாம்?"

பாண்டியர் போட்டு உடைக்கவும்தான் விஷயம் விளங்கியது. பரமேஸ்வரன் தலை தொப்பியை எடுத்து கையில் பிடித்து ஆட்டியபடியே கவனித்தார். செண்பகப் பாண்டியனுக்கும், பரமேஸ்வரன் எதிரிலியே பேச என்னவோ போல் இருந்தது.

"சரிங்க மாப்ள... நீங்க புறப்படுங்க. இந்தப் பசங்களுக்கு அண்ணன் கையால அப்பப்ப மிதி

வாங்கணும். இல்லாட்டி இவனுங்களுக்கும் புத்தி வராது...” என்ற செண்பகப் பாண்டியை, பரமேஸ்வரனும் சற்று சிரித்தபடிப் பார்த்து விட்டு, “அப்ப நான் கிளம்பறேன் மாமா” என்று சொல்லிக் கொண்டே கிளம்பினான்.

வீட்டின் ஹாலுக்குள்ளிருந்து ஒரு நீண்ட தாழ்வாரம் செல்கிறது. அதில் நடந்து தேக்கு நிலைக்கால் வழியாகத்தான் வெளியில் இறங்கவேண்டும். அந்தப் புறத்தில் போலீஸ் ஜீப்பும் நின்றுகொண்டிருந்தது. அதில் ஏறப்போனபோது ஒரு வேலைக்காரன் பதற்றமாக பரமேஸ்வரன் ஜீப் முன் ஓடிவந்து நின்றான். அப்படியே இளைப்பெடுத்த வாயுடன், “ஐயா... அடுத்த வட்டம் நம்ம வீட்டுக்கு வர்றதா இருந்தா தகவல் சொல்லுவீங்களாம். ஆண்டே தன்னோட காரஅனுப்புவாரு. இப்படி இந்த உடுப்போட சீப்பு காருல வர வேணாம்னு ஐயா கேட்டுகிட்டாருங்க...”

அவன் பேச்சில் நல்ல பக்குவம். பரமேஸ்வரனுக்கு அவன் பேச்சு கோபத்தைத்தான் தந்தது. இருந்தும் அடக்கிக் கொண்டு ஜீப்பை ஸ்டார்ட் செய்தபடி புறப்பட்டுப் போனான்.

அய்யனார் முன் நின்று கற்பூரம் ஏற்றிக் கொண்டிருந்தாள் சொர்ணம். காற்று ராட்சஸனின் மூச்சுக் காற்றாட்டம், மரக்கிளைகளைப் புரட்டிப் போட்டுக் கொண்டு வீசிக் கொண்டிருந்தது. அதனால் கற்பூரத்தில் நெருப்பே பிடிக்கவில்லை. மீறிப் பிடித்தாலும் யாரோ அருகில் இருந்து ஊதி அணைக்கிற மாதிரி அணைந்து அணைந்து போனது.

சொர்ணம் முகத்தில் அதன் காரணமாக ஒரு வித சலனம். கச்சிதமாக அந்த நேரமாகப் பார்த்து பரமேஸ்வரனின் ஜீப் அந்தப் பக்கமாய் அவளைப்

பார்த்தபடியே கடந்து போய்விட்டு பின் திரும்பியும் வந்தது.

க்ரீச்ச்ச்ச்..!

ஜீப்பில் இருந்து பரமேஸ்வரனும் எட்டிப் பார்த்தான்.

சொர்ணத்திடம் ஒரு சின்ன மன்றாடல்.

"இப்பதான் வீட்ல பார்த்தேன். அதுக்குள்ற இங்க பாக்கறேனே... அதுவும் இந்த நேரத்துல..." பேச்சோடு பரமேஸ்வரன் பார்வை அய்யனாரை ஒரு பார்வை பார்த்தது.

அய்யனார், 'எனக்கு எதுவும் தெரியாது சாமி' என்கிற மாதிரிதான் அவனைப் பார்த்தார்.

"என்ன சொர்ணம்... கேக்கறேன்ல, பதில் சொல்லு." பரமேஸ்வரன் நிமிண்டினான். சொர்ணமும் கிணற்றுக்குள் இருந்து பேசுவது போலப் பேசினாள்.

"நடக்கற எதுவும் நல்லதாகவே தெரியல... அதான் மனசு கேக்காம..." சொர்ணம் முழுசாக்கூட முடிக்காமல் திரும்பவும் கற்பூரம் ஏற்ற முனைந்தாள். அது திரும்பவும் அணைந்து அணைந்து போனது.

பரமேஸ்வரன் சிரித்தபடியே தன் போலீஸ் ஜீப்பின் பின்னால் கிடந்த பேட்டரி வாங்கின காலி அட்டைப் பெட்டியை எடுத்து வந்து அதை அய்யனார் முன் வைத்து அதற்கு நடுவில் கற்பூரக் கல்லையும் வைத்து அதில் தன் பாக்கெட்டில் இருந்த லைட்டரையும் எடுத்துப் பற்ற வைத்தான்.

கற்பூரம் காற்றை ஏமாற்றிவிட்டு ஜம்மென்று எரியத் தொடங்கியது.

சொர்ணம் அவனது புத்திசாலித்தனத்தை ரசித்தாள். அப்படியே கன்னத்திலும் போட்டுக் கொண்டாள்.

"இங்க கற்பூரத்தை காத்துகிட்ட இருந்து காப்பாத்திக் கொடுத்த மாதிரிதான் இந்த ஊரையும் அந்தக் களவாணிப் பசங்ககிட்ட இருந்து காப்பாத்திக் கொடுக்க நினைக்கறேன். ஆனா உன் அப்பா வறட்டு வேதாந்தம் பேசிக்கிட்டு உக்காந்துருக்காரு... உங் கண்ணன் அதுக்கும் மேல... வீட்டையே ஒரு துப்பாக்கிக் கடையா மாத்தியிருக்கான். இது எதுவும் நல்லது இல்லை.

பாளையக்காரங்களா இருந்தப்ப இருந்த நிலைமை வேற... இப்ப வேற...! அன்னிக்கு போலத்தான் இன்னிக்கும் இருப்போம்னா அன்னிக்கு மாதிரியே குதிரைலதான் எங்கேயும் போய்ட்டு வர வேணும். எதுக்கு ஃபியட் காரு? எதுக்கு துப்பாக்கி, வெடிகுண்டு, தோட்டா... எல்லாம்...? கத்தி கபடான்னு அப்படியே உக்காந்துகிட்டிருக்கலாம்ல...?"

பரமேஸ்வரனின் லாஜிக் சொர்ணத்தைக் கூர்மையாக நிமிர்த்தியது.

"என்ன சொர்ணம்... என் நியாயம் உனக்காச்சும் புரியுதா?" பரமேஸ்வரனின் அந்தக் கேள்விக்கு மட்டும் அவள் தலை ஆமோதிப்போய் ஆடியது.

"சந்தோஷம்... எங்க நீயும் உங்க அப்பா, அண்ணன் மாதிரி இதுக்கும் ஏதாவது மடல் கட்டுவியோன்னு நினைச்சேன். ஒத்துகிட்டதுக்காக நன்றி. அதேசமயம் அந்தக் கள்ளன் விஷயத்துல அவங்கள மாதிரி சிந்திக்காம வேற மாதிரி சிந்திச்சுப் பேசு... குறிப்பா நான் உனக்கு உதவியா இருக்கேன். ஞாபகம் வெச்சுக்க. நூறாம் நம்பருக்கு ஒரு போன் போட்டு

பரமேஸ்வரன்னு என் பேரைச் சொன்னா போதும். நான் உடனேயே லைன்ல வந்துடுவேன்.

ஞாபகம் வெச்சுக்க... படிச்ச பிள்ளை மாதிரி நீயாவது நடந்துக்கோ... வரட்டுமா?"

அழகாக, தன்மையாக, ஆழமாக, எல்லாமு மாகப் பேசி விட்டு பரமேஸ்வரன் திரும்ப ஜீப் நோக்கி நடந்தான். சொர்ணமும் நெடுநேரம் அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு பக்க வாட்டு பாதைச் சரிவில் இறங்கி அவசர அவசரமாக நடக்கத் தொடங்கினாள்.

அதேசமயம் அய்யனார் பின்னால் இருந்து ஒருவன் வெளிப்பட்டான்.

அவன் முகத்தில் அவர்கள் பேச்சின் எதிரொலி யாக ஒரு கூர்மையான பார்வை!

**கூ**மாச்சி மலை உச்சி!

தேவமாயன் உருமாறிக் கொண்டிருந்தான்!

நள்ளிரவில் வீடுகளைத் தேடிவந்து குறி சொல்லும் கம்பளத்து குடுகுடுப்பைக்காரன் வேடம்.

தேவமாயனின் உருமாற்றம் அவன் சகாக்களை உறுத்திக் கொண்டிருந்தது.

மாயன் இப்படி உருமாறுகிறான் என்றால் அதற்கு அர்த்தமே வேறு... அவனுக்கு அவன் மாமன் மகள் ஞாபகம் வந்துவிட்டது என்று பொருள்.

அவனது மாமா ஒரு போலீஸ் மெஸஞ்ஜர்! முதலில் அவரும் கள்ளனாக குலத் தொழிலைத்தான் செய்து கொண்டிருந்தார். பின்னால் போலீஸிடம் பிடிபட்டதில் மாறிப் போனார். அதிலும் ஒரு மாஜிஸ்திரேட், "நீ திருந்தி ஒழுக்கமா வாழறேன்னு சொல்லு உன் வழக்கை எல்லாம் தள்ளுபடி செய்ய

றேன்" என்று சொல்லவும் அந்த நொடியே மாறி விட்டார். சரி, கள்ளத்தனத்துக்குத்தான் முழுக்குப் போட்டார் என்று நினைத்தால் அது மாறி ஆள் காட்டியாக மாறிவிட்டது போகப் போகத்தான் தெரிந்தது.

பலரது குழுக்களைக் காட்டிக் கொடுத்ததில் போலீஸாரும் புகுந்து விளையாடிவிட்டனர். யாரை யும் கைது செய்து கோர்ட்டில் நிறுத்தவெல்லாம் அவர்கள் தயாராக இல்லை. சுற்றி வளைத்து சுட்டுப் பொசுக்கிவிட்டு, தப்பி ஓட முயன்றபோது சுட்டுக் கொன்றதாக போலீஸ் ஃபைலை குளோஸ் செய்து விட்டது.

இன்று மிஞ்சிக் கிடப்பது தேவமாயனும் அவன் சகாக்கள் எட்டுபேர் மட்டும்தான். அப்படிப்பட்ட மாமனுக்கும் ஒரு மகள்! பெயர் செங்கமலம்.

"மாயா..."

"உம்."

"என்ன செங்குவை பாக்கவா..?"

ஒன்பது பேரில் ஒருவனான கோணவாயன் என்பவன் தான் துணிச்சலாக தேவமாயனிடம் கேட்டான்.

மாயனின் மௌனமே ஆமோதித்தது.

"இது நல்லால்ல மாயா..."

"ஆமா... நாமளும் வட்டா வட்டம் சொல்லிக் கிட்டுதான் இருக்கோம். இந்த விஷயத்துல மட்டும் மாயனுக்கு காது செவிடாயிடுது... என்ன பண்ணச் சொல்றே?"

"ஏப்பா... உன் மாமன்தான் எட்டப்பன் வேலை பாக்கான்ல. அப்படிப்பட்டவன் மக நமக்கு சரிப் பட்டு வருவாளா?"

"பிரியப்பட்டாச்சு. மனசும் கேக்கமாட்டேங்குது. அப்படித்தானே மாயா?"

"அவன் சகாக்களே ஆளுக்கு ஆள் பேச்சும் பதிலுமாக வழிந்தார்கள். மாயனிடம் எந்த பதிலுமில்லை. அவர்கள் பேச்சுக்கு நடுவில் முற்றிலுமாக உருமாறி முடித்திருந்தான். பழைய துணிகள் பிதுங்கி வழியும் தோள். காதைக் குடையும் குடுகுடுப்பை அதை ஒருமுறை ஆட்டி வேறு பார்த்தான்.

சகாக்களிடம் எரிச்சல் பீறிட்டது.

"மாயா... கொஞ்சமும் நீ செய்யறது நல்லா இல்லப்பா. தேவர்கோயில் பாளையக்காரர் வீட்டை எப்படி தேட்டை போட்றதுன்னு யோசிக்காம இப்ப நீ உன் மாமன்மவளைப் பாக்கப்போனா என்னப்பா அர்த்தம்?

உனக்கு தொழில் பெரிசா... இல்ல பொட்டச்சி சுகம் பெரிசா போச்சா...?"

ஒருவன் நன்றாகவே பொங்கினான். அந்த வேளை பார்த்து அவர்களது தபால்காரனான பந்தயப்புறா 'ராணி' சடசடவென்ற சிறகசைப்போடு மாயன் தோள்மேல் வந்து அமர்ந்தது.

அவர்கள் பார்க்க அதைப் பற்றி எடுத்து அதன் காலைப் பார்த்தான். அதில் சுருள்குழலில் ஒரு துண்டுச் சீட்டில் செய்தி. அவர்கள் எதிரிலேயே அந்தச் சீட்டை விரித்துப் படித்தான்.

'என் உசுருக்கு உசுரானவருக்கு...
உங்க செங்கமலம் சொல்ற சேதி.
வாந்தி மயக்கம்னு டாக்டர்கிட்ட
போனேன். உங்க வாரிசு வவுத்துல!

டாக்டரம்மா கூட கலைச்சிடவான்னு கேட்டாங்க. உங்க குரவளையைக் கடிச்சுத் துப்பிடுவேன்னு

சொல்லிப் போட்டு வந்துட்டேன். இப்ப என் வவுத்துக்குள்ள உங்க முத்து. மிச்சத்த நேர்ல பேசு வோம். உடனே வாங்க. ராணி மூலமாவே சேதி வரட்டும். கூளையனூர் மொட்டப்பாறை கிட்ட காத் திருப்பேன்.'

கடிதத்தைப் படித்தவன் எல்லோருக்கும் அதைக் காட்டினான். எல்லோர் கண்களிலும் தீப்பிடித்த மாதிரி ஓர் அதிர்ச்சி.

"போய்ட்டு வந்துட்றேன்.

இப்ப நான் போய்த்தான் தீரணும்.

இல்லாட்டி செங்கமலம் செத்தே போயிடுவா!

நாளைக்கு ராத்திரியே தேவர்கோயில் பாளையக்காரர் வீட்டு நிலவறையை வாரிச் சுருட் றோம். அதான் நம்ம கடைசிக் களவு. கிளம்பறதுக்கு முந்தி கருப்பராயசாமி கிட்டையும் சத்தியப் பிர மாணம் எடுத்துக்கறோம். அடிக்கற கொள்ளையை ஒன்பது பங்கா பிரிச்சுக்கவும் செய்யறோம். இன் னிக்கே இது சம்மந்தமா பாளையக்காரருக்கு சேதி அனுப்பறேன். எனக்கு சரியா சொல்லுல நிக்கறேங்கற அந்த மிட்டாமிராசு, இந்த வட்டமும் போலீசுக்குப் போவாம தனிக்குத் தனி சமாளிக்கறானான்னு பாப்போம்.

பாளையத்தானுக்கும், எனக்கும்தான் சொல் கட்டு. நீங்க திட்டம் போட்டு நடந்தா போதும். இப்ப என்னிய சந்தோசமா வழி அனுப்பி வையுங்க."

தேவமாயன் சிக்கனமாகவும் அதேசமயம் சிறப் பாகவும் பேசி முடித்தான். அவர்களிடமும் குழப்பம் விலகி ஒரு தெளிவு பிறந்ததுபோல இருந்தது. "மாயா... செங்க நான் ரொம்ப கேட்டதா சொல்லு."

“ஆமாண்ணே... ஏதோ அவசரத்துல பேசிப் புட்டேன். தப்பா எடுத்துக்காதீங்க...”

“அட விடப்பா! தேவமாயனுக்கு நம்மளப்பத்தி தெரியாதாக்கும்? இருந்தாலும் மாயா ஒரு தாலிய கட்டுமுன்ன உனக்கு இந்த அவசரம் கூடாது...”

“இப்ப என்ன... வர்ற வெள்ளிக்கிழமையே கருப்பராயசாமி முன்னால ஒரு தாலிய கட்டுனா தீர்ந்துச்சு. கல்யாணச் சீரா பாளையத்தார் வீட்டு பொன்னையும், மணியையுமே வெச்சு ஜமாய்ச்சிடு வோம்...”

சகாக்களிடம் பேச்சு அப்படியே மாறிவிட்டது. முன்பு கோபமும், தாபமுமாகப் பேசியவர்கள் இப்பொழுது உற்சாகத்துக்கும், உத்வேகத்துக்கும் மாறி இருந்தார்கள்.

தேவமாயனும் அதை எல்லாம் ரசித்தபடியே அங்கிருந்து அகலக் காலெடுத்தவன் சிறிது தூரம் வரை சென்றுவிட்டுத் திரும்பி வந்து கிடாரியையும், மூக்கனையும் பார்த்தான்.

“என்ன மாயா...?”

“பாளையத்தாருக்கு ஒரு மக இருக்கால்ல?”

“ஆமாம்... ஒரு மக... ஒரு மகன். ஏன்?”

“மகளுக்கு கல்யாண வயசாகுதுல்ல?”

“ஆமா!”

“அப்ப அவதான் நம்ம துருப்புச் சீட்டு. அவளை எப்படியாவது மடக்கி இங்க கொண்டுகிட்டு வந்து டுங்க.”

“மாயாாாா!”

“சொன்னதைக் கச்சிதமா பிசிறில்லாம செய்ய ணும். ஞாபகம் வெச்சுக்குங்க...” - அதட்டலான

கட்டளையைப் போட்டுவிட்டு மாயன் புறப்பட அவர்களிடம் அதிர்ச்சி,

## 9

'அழகர் மலை காவல் அந்தக் கருப்பசாமிக்கு!
மலைமேலொரு காவல் அது ராக்காயிருக்கு.
அந்த சாமியோட அம்சம்தான் தேவமாயன்.
ராக்காயி தேவியோட அம்சம்தான் அந்த
செங்கமலக்கன்னி!'

**சொ**ர்ணத்தைக் கடத்திவரச் சொல்லிவிட்டு தேவமாயன் சென்றுவிட்டான். ஆனால் அவளை எப்படிக் கடத்தி வருவது? கிடாரியும், மூக்கனும் மூளையைக் கசக்கிக்கொள்ள ஆரம்பித்தனர்.

"எதுக்கு இப்ப இந்த வேண்டாத வேலை...?" என்ற கேள்வியோடு ஒரு கள்ளன் அவர்கள் அருகே வந்தான்.

"கடைசி களவு... அத்தோட சுதாரிச்சுகிட்ட பாளையத்தார் வீட்டுக் களவு. ஆகையால அவரு மக நம்ம கைல இருக்கறதுங்கறது ஒரு பிடிதானே? அதுக்கா இருக்கலாம்" என்றான் இன்னொரு கள்ளன்.

"ஆ... இது அமுகுணி ஆட்டம். நாம என்ன சொல்லாம கொள்ளாம ஓட்டைப் பிரிச்சு உள்ற இறங்கி கிடைச்சத சுருட்டிகிட்டு ஓட்றபய கூட்டமா? சொல்லி கில்லி அடிக்கற சாதிடா!"

ஆளுக்கு ஆள் சொர்ணத்தைக் கடத்துவது பற்றிச் சிந்தித்துக் குழம்பத் தொடங்கினார்கள்.

கிடாரியும், மூக்கனும் மட்டும் அவளைக் கடத்த ஒரு வழி கிடைத்துவிட்ட மகிழ்ச்சியோடு கூமாச்சி மலையின் அந்த அடர்வான தளம் விட்டு அவர்க

ளுக்கே உரிய முறையில் நீங்கத் தொடங்கினார்கள்.

முல்லையாற்றில் தண்ணீர் கரைபுரண்டு ஓடிக் கொண்டிருந்தது. கேரளாவில் சக்கை மழை. அதன் எதிரொலிதான் பெரியாற்றுப் பாசன நதிகளில் எச்ச மான தண்ணீர்.

ஆங்காங்கே ஜனக்கூட்டம் ஆற்றுக்குள் இறங்கி மார்பளவு தண்ணீரில் மறுகரை நோக்கி நடந்தபடி இருந்தது. கூடவே ஆடு மாடுகள். தலையை அண் ணாத்தியபடி மூக்கு மட்டும் வெளித் தெரிய சில மாடு கன்றுகள் மூழ்கலோடு நடப்பதைப் பார்க்கப் பரி தாபமாக இருந்தது.

எங்கெங்கோ பாலம் கட்டுகிறார்கள்.

ஆனால் இங்கேதான் அது முக்கியமாகத் தேவைப் பட்டது. அந்த ஆற்றுப் போக்கில் ஓர் இடத்தில் தன் குடுகுடுப்பை வேஷத்தோடு தண்ணீரில் இறங்கி யிருந்தான் தேவமாயன். அவன் தலைக்கு மேலே அவனது அழுக்குத் துணிமூட்டை. பேருக்குத்தான் அது துணிமூட்டை. உள்ளே ரிவால்வாரில் இருந்து கட்டாரி வரை எல்லாம் இருந்தது. கைக்குள் அடங்கி விடும் டிரான்சிஸ்டரும் இருந்தது. தேவமாயனுக்கு சினிமாப் பாட்டென்றால் மிகவும் பிடிக்கும். அதிலும் பழைய பாடல்களில் அதிகமாகவே மனத்தைப் பறிகொடுத்தவன். எனவே எங்கே போனாலும் அந்த பாக்கெட் டிரான்சிஸ்டரும் அவனோடு போய்விடும்.

கூடவே ராசியான கைத்துப்பாக்கி!

அந்தக் கருப்பராயசாமியே வந்து ஆசீர்வாதம் செய்து அவனுக்குக் கொடுத்ததாகத்தான் அவன் சகாக்களே நினைக்கின்றனர். ஒருநாள் ஆஜானு பாகுவாய் ஒருவர் குதிரைமேல் அமர்ந்து வந்து தூங்கிக்கொண்டிருந்த தேவமாயனை எழுப்பி அவன் கையில் இந்தத் துப்பாக்கியைக் கொடுத்து தலை

யையும் வருடிக் கொடுத்துவிட்டுப் போவது போல ஒரு கனவு கண்டான் தேவமாயன். கண் விழித்துப் பார்த்தால் அவன் தலைமாட்டில் அதே துப்பாக்கி. அருகில் மண் தரையிலும் குதிரைக் குளம்படித் தடயங்கள்.

தேவமாயனுக்குப் புரிந்துவிட்டது.

"அண்ணே... உன் பேர்ல மட்டும் நம்ம சாமிக்கு ஏண்ணே இம்புட்டு கரிசனம்? நாங்கள்லாம் அதுக்கு கண்ணுல படலையா?" என்று அவன் சகாக்கள் கூட சந்தோசமாக மனம் புழுங்கினார்கள்.

தேவமாயன் சிரித்துக் கொண்டான்.

அதெல்லாம் முல்லையாற்றுக்குள் இறங்கி நடக்கும்போது தேவமாயனுக்குள் பீறிடுகிறது. கூடவே செங்கமலத்தின் நினைப்பும்.

செங்கமலத்தைப் பார்ப்பவர்கள் அவளை ஒரு கள்ளர் மகளாகவே நினைக்கமாட்டார்கள். அப்படி ஒரு சிகப்பு அவள். அவயவங்களிடமும் நல்ல திருத்தம். ஒரு இடத்தில் கூடுதலாக ஒரு கைப்பிடி சதை கிடையாது.

'யாரோ ஒரு பிராம்மண வயிற்றில்தான் அவள் பிறந்திருக்க வேண்டும். ஆஸ்பத்திரியில் குழந்தை மாறியிருக்க வேண்டும்' என்று வேடிக்கையாக அவள் அப்பனிடம் சிலர் கூறும்போதெல்லாம், "என் மக என் ஊட்ல மருத்துவச்சி பாக்க பொறந்தவடா. இவ பொறந்த அன்னிக்கு வீரபாண்டில மாரி ஆத்தாளுக்கு தேர் கட்டி இழுத்தாங்க. அதான் இங்க இவளும் அந்தத் தேராட்டம் அம்புட்டு அழகோட பொறந்திருக்கா..." என்பான்.

அது என்னவோ தெரியவில்லை. செங்கமலத்தை நினைத்தாலே தேவமாயனுக்கு உடம்பு, மனசு எல்லாமே லேசாகி விடுகின்றன.

ஆற்றின் குளிர்ச்சியைவிட அவள் நினைப்பு அதிக குளிர்ச்சியைத் தருகிறது.

தேவமாயன் தன்னை மறந்து பையப் பைய தண்ணீருக்குள் அவள் நினைப்போடு நடந்துகொண் டிருந்தபோது திடும்மென்று தண்ணீரிடம் ஒரு புது வேகம்! திபு திபுவென்று ஒரு சுழற்சி.

முல்லையாற்றிடம் கொஞ்சம் காட்டாற்றுக் குணம் உண்டு. திடீரென்று தேள் விஷம் உடம்பில் ஏறுகிறமாதிரி அதன் நீர்மட்டம் மளமளவென்று ஏறி விடும். அப்பொழுதெல்லாம் எவ்வளவோ பேரை அடித்துக்கொண்டு போயிருக்கிறது. பெரும்பாலும் கிழவிகள்தான் அகப்பட்டுச் செத்துப் பத்து மைலுக்கு அந்தப் பக்கமாய் அங்கங்கே கரைகளில் பிணமாக ஒதுங்குவார்கள்.

மார்பிலடித்துக்கொண்டே ஆற்றோரமாகப் பிணங்களைத் தேடிச் செல்லவென்றே ஒரு கூட்டம் ஊரில் இருந்தது.

அந்தக் கூட்டத்துக்கு இன்று வேலை வந்து விடும் போலத் தோன்றியது...

'ஐயோ அப்பத்தா... ஆத்தி ராக்கு... என் கண்ணு...' என்று பலமாதிரி ஓலக்குரல்கள். தேவமாயன் கண் எதிரில் ஒரு மூன்று வயது பிஞ்சுக் குழந்தை கடக்கு மடக்கு என்று தண்ணீரைக் குடித்தபடி கடந்து போனது. தேவமாயனுக்கு மனது கேட்கவில்லை. தலை மூட்டையை அப்படியே தண்ணீரில் போட்டு விட்டு அந்தப் பிஞ்சைக் காப்பாற்ற அதன்பின்னே பாய்ந்தான்.

நல்லவேளை...

அந்தப் பிஞ்சு குழந்தையும் அவன் வசமாகி உயிர் தப்பியது. அப்படியே கரை ஏறினான். அவனது மாறு

வேடமெல்லாம் கலைந்து அந்த ராசித் துப்பாக்கியும் ஆற்றோடு போய்விட்டிருந்தது.

குழந்தையின் தாய்க்காரியோ அவன் காலில் விழுந்திருந்தாள். சுற்றி ஒரு கூட்டம் கூடிவிட்டது. அதில் சிலருக்கு தேவமாயனை அடையாளம் தெரிந்து விட்டது.

வாயைப் பிளந்துவிட்டிருந்தனர்.

தேவமாயன் நெடுநேரம் அங்கே நிற்கவில்லை. ஓடிச் சென்று திரும்ப ஆற்றில் குதித்தான். சரியான சொருவால் பாய்ச்சல். தண்ணீருக்குள் உடம்பு புகுந் ததுதான் தெரியும். அதன்பின் அவன் எங்கே எழுந் திருந்தான், எப்படி எழுந்திருந்தான் என்பதெல்லாம் யாருக்குமே தெரியவில்லை.

**கூ**ளையனூர் மொட்டப்பாறை! உச்சி வெய்யி லில் காந்தலடித்துக் கொண்டிருந்தது. மாலை வேளை களில் பறந்து வரும் மயில்கள் அந்தப் பாறை மேட்டின் மேல்தான் இளைப்பாறும். அப்பொழுது அவை அகவிக் கொண்டும், ஆடிக்கொண்டும் போடும் சண்டை பார்க்க நாராசமாக இருக்கும். அந்தப் பக்கமாகச் செல்கின்றவர்கள் கல்லை விட்டெறிந்து அந்த மயில் களைத் துரத்த முயல்வார்கள்.

அதெல்லாம் ரசமான காட்சிகள்.

மொட்டப்பாறைக்குப் பின்னாலே சித்தர்குகை என்று ஒன்று இருக்கிறது. எப்பொழுதோ அதில் ஒரு சித்தர் அடங்கிக் கிடந்தாராம். இப்பொழுது அங்கே வெயில் தாளாத நிலையில் ஆடு மாடுகள்தான் அண்டிக் கிடக்கின்றன. உள்ளேயும் ஒரே சாணி நாற்றம்.

செங்கமலம் அந்தச் சாணி நாற்றத்தைச் சுத்தம் செய்து நீக்கிக் கொண்டிருந்தாள். நொணா மரக்கிளை ஒன்றை ஒடித்து விளக்குமாராக ஆக்கி அதைக் கொண்டே

கூட்டி கீழே விழுந்த கிடந்த பிய்ந்த தென்னை மட்டையைப் பின்னிக் கூட்டி அதில் சாணியையும் அள்ளி வைத்து வெளியே சென்று கொட்டிவிட்டு வந்தாள்.

சித்தர் இருந்தபோது ஒரு மண்சட்டியின் அடிப் பாகத்தையே விளக்காகப் பயன்படுத்தியிருந்தார். அந்த அடிப்பாகம் ஒரு மூலையில் அப்படியே கிடந்தது. அதில் திரியும் இருந்து எண்ணெய்தான் வறண்டிருந்தது.

சட்டென்று செங்கமலத்துக்குள் ஜோதிகர்ப மரத்தின் இலை எண்ணெயின்றி எரியும் என்பது ஞாபகத்துக்கு வந்தது. அபூர்வமான மரம். மொட்டைப் பாறையை ஒட்டியே அதுவும் இருந்தது. ஓடிச்சென்று அதிலிருந்து ஐந்தாறு இலைகளையும் பறித்து வந்து கையில் வைத்துத் தேய்த்து உருட்டி திரியாக்கி, அருகில் கிடந்த சிக்கிமுக்கிக் கற்களை எடுத்து உரசி சருகுகளில் தீமூட்டி பின் அதைத் திரிக்குக் கொண்டுவந்து கோயிலில் தீபம் போடுவதுபோல தீபம் போட்டாள். அந்தக் குகையே ஜெகஜ்ஜோதியாகிப் போனது. சற்றே காய்ந்த ஈர உடம்போடு அங்கே வந்த தேவமாயன் குகையின் பொலிவைப் பார்த்து பிரமித்துப் போனான்.

“வாய்யா...”

“அதான் வந்துட்டேனே... ஆமா இது என்ன குகையா, கோயிலா?”

“நீ இருக்கேல்ல... அப்ப இது கோயில்தான்.” அவள் பதிலை வெகுவாக ரசித்தவன்,

“செங்கமலம்... இருக்கறதைக் கொண்டு சிறக்கறது எப்படிங்கறதுக்கு உன்கிட்டதான் எல்லாரும் பாடம் படிக்கணும். மனசு மட்டும் இருந்தா போதும் மார்க்கம் தானா வரும்னு நல்லாவே புரிய வெச்சுட்டே...”

"எதுக்கு இப்படி என்னை ஏத்தி வெச்சுப் பேசறே. நான் உன் கால் தூசுக்கு சமமாவேனா? போவட்டும் விடு... என்ன இது உடம்பு உடுப்பெல்லாம் ஈரம்?"

அவன் ஆற்றில் நடந்ததைக் கூறி முடித்தான்.

"ஐயோடா... அப்ப அந்த ரேடியோ, துப்பாக்கி அம்புட்டும் ஆத்தோட போயிடுச்சா?"

"ஆமாம் செங்கமலம். ரேடியோ போனா வாங் கிக்கலாம். துணிமணியும் அப்படித்தான். ஆனா சாமி தந்த துப்பாக்கி கைவிட்டுப் போனதுதான் மனசை சங்கடப்படுத்துது."

"எனக்கும்தான்யா... சரி என்ன பண்ணப் போறே."

"தெரியல. ஒண்ணும் புரியல. தேவர்கோயில் பாளையாதிபதிக்கு வேற கன்னத் தகவல் கொடுத்து கச்சிதமா காரியத்தை முடிக்கணும்."

"ஐயோ... உன்னை நான் அவசரமா வரச் சொன் னதே அதைப்பத்தி பேசத்தானே...?"

"என்ன செங்கு. நீ என்ன சொல்லப்போறே?"

"என் அப்பன் உன்னைப் பத்தியே என்கிட்ட நோண்டி நோண்டி கேட்டுகிட்டிருந்திச்சு. நான் பிள்ளை உண்டான விஷயம் அதுக்கும் தெரியும். மாப்ளையைக் கூட்டிகிட்டு வா. கோயில்ல வெச்சு கல்யாணத்த முடிச்சு உட்டுட்றேன். இல்லாட்டி மானக் கேடுன்னும் சொன்னிச்சு..."

"சரி நீ என்ன சொல்றே?"

"நானும் முதல்ல சந்தோஷம்தான் பட்டேன். என் அப்பன் ஒரு ஆள்காட்டியா இருந்தாலும் மாப்ளைங்கறதால உன்னை ஒண்ணும் பண்ணா துன்னு நினைச்சுகிட்டுருந்தேன். ஆனா எங்க ஊட்டு அரிசிப் பானைல பத்தாயிரம் ரூவா பணத்தைப் பார்த் ததுமே பகீர்னுச்சு..."

"பத்தாயிரமா?"

"ஆமாம்... போலீஸ் ஸ்டேஷன்ல புகார் கொடுத்தா எழுதுவாங்களே ஒரு சாணித்தாளு."

"ஆமா..."

"அதால சுத்தப்பட்டுக் கிடந்துச்சு. போலீஸ் ஸ்டேஷன் முத்திரையும் இருந்துச்சு. அப்ப இந்த இன்ஸ்பெக்டரு என் அப்புவை மடக்கிட்டாருன்னு புரிஞ்சுகிட்டேன்..."

"உன் அப்பனுக்குக் காசுதானே பெரிசு. பணம்னாதான் அவன் தன் கண்ணுமுழியைக்கூட வித்துப் புடுவானே..."

"அத விடுய்யா. சாமி நம்ம பக்கம்தான். இல்லாட்டி நான் அதை பார்த்துருப்பேனா. விட்டுத் தள்ளு. என் அப்பு உன்னை வந்து பார்த்து கல்யாணப் பேச்சு பேசினா நீ சம்மதம்னு சொல்லிடக் கூடாது. அதை சொல்லத்தான்யா கூப்ட்டேன்..."

செங்கமலத்தின் அக்கறை... தாலியை விட அவன் அகப்படக் கூடாது என்கிற ஆசை என்று எல்லாமே தேவமாயனை நெகிழ்த்தின.

"செங்கு... உனக்கு ஆனாலும் பெரிய மனசு புள்ள... உன் மான ரோஷத்தை விட என் உசுரையும் மானத்தையும் நீ பெருசா நினைக்கறே பாரு..."

அதீதமாக உணர்ச்சிவயப்பட்டான் தேவமாயன். அப்படியே அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

சற்றே புடைத்திருந்த அவளது வயிறும் அவன் வயிற்றோடு பொருந்தி இளம் சூட்டுணர்வு உடம்பு முழுக்கப் பரவியது. சட்டென்று தலையைத் தாழ்த்தி வயிற்றருகே காதை வைத்துக் கண்களை அகட்டித் திறந்தான் தேவமாயன்.

அவள் கூச்சத்தில் நெளிந்தாள்.

“இரு புள்ள... என் மகள் என்ன சொல்றான்னு பாக்கேன்...” என்றான்.

“மகளோ... மகனோ... ஆரு கண்டா...”

“அப்படிச் சொல்லாதே... எனக்கு மவதான் வேணும். மகன்னா அவனும் துப்பாக்கியதான் தூக்கு வான். ஏழு தலைமுறையா துப்பாக்கி பிடிச்சு பிடிச்சு கள்ள வாழ்க்கை வாழ்ந்தது போதும் புள்ள.”

“நெசமாவா சொல்றே?”

“சத்தியமா சொல்றேன். நான்கூட இன்னும் இரண்டு நாளைக்குதான் தொழில் கள்ளன். பொறவு மண்ணக்கட்டி உழுவடை செய்யப்போற விவசாயி. இந்தப் பக்கத்துல இல்ல. போலீசும் நம்மை வாழ விடாது. ஆகையால வடக்க எங்கையாச்சும் போய்டு வோம்.”

அவன் அப்படிச் சொன்னதுதான் தாமதம். தேவமாயனை இழுத்துக்கட்டி கன்னம் காது மூக்கு வாய் என்று தறிகெட்டுப் போய் முத்தமாய் பொழிய ஆரம்பித்தாள் செங்கமலம்.

அவனும் விட்டுவிட்டான். ஒருவாறு அவள் அடங்கினாள்.

“ஏ புள்ள... என்மேல உனக்கு இம்புட்டு பாசமா?” துளிர்த்துவிட்ட கண்ணீருடன் கம்மிய குரலுடன் கேட்டான்.

“என்னய்யா அப்படிச் சொல்லிட்டே... எல்லாரும் உசுரைப் பார்க்க முடியாது; அது கண்ணுக்குத் தெரி யாதும்பாங்க. அது பொய்யய்யா. உசுரைப் பார்க்க முடியும். அதுக்கு தேவமாயனுன்னு பேர்கூட உண் டுய்யா...” என்று அவள் சொன்னபோது தேவமாயன், “செங்கமலம்” என்று வெடித்தே விட்டான்.

தங்கமுத்துப் பாண்டியரின் ஃபியட்டும், அவர் மகன் செண்பகப் பாண்டியனின் குதிரை கட்டிய ரேக்ளாவும் ஒன்றன்பின் ஒன்றாகப் புறப்பட்டுப் போக பால்கனியில் இருந்து பார்த்துக் கொண்டிருந் தாள் சொர்ணம்.

வீட்டில் வழக்கம்போல வேலைக்காரர்கள் வெளியே அந்த மாளிகை போன்ற வீட்டு முகப்பில் நெல் கொட்டாரத்தில் இருந்து நெல் மூட்டைகள் வந்து இறங்கியிருந்தன. நெல் அவிக்க ரைஸ் மில்லுக்குச் செல்வதற்காக ஒரு டிராக்டர் டிரெய்லருடன் நின்று கொண்டிருந்தது. அங்கே கிடந்த பல மூட்டைகளில் இரண்டு மூட்டை மட்டும் அவ்வப்போது அசைந்தது. அதை யதார்த்தமாக ஒரு வேலைக்காரனும் பார்த்து விட்டு அருகே சென்று மூட்டையைத் தொட்டதுதான் தாமதம், மூட்டைக்குள் இருந்து கிழித்தபடி ஒரு கை உயர்ந்து நெருங்கிய வேலைக்காரன் முகத்தில் ஒரு குத்தாக விழுந்தது. கிழிந்த மூட்டையிலிருந்து நிமிர்ந்து எழுந்தான் கிடாரி!

# 10

'கள்ளனுக்கும் உள்ளமுண்டு
அந்த உள்ளமொரு வெல்லம்!
வெல்லமதை வெறுப்பதற்கு
யாருக்குத்தான் தோணும்!

மூட்டையைக் கிழித்துக்கொண்டு எழுந்த கிடா ரியைப் பார்த்த அந்த வேலைக்காரன் ஸ்தம்பிக்க, அடுத்த நொடியே கிடாரியின் கை மிக வேகமாகச் சுழன்று ஒரு வர்மத் தாக்குதலை அவன்மேல் நிகழ்த்தி முடித்தது. அவனும் அப்படியே வாதம் வந்து விழுந் தவன்போல சுருண்டு விழுந்துவிட்டான்.

கிடாரி தொடர்ந்து புயல்வேகம் காட்டி அந்த மாளிகை போன்ற வீட்டுக்குள் ஓடினான். எதிரில் வந்த வேலைக்காரர்களை நோக்கி பொடிபோல் ஒன்றை உள்ளங்கையில் வைத்து அவர்கள் முன் ஊத, அவர்கள் அப்படியப்படியே சுருண்டு விழுந்தனர்.

சிலர் எதிரே வருவதற்கு அச்சப்பட்டுக்கொண்டு கையில் கிடைத்ததைத் தூக்கி எறிந்து அவனைக் காயப்படுத்தப் பார்த்தனர். அவைகளிடம் இருந்து வளைந்து நெளிந்து தப்பித்த கிடாரி பதிலுக்கு தன் இடுப்பில் இருந்து பூமராங் போன்ற ஒரு ஆயுதத்தை எடுத்து அவர்களை நோக்கி வீச அதுவும் அவர்களை விசையோடு சென்று தாக்கிவிட்டுத் திரும்பி அவன் கைக்கே வந்தது. அவனைப் பார்த்துத்தான் 'காப்பவன் பெரிதா கள்ளன் பெரிதா?' என்ற கேள்வியே பிறந்திருக்க வேண்டும்போல் தோன்றியது. கள்ளனே பெரியவன் என்கிற விடைக்கு ஏற்ப அவனிடம் செயல் வேகம். இறுதியாக பால்கனியில் சொர்ணம் எதிரில் போய் நின்றான்.

அவளும் ஏராளமாய் அதிர்ந்தாள்.

“ஆத்தி... கும்பிட்டுக்கறேன். உன்னைக் கடத்திகிட்டு வரச் சொல்லி எனக்கு உத்தரவு. நீயா வந்துட்டா உனக்கு நல்லது. உம்மேல என் நிழல்கூட படாம கூட்டிகிட்டு போயிடுவேன். மறுத்து முரண்டு பிடிச்சா நான் தூக்கிகிட்டுதான் போகவேண்டியிருக்கும். வசதி எப்படி?”

ஆவேச மார்பில் வியர்வை புரண்டு ஓட கிடாரி கேட்டவிதம் சொர்ணத்தை ஒரு உலுக்கு உலுக்கியது. மருள மருள சுற்றிலும் பார்த்தாள்.

“ஒரு ஆள் கிட்ட வரமாட்டான். கணக்கு பண்ணித் தான் ஆத்தா வந்துருக்கேன். கத்தி கூப்பாடு போட்டெல்லாம் ஒண்ணும் பண்ண முடியாது.

தேவமாயன் கூட்டத்து கள்ளத்தனம்கறது கூத்துல படிக்கற பாட்டுமாதிரி தெளிவான ஒரு விசயம். ஆகையால எதுத்து சண்டித்தனம் பண்ணாம ஒண்டி ஒடுக்கமா வந்தா உனக்குதான் நல்லது. நீ எப்படி வர்றியோ அப்படியே உன்னைத் திரும்பக் கொண்டு வந்து சேர்த்துடுவோம். திரும்பவும் சொல்றேன், எங்க நிழல்கூட உன் மேல படாது. அது நீ நடந்துக் கிறதுல இருக்கு..."

கிடாரியின் விளக்கத்தைத் தொடர்ந்து சொர்ணம் எந்த எதிர்ப்பும் காட்டாமல் அவனுடன் புறப் பட்டாள். கண் இமைகள் துடிதுடிக்க சுற்றிச் சுற்றிப் பார்த்தபடி நடந்தாள். அங்கங்கே வேலைக்காரர்கள் விழுந்து கிடந்தனர். இருட்டு அறையில் அம்மத் தாளின் இருமல் சப்தம் மட்டும் கேட்டது.

"அம்மத்தா மருந்து சாப்பிடும். அதமட்டும் கொடுத்துட்டு வந்துட்றேன்..." என்றாள்.

"மருந்தமட்டும் கொடு... வேற எதாவது பண்ணப் போய் எகணைக்கு மொகணையாகிடப் போகுது..." என்றான் கிடாரி.

அதேபோல உள்ளே நுழைந்து மருந்துக்குப்பியை எடுத்து அம்மத்தாளுக்கு மருந்தைக் கொடுத்து நெஞ்சைத் தடவிவிட்டாள்.

அம்மத்தாளின் காதுப் பாம்படமும், கழுத்துச் சங்கிலியும் கால்கிலோவுக்கு கனத்தது. காதுப் பாம் படத் துவாரத்தில் ஒருவர் கையை நுழைக்கலாம். அத்தனை பெரிய துவாரம்.

"ஊர் தங்கம் பூரா உங்க அம்மத்தா காதுல கழுத்துல தான் இருக்கு போல..." என்றபடியே அவ ளோடு வாசலுக்கு வந்தவன், "நாம எத்தையும் கொண்டுகிட்டும் வர்றதில்லை, கொண்டுகிட்டும் போகப்போறதில்லை... இதை, கடலை உடைச்ச

மாதிரி சொன்ன ஒரே இனம் இந்த நாட்டோட இனம்தான். கீதைல கிஸ்னன் சொன்னதைத் தான் சொல்றேன். ஆனா பாரு இந்த தேசத்துலதான் உலகத்துலையே தங்கமும் அதிகமா இருக்குதாம்.

எங்கள மாதிரி ஆம்பளைகிட்ட இடுப்பு துண்டும் பிஞ்ச செருப்பும்தான் இருக்குது. ஆனா ஒவ்வொரு பொட்டச்சி கழுத்துல காதுலையும் குறைஞ்சது மூணு பவுனுக்குக் குறையாது. கிட்டத்தட்ட பத்தாயிரம் ரூவா மதிப்பு. வேடிக்கையா இல்ல.

சோப்புங்களே அழுக்கா இருக்கறது இந்தியா வுல மட்டும்தான்...” என்று கிடாரி பேசிய புதிய பொருளாதாரப் பேச்சையும் அந்த நிலையிலும் ரசித் தாள் சொர்ணம்.

வெளியே ஒரு பழைய அம்பாஸிடர் ஒன்று ஸ்டார்ட்டிங் கண்டிஷனில் தயாராக இருந்தது. அதன் டிரைவிங் சீட்டில் வெள்ளை உடுப்பில் டிரைவர் ஒருவன். பின்னால் அமர்ந்திருந்தான் மூக்கன். சொர்ணமும் கிடாரியும் காரில் ஏறிக்கொள்ளவும் கார் நல்ல வேகமெடுத்தது.

டிரைவர் மிரட்டப்பட்டிருப்பது அவன் முகம் இருக்கும் விதத்தில் துல்லியமாகத் தெரிந்தது.

**வீ**டு திரும்பிய தங்கமுத்துப் பாண்டியரும், செண்பகப் பாண்டியனும் பேச்சை இழந்துவிட்ட வர்கள் போல எதிரெதிரே அமர்ந்துவிட்டனர்.

சுற்றிலும் முக்கலும் முனங்கலுமாய் சகாக்கள். “ஆண்டே... அவனை இனியும் விட்டுவெச்சா ஊர்ல ஒருத்தர் ஊட்ல ஒரு சாமான் இருக்காது. எதாவது பண்ணியே ஆகணும்” என்று ஒருவர் விசும்பாத குறை யாக ஆரம்பித்தார்.

“இப்பவே ஊர்க் கூட்டம் போட்டு நம்ம ஊர் விடலப் பசங்கள்ள இருந்து வாலிபப் பசங்க வரை

அம்புட்டு பேரையும் தயார்படுத்துவோம். மயக்கப் பொடி மாதிரி ஒண்ணு வெச்சிருக்கான். அதை ஊதுனா அம்புட்டு பேரும் மயக்கமாயிட்றாங்க. அவனுங்களுக்கு மட்டும் எதுவும் ஆக மாட்டேங்குது. ஆகையால எல்லாரும் முகத்தைத் துண்டால மூடிக் கிடுவோம்..."

இன்னொருவன் தன் கருத்தை எடுத்து வைத்தான். இருவர் பேச்சையும் கேட்ட செண்பகப் பாண்டியன் சரேலென்று எழுந்தான். வேகமாக மாடி நோக்கி நடந்தான்.

"எங்கவே கிளம்பிட்டே" தங்கமுத்துப் பாண்டியர் தடுத்தார்.

"இப்பவே போய் அம்புட்டு துப்பாக்கி தோட்டா வையும் கொண்டுகிட்டு வரேன். போதாதுக்கு கள்ளத் துப்பாக்கி காதர்பாய்க்கு தகவல் கொடுத்து ஒரு நூறு துப்பாக்கியும் வாங்கிகிட்டு வரேன். அந்தப் பயலை யும் அவன் ஆள்களையும் இந்த ஊர்ல எங்க கண் டாலும் சரி குருவிக்குஞ்சை சுட்றாப்போல சுட்டுப் பொசுக்கிப்புடணும். அந்த தேவமாயன் தலக்கொம்பை நானே அறுக்கறேன். அவன் சுள்ளானா இல்லை நான் சுள்ளானாங்கறதையும் பாத்துப்பிட்றேன்..."

செண்பகப் பாண்டியனின் பேச்சில் நெருப்பு எரிந்தது. ஊருக்குள்ளும் விஷயம் பரவிவிட்டது.

வாத்தியார் வைத்தி, வைத்தியர் பூதலிங்கம், அடகுக் கடை அருணாச்சலம் என்று ஒரு செட் எப் போதுமே ஒன்றாகச் சுற்றும், அவர்கள் பேசிக்கொள் வதும் தனிதான்.

"பூதலிங்கம்... என்னய்யா இது கொடுமை, பாளையக்காரன் பொண்ணையே கொண்டுகிட்டு போய்ட்டான் அந்த தேவமாயன். இந்த ஆள் கித் தாப்பையெல்லாம் ஒரே கொளுத்தா கொளுத்திப் புட்டானேப்பா..?"

"அடுத்து உன் மவதான். சாக்ரதையா இருந்துக்க."

"வாய மூடு. இனியும் இந்த ஊர்ல என் மவள வெச்சிருக்க நான் என்ன கொங்காப்பயலா? மதுரை ஜெய்ஹிந்துபுரத்துல இருக்கற என் மச்சினன் ஊட்டுக்கு பஸ் ஏத்தி உட்டுபுட்டேன்ல..."

"மொத்தத்துல தேவமாயனைப் பிடிச்சுக் கொடுக்க ஒருத்தனுக்கும் துணிச்சல் இல்லன்னு சொல்லாம சொல்றே?"

"அட போப்பா... அவனுக்கு குத்தறதும் வெட்றதும் தான் பொழப்பு. நாம் அப்படியா? இந்த மாதிரி ஆளுங்கள போலீஸ்கிட்ட உட்டுப்புடணும். வெட்டியா சம்பளத்தை வாங்கிகிட்டு சைக்கிள் லைட் இல்லை, டிரைவிங் லைசென்ஸ் இல்லை, அது இல்ல இது இல்லன்னு அவனுங்கள ஐம்பது ரூபாய்க்கு அலைய உட்டுபுட்டோமே... நல்லாவா இருக்கு...?"

"நீ என்ன சொல்றே... போலீசுக்குப் போகணும் கறியா?"

"போனா என்ன தப்புங்கறேன். நமக்கு என்ன தலையெழுத்துன்னும் கேக்கறேன்."

"எலே, நம்ம தேவர்கோயிலுக்குன்னு ஒரு பெருமை இருக்குல்ல. அதை ஏலம் உடச் சொல்றியா?"

"வாடீச... உங்க பெருமைல இடி விழ. அதான் ஊரு பூந்தே தூக்கிட்டுப் போய்ட்டான்ல? முதுல்ல கழுத்துச் சங்கிலில கைவெச்சான். இப்ப அந்த கழுத்துலையேல்ல கை வெச்சுட்டான். உங்க பெருமை என்னா ஆச்சு?"

"அதுவும் சரிதான்... இத்தனைக்கும் சொந்த மருமவனே போலீசுல இருக்குறான். ஒரு தும்மல் போட்டா போதும், ஆயிரம் போலீஸைக் கொண்டு கிட்டு வந்து அரண் கட்டிடுவான்."

அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே புழுதி பரக்க பரமேஸ்வரனின் போலீஸ் ஜீப் அவர்களைக் கடந்து போனது.

"எலே அருணாச்சலம் நாம பேசிகிட்டிருக்கும் போதே போலீசு போகுது பார். இனி நமக்கு நல்ல காலம்தான்."

"அட விளங்காதவனா இருக்கியேப்பா. பாளை யத்தார் மருமவபிள்ள காதுக்கு விசயம் போயிருக்கும். அதான் என்ன ஏதுன்னு தெரிஞ்சுக்க வந்துருப்பாரு. நீ வேணா பாரு... பாளையத்தார், நீ போய் உன் வேலையைப் பாரு, என் மகளை மீட்டுக்க எனக்குத் தெரியும்னு சொல்லப் போறாரு. இந்தாளும் மூஞ்சி செத்துப் போய்த்தான் திரும்பப் போறான்..."

அவர்கள் பேசிக்கொண்டது அப்படியே நடக்க ஆரம்பித்தது. பாளையாதிபதியாகிய தங்கமுத்துப் பாண்டியர் அதே வார்த்தையைத்தான் பரமேஸ்வரன் எதிரில் உதிர்த்தார்.

"மருமவப்புள்ள... நீங்க போய் உங்க வேலையப் பாருங்க. என் மவளை மீட்டுக்க எனக்குத் தெரியும். தேவமாயன் என் மவளைக் கடத்தியிருக்கலாம். ஆனா இங்க இருக்கறதவிட அங்க அவ நல்லாவே இருப்பா. எனக்கு அவன் மேல நிறையவே நம்பிக்கை இருக்கு..." என்றார்.

பரமேஸ்வரனுக்கு எரிச்சலாகிவிட்டது. செண்பகப் பாண்டியும் அப்பன் பேச்சுக்கு மறுபேச்சு பேச வில்லை.

"மன்னிச்சுக்க மாப்ள... நீ கண்டுக்காம இரு. மிச்சத்த நாங்களே பாத்துக்கறோம். அந்த தேவ மாயன் தேன்கூட்டுல கல் எறிஞ்சுட்டான். கொட்டுப் பட்டு எப்படி சாவப் போறான்னு பாரு..." என்ற

செண்பகப்பாண்டியனை முறைத்துப் பார்த்த பரமேஸ்வரன் மனத்தில் வேறுமாதிரியான முடிவுகள்.

**து**ப்பாக்கிக் குழலுக்குள் ரேடியோ ஆயிலைப் போட்டு பஞ்சைச் செருகி பின் செம்புக்கம்பி ஒன்றால் சுத்தம் செய்தபடி இருந்த தேவமாயன் காதுகளில் தங்கமுத்துப் பாண்டியர் பரமேஸ்வரன் வரையில் சொன்ன கருத்து காதில் விழவும் ஒரு விநாடி அலமலந்துதான் போனான்.

"அது என்னவோ தெரியல மாயா... பாளையத்தாருக்கு தான்கற அந்த ஆணவம் போவலை. சுத்த முட்டாளா இருக்காப்பல! போலீஸ்காரன் ஊட்டுக்கே போய் நான் இருக்கேன்கறான். போடா விளக்கெண்ணை, நான்தான்டா பெரிய ஆள்; நான் பாத்துக்கறேன் நீ போடான்னா அந்த ஆளுக்கு எம்புட்டு கொழுப்பு சேர்ந்துருக்கணும்..."

ஒன்பது பேர்களில் ஒரு கள்ளனான கண்ணாயிரம் என்பவன் கருத்து சொன்னதுதான் தாமதம் அவன் கன்னத்தில் பளார் என்று ஒரு அறைதான் விழுந்தது.

"மாயாாாா..."

"வாயப் பொத்து. எதையும் புரிஞ்சு பேசணும். பாண்டியர் உடம்புல யார் உடம்புலையும் ஓடாத ஒரு ரத்தம் ஓடுது. அதை நினைச்சு நான் பெருமைப் பட்றேன். நடக்கற ஒவ்வொரு விசயத்தையும் கேள்விப் படும்போது இந்தக் களவுக்குப் போகணுமான்னு கூடத் தோணுது..."

தேவமாயன் திகட்டலாகப் பேசியதைக் கேட்டு சகாக்கள் ஒருவரை ஒருவர் அதிர்ச்சியோடு பார்த்துக் கொண்டனர். தேவமாயனும் எழுந்திருந்தான். நேராக சொர்ணத்தை அடைத்து வைத்திருக்கும் குகை போன்ற பரப்புக்குள் நுழைந்தான்.

தீப்பந்த வெளிச்சத்துக்கு நடுவில் ஒரு பாறை மேல் அம்மன்போல அவளும் அமர்ந்திருந்தாள். அவளைப் பார்த்தவன் கை எடுத்துக் கும்பிட்டான். அப்படியே பேசத் தொடங்கினான்.

"ஆத்தா... ஒரு விசயமாத்தான் உன்னைக் கடத்திகிட்டு வரச் சொன்னேன்.... எதுக்குக் கடத்திவரச் சொன்னேனோ அது தெளிவாயிடிச்சு. இனியும் உன்னை நான் இங்க வெச்சுகிட்டிருந்து உங்க அப்பா மனசை வேதனைப்படுத்த விரும்பல. நீ புறப்படு. உன்னை உங்க வீட்ல நானே விட்டுட்றேன்"

என்ற தேவமாயனை அவள் ஆச்சரியமாகப் பார்த்தாள். அதேசமயம் அந்த மலையின் அடிவாரத்தில் ஒரு மலைப்பாரியன் வேடத்தில் சப் இன்ஸ்பெக்டரான பரமேஸ்வரன்!

## 11

'சொல்லுல நில்லு... நீ எப்பவும்
சொல்லுல நில்லு!
சொல்லுல நின்னா நீயும்
தெய்வமும் ஒண்ணு!'

**ம**லை முழுக்க ஒரே மஞ்சுப் பொதி. எங்கே யார் இருக்கிறார்கள் என்றே தெரியாதபடி அப்படி ஒரு மூட்டம்.

பரமேஸ்வரனுக்கு அந்தப் பனிமூட்டத்துக்கு நடுவில் பாதை கண்டு மேலேறுவது என்பது மிகச் சிரமமாக இருந்தது. ஒத்தை ஆளாக வந்துவிட்டது ஒருபுறம் உலுக்கினாலும் கூட்டமாக அந்த மலைப் பகுதியில் கால்வைத்து மேலேறுவது என்பதெல்லாம் தேவமாயன் கூட்டத்தின் கையில் 'இந்தா என் குடுமி...

பிடித்துக்கொள்' என்று கூறுகிற மாதிரியான ஒரு விஷயம்.

எனவேதான் பரமேஸ்வரன் தனி ஆளாகக் கிளம்பி வந்துவிட்டிருந்தான். உடுப்பில் பாரியனாக இருந்தபோதிலும் நடக்கும் நடையில் தடுமாற்றம் இருந்ததால் அவன் போட்ட மாறுவேடம் சரியாக அவனுக்குப் பொருந்தவில்லை. அதை ஒரு மலை மேட்டுப் பாறையில் நின்றபடி பைனாகுலர் வழியாக தேவமாயன் பார்த்துக் கொண்டிருந்ததுதான் ஆச்சரியம்.

அருகில் சற்றுத் தள்ளி நின்றுகொண்டிருந்தாள் சொர்ணம். அவளிடம் பைனாகுலரை நீட்டியவன், "கீழே யாரு வர்றா பாரு..." என்றான்.

அவளும் வாங்கிப் பார்த்தாள். ஆனால் அவளுக்கு ஒரு மலைப்பாரியன்தான் கண்களில் தெரிந்தான். எனவே சற்று திருதிருவென்று விழித்தாள்.

"என்ன தாயி... அது யார்னு தெரியலியா?"

"................."

"சப் இன்ஸ்பெக்டர் பரமேஸ்வரன். உன் உறவுக்காரப் பையன்."

தேவமாயன் எடுத்துக் கொடுக்கவும் அவள் கண்கள் அகண்டன.

"பரவால்ல.. உன்மேல பயலுக்குப் பாசம் கொஞ்சம் கூடத்தான் இருக்கு. இல்லாட்டி உங்க அப்பு வேணாம்னு சொல்லியும் இப்படி ஒத்தயாளா மேல தேடி வருவானா?"

"பரமேஸ் அத்தான் இங்க எப்படி?"

"என்ன தாயி பேசறே. அவன் துடியான போலீஸ்காரன். எங்களை எல்லாம் புடிக்க துடிச்சுகிட்டிருக்

கான். நாங்க இருக்கற இடத்தைத் தேடித்தான் வர்றான்..."

தேவமாயன் எந்த பயமும் இன்றிப் பேசியதைக் கேட்டவளுக்குள் கொஞ்சம் வியப்பு, கொஞ்சம் பயம்.

"என்ன பாக்கே?"

"அவர் வர்றாரே... நீங்க நின்னுகிட்டே இருக்கீங்களே..."

"ஓடி ஒளியச் சொல்றியா?"

"........................"

"பைத்தியக்காரப் புள்ள... இது என் கோட்டை. இங்க நான் வெச்சதுதான் சட்டம். ஒருவகைல அவன் இங்க வர்றதுல எனக்கு சந்தோசம்தான். உன்னை அவன் கைல அழகா ஒப்படைச்சுட்டு நானும் இப்படியே திரும்பிடுவேன் பாரு..."

தேவமாயன் ஒரு திட்டத்தோடுதான் பேசினான். அப்படியே கீழே பல நூறு அடி ஆழத்தில் தடவித் தடவி மேலேறியபடி இருக்கும் பரமேஸ்வரனைப் பார்த்து "ஏய்ய்ய்..." என்று ஒரு குரலும் கொடுத்தான். பரமேஸ்வரன் கவனமும் குரல் வந்த திக்கைப் பார்த்தது. பாறைமேல் ஒரு தேவதைபோல சொர்ணம் நின்று கொண்டிருந்தாள். கையை அசைத்து தானிருப்பதையும் உணர்த்தினாள்.

"சொர்ணம்ம்ம்..."

"நானேதான் பரமேஸ் அத்தான்..."

"அங்கேயே இரு வந்துட்றேன்..." அவளைப் பார்த்த நொடி ஒரு புது வேகம் பிறந்துவிட்டது பரமேஸ்வரனிடம். மிக வேகமானான்.

அவளை நெருங்கியபோது அருகே தேவமாயன் இல்லை.

"சொர்ணம் நீ இங்க தனியாவா இருந்தே..."

"எல்லாத்தையும் நான் போகும்போது சொல்றேன். முதல்ல கிளம்புங்க..."

"இரு... இங்க எப்படி நீ வந்தே? எங்க அந்த தேவமாயன் ஆளுங்க?"

"எல்லாத்தையும்தான் போகும்போது சொல்றேன்னு சொன்னேன்ல..." சொர்ணம் முன்னால் நடந்தாள்.

"அது சரி... என்னை எப்படி அடையாளம் தெரிஞ்சிச்சு உனக்கு...?"

"சொல்றேன்..."

"என்ன சொர்ணம், உன்னைப் பார்த்தா கடத்தப் பட்ட ஒரு பொண்ணு மாதிரியே தெரியலையே!"

"சொல்றேன்..."

"நில்லு... கீழ இறங்கிட்டா தேவமாயன் கூட்டத்த பிடிக்க முடியாது..."

"மேல ஏறினாலும் உங்களால பிடிக்க முடியாது. நாம இரண்டு பேரும் இப்ப பிரச்சினையில்லாம போய்க்கிட்டிருக்கவே கூட தேவமாயன்தான் காரணம்..."

சொர்ணம் சொன்னது உண்மைதான் என்கிற மாதிரி ஒரு காட்டு நாய் பரமேஸ்வரன்மேல் பாயப் பார்த்து எங்கிருந்தோ வந்த ஒரு துப்பாக்கிக் குண்டால் அப்படியே தூக்கி எறியப்பட்டு எங்கோ போய் விழுந்தது.

பரமேஸ்வரனுக்கே ஒரு க்ஷணம் வாய்வழியே வெளியே வரப் பார்த்து பின் உள் அடங்கியது. தேவமாயனும் ஒரு மரக்கிளையில் துப்பாக்கி முனையில் புகையை ஊதியபடியே கீழே சொர்ணம்

பரமேஸ்வரனை அழைத்துச் செல்வதைப் பார்த்தபடி இருந்தான்.

அவன் முகத்தில் ஒரு குறுஞ்சிரிப்பு!

சீறிக்கொண்டு நின்ற ஜீப்பில் இருந்து கீழே இறங்கினாள் சொர்ணம். கூடவே பரமேஸ்வரன்!

இருவரையும் ஒருசேரப் பார்க்கவும் தங்க முத்துப் பாண்டியரின் அந்த அரண்மனை போன்ற வீடே திமிலோகப்பட்டது. திபுதிபுவென்று ஓடி வந்தார்கள். வாசல்புறமாக மரத்தடியில் கட்டப்பட் டிருந்த மயிலைக் காளைகூட தன் பெரிய கரிய விழிகளால் சொர்ணத்தை உற்றுப் பார்த்தது.

தங்கமுத்துப் பாண்டியரும் செண்பகப் பாண்டிய னும் கூட எதிரில் வர பரமேஸ்வரன் செருக்கோடு மீசையை நீவிக்கொண்டான்.

"ஆத்தி... எங்க தாயி போயிட்டே?" பாண்டியர் பதற ஆரம்பித்தார்.

"எல்லாம் இங்க இருந்துகிட்டே கேளுங்க. கம்ப்ளைண்டும் கொடுத்துடாதீங்க. நீங்களும் தேடிப் போயிடாதீங்க..."

பரமேஸ்வரன் இடையில் புகுந்து வெடித்தான். தங்கமுத்துப் பாண்டியர் பதிலுக்கு அவனை ஒரு மாதிரி பார்த்தவர், "நீங்கதான் போய் என் மகளைக் காப்பாத்தி இழுத்துகிட்டு வந்தவரோ?"

"அப்படிச் சொல்ல முடியாது மாமா. நான் சொர்ணத்தைத் தேடி மலைக்குப் போனேன். என்னவோ தெரியல - பாதி வழியிலயே சொர்ணம் கண்ணுல பட்டா. சரிதான்னு கூட்டிகிட்டு வந்துட் டேன். ஆனா அங்க என்ன நடந்துச்சு, ஏது நடந்துச் சுன்னு எதைக் கேட்டாலும் தெரியாதுங்கறா. அந்த

தேவமாயன்தான் இவளை மிரட்டி, வாயடைக்க வெச்சிருக்கான்னு நினைக்கறேன்."

பரமேஸ்வரனின் கருத்தைத் தொடர்ந்து தங்க முத்துப் பாண்டியர் பார்வை நேராக சொர்ணத்தைத் தான் ஊடுருவியது.

அவள் முகத்தில் எந்த சலனமுமில்லை.

"சொர்ணம்..."

"................"

"ஏ புள்ள... உன்னத்தான்! என்ன நடந்துச்சு? மாப்ளை பரமேஸ் சொல்றது உண்மையா?"

"தயவுசெய்து அந்த தேவமாயன் பத்தி மட்டும் எதுவும் கேக்காதீங்கப்பா. எப்படிப் போனேனோ அப்படியே திரும்பி வந்துட்டேன். எனக்கு எதுவும் ஆகலை. ஒரு ரோஜாப் பூவை அதோட இதழ் உதிர்ந் துட்டா என்ன பண்றதுன்னு ஈரத்துணியில வெச்சு பாதுகாக்கற மாதிரி என்னைப் பாதுகாத்தாங்க அவங்க! எனக்காக நீங்க போலீசுக்குப் போவீங்க ளான்னும் ஒரு பரிசோதனை பண்ணாங்க. நீங்க போகலை. என்னை அனுப்பிட்டாங்க. இதுதான் நடந்தது. இதுக்குமேல நான் சொல்லவும் எதுவும் இல்லை. இதுக்கு மேல எதுவும் நடக்கவுமில்லை... நான் திரும்பி வர்ற வழியிலையே பரமேஸ் அத்தான் வந்துட்டார். அதனால என்னை விட்டுட்டுப் போய்ட் டாங்க."

அவளது பதிலைத் தொடர்ந்து பரமேஸ்வர னிடம் சென்றார் தங்கமுத்துப் பாண்டியர். அவன் கையைப் பிடித்து அழுத்திக் கொடுத்தவர் கண்களா லேயே நன்றி என்றார்.

பிறகு "நீ புறப்படு மாப்ள... இனி நடக்க நடக்க நாராயணன் செயல்" என்றார்.

செண்பகப்பாண்டி மட்டும் துப்பாக்கியை ஏந்தியபடி குறி பார்ப்பதும் பின் மடக்குவதுமாகவே இருந்தான்.

ஒரு நாடகம் நடந்து கொண்டிருக்கிறமாதிரி தான் தோன்றியது அவனுக்கு.

"மாமா... சொர்ணம் சொல்றத வெச்சுப் பார்த்தா தேவமாயன் உங்க வீட்ல கன்னம் வைக்க வரப் போறது நிச்சயம்னுதான் எனக்குப் படுது. இப்பக்கூட கெட்டுப் போயிடலை. ஒரு ஜாடை காட்டுங்க போதும். நூறு போலீசை வீட்டைச் சுத்தி இறக்கிட்றேன்."

பரமேஸ்வரனின் துடிப்பைப் பார்த்து ரசித்தவர், "இனிதான் மாப்ள நான் உங்க நிழல்கூட இந்த ஊர்ல படாதபடி நடந்துக்கணும். எப்ப நான் போலீசுக்குப் போகலைன்னு தெரிஞ்ச நிமிஷம் என் மகளைத் திரும்ப அவன் அனுப்பிட்டானோ அப்ப நானும் அதுக்குத் தக்கமாதிரிதானே நடந்துக்கணும்."

"ஐய்யோ மாமா... அவன் ஒரு கள்ளன். ஒண்ணும் தர்மனில்ல."

"தப்பு மாப்ள... அவன் தர்மன்... ஆனா கள்ளன்."

"என்ன மாமா சொல்றீங்க..?"

"உனக்குப் புரியாது... விஷயம் மாறிப் போச்சு மாப்ள. நீ கிளம்பு..."

தங்கமுத்துப் பாண்டியர் பரமேஸ்வரனைத் துரத்துவதிலேயே குறியாக இருந்தார்.

பரமேஸ்வரனும் எவ்வளவுதான் பேசுவான். பெருமூச்சுடன் புறப்பட்டுவிட்டான்.

**கூ**மாச்சி மலை!

அந்தப் பாறைக் குகைக்குள் இருப்பதை எல்லாம் எடுத்துவந்து ஒன்பது பங்காக பங்கு வைத்துக் கொண்டிருந்தான் தேவமாயன்.

ஒரு பித்தளை அண்டா கொள்ளாத அளவு நகை நட்டுகளும் காசு பணமும் கிடந்தது. கைக்கு வந்ததை அள்ளி வைத்தான். அவன் பங்கு போடுவதை யாராவது பார்த்தால் அயர்ந்துதான் போவார்கள்.

பச்சை வாழை இலையில் சுடச்சுட சோற்றை அள்ளி வைக்கிறமாதிரி எல்லாம் கூட இருந்தது. அவன் சகாக்கள் தேவமாயனின் செயலையே மௌனமாக வெறித்துக் கொண்டிருந்தனர்.

சிலர் கண்களில் கண்ணீர் துளிகளின் ஆரம்பம்.

இறுதியாக அந்தக் காலி அண்டா மட்டும் இருந்தது.

அதையும் ஒன்பது பேரில் ஒருவனுக்கே ஒதுக்கியவன், "அம்புட்டையும் எடுத்துக்குங்க. இன்னிக்கு ராத்திரி பாளையத்தார் வீட்டுத் தேட்டைதான் நம்ம கடைசி தேட்டை. அதையும் இதேபோல ஒம்பது பங்காக்கிடுவேன். அப்பால களவ மறந்து ஒழுக்கமா வாழணும். களவாண்ட அளவுக்கு உழைச்சு சம்பாதிச்சு தானதர்மம் பண்ணியிருக்கணும். இதுதான் நம்ம ஒம்போது பேர் நோக்கமா இருக்கோணும்.

வருசா வருசம் சித்ரா பௌர்ணமிக்குதான் இந்த இடத்துக்கே வந்து ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்குவோம். போலீஸ் கேஸ் அது இதுன்னு எதுலையும் மாட்டப்படாது. மீறி ஒருத்தர் மாட்டுனாலும் மத்தவங்க சும்மா இருக்கப்படாது. மாட்னவன் வெளிய வர்றவரை போராட்டம்தான்.

நான் சொல்றதுதான் சத்யமான பேச்சு. கருப்பராய சாமியை மனசுல வெச்சுகிட்டு நான் இப்ப கை நீட்றேன். என்மேல கையை வெச்சு சத்யம் பண்ணுங்க.

நமக்கெல்லாம் உசுரை விட சொல்லு பெரிசு. இங்க நான் சொன்னதெல்லாமும் பெரிசு. எங்க சத்தியம் செய்யுங்க பார்ப்போம்..."

தேவமாயன் தன் வலக்கையை உறுதியோடு நீட்டினான். அவர்களும் வரிசையாக அவன் கரம் மேல் தங்கள் கரங்களை வைத்தனர்.

அவர்களுக்குத் தெரியாது... அந்த சத்தியம்தான் அவர்களைத் தூக்கில் தொங்கவிடப் போகிறது என்று. கைகளுக்குக் கீழே ஒருவன் கற்பூரம் கொளுத்தினான்.

## 12

'போடு ஒரு திட்டம் - இது
பாரதத்து கட்டம்
ஆடு ஒரு ஆட்டம் - ஓடும்
பார் அந்த கூட்டம்'

ஒன்பது பேரின் ஒன்பது கைகளும் ஒன்றின் மேல் ஒன்றாக நிற்க, கீழே முதல் கையாகவும் தாங்கி நிற்கும் கையாகவும் தேவமாயனின் கை இருந்தது. மேலே உள்ள எட்டு பேரின் கைகளும் அவனது கரத்தை அழுத்தின. எவ்வளவோ முறை இதுபோல சத்தியம் செய்திருக்கிறார்கள். அதுவும் கருப்ப ராயசாமி முன்னால் கூடி நிற்கும் போதெல்லாம் சத்தியம்தான் அவர்களை ஒரு புள்ளியில் சேர்க்கும் விஷயமாகவே இருந்து வந்திருக்கிறது.

ஒன்பது பேருக்கும் ஒன்பது விதமான குணம். கிடாரி சரியான மாமிசப் பிரியன். மூக்கனோ மது பானம் என்றால் அதற்காக மொட்டைகூட போட்டுக் கொள்வான். வீரண்ணனுக்கு விரல் கொள்ளாதபடி மோதிரம் போட்டுக் கொள்ள வேண்டும்; கழுத்திலும் தாம்புக்கயிறு அளவுக்கு சங்கிலி மாட்டிக்கொள்ள வேண்டும் என்பது விருப்பம். மச்சக்காரனுக்கு சீட்டாடிக் கொண்டேயிருந்தால் போதும். மாரிமுத்து

வுக்கு புல்லட் பைக்கில் சினிமா ஹீரோ போல் போக வேண்டும். நாட்டாமை செய்ய வேண்டும் என்பதெல்லாம் விருப்பம். ரங்கனுக்கு வட்டிக்கு விட்டு காசு பார்க்கும் ஆசையும், சங்கிலிக்கு அழகான வெள்ளையான பெண்ணை மனைவியாக்கிக் கொண்டு குடும்பம் நடத்தும் வேட்கையும், சிங்கத்தேவனுக்கு தனக்குத் தெரிந்த சிலம்பத்துக்குத் தான் பெரிய ஆசானாக வேண்டும் என்பதெல்லாம் அவரவர் தனித்தனி விருப்பங்கள்.

இருந்தும், கள்ள வாழ்க்கை அவர்களை ஒளிந்து வாழ்பவர்களாகவே ஆக்கிவிட்டது. அந்த ஆசைகளை எல்லாம் ஒரு கனவாகத்தான் அவர்கள் மனத்துக்குள் சேமித்து வைத்திருந்தார்கள்.

தேவர்கோயில் பாளையத்தார் வீட்டுக் களவுக்குப் பிறகு அந்தக் கனவுகள், ஆசைகள் அனைத்துக்கும் உயிர் வரப்போவதாக நினைத்துக் கொண்டார்கள்.

தட்டுபோல வரிசையாகக் கிடக்கும் தன் சகாக்களின் வலதுகைக் குவியலைத் தாங்கியபடியே தேவமாயன் உணர்ச்சிக் குமுறலோடு பேசினான்.

"சகாக்களே...

நாம இந்த மாதிரி எத்தினியோ தடவை நம்ம கருப்பராயசாமி முன்ன சத்தியம் பண்ண கையை நீட்டியிருக்கோம்.

நாம அடுத்தவங்க பொருளை அபகரிக்கற கள்ளங்களாகப் போய்ட்டாலும் சொல்லுல நிக்கற நம்ம சத்தியத்துக்காக சாமியே நமக்குத் துணையா வந்து ஒரு களவுலகூட அது நம்மைக் கைவிடாம இதுநாள்வரை காப்பாத்தி வந்திருக்குது.

நம்ம பலம் களவுல காட்ற சாமர்த்தியம் இல்ல.

நம்ம பலம்கறது சத்தியம்.

நாம இதுநாள் வரை இல்லாதவங்ககிட்ட இருந்து ஒரு சாமானையும் எடுத்தது இல்லை. நம்மால ஒரு உயிரும் போனதுமில்லை. அதுதான் நம்ம விசேஷம். இப்பவும் அதை நினைச்சுத்தான் நான் சந்தோசப்பட்டுக்கறேன். அதேசமயம் நாம ஒரு களவு பண்ணி அதனால ஒரு உயிர் அநியாயமா போனா அதுக்குக் காரணமா நம்மள்ள யார் இருந்தாலும் நாண்டுக்கணும்கறதெல்லாம் நமக்குள்ள நாம வெச்சிருக்கற சட்டதிட்டங்கள். அது வெறும் சட்ட திட்டம் மட்டுமில்ல. சத்தியமும்கூட...”

தேவமாயன் எதனாலோ பழசையெல்லாம் ஒரு முறை உருப்போட்டுப் பேசினான். அது அவர்களுக்கு ஆச்சரியமளித்தது. கைகளை விலக்கிக்கொண்டு இப்பொழுது எதற்கு இந்தப் பேச்சு என்று கேட்க ஆசைப்பட்டவர்களை ஒருமுறை முறைத்து, “கைய எடுக்காதீங்கடா...” என்றான். அந்த அதட்டல், அதில் தொனித்த அதிகாரம் அவர்களை மொத்தமாக அமட்டியது.

“தேவா... இப்ப எதுக்கு அந்த ராமாயணமெல் லாம்? நம்ம கள்ள வாழ்க்கைதான் முடியப்போகுதே...” மாரிமுத்து இடையிட்டான்.

“எதுக்கப்பா பழைய குப்பையைக் கிளர்றே. களவை விட்டுப்புட்ட பிறகு சத்தியத்தையும் விட்டுப் புட்டு சராசரி பணக்காரப் பயலுவ மாதிரி நடந்துப் போம்னு நினைக்கறியா?”

“அட சொல்லுப்பா... நம்ம கருப்பராயசாமி, நம்ம சொல்கட்டு இதெல்லாம் சாவற வரைகூட வரப்போற சங்கதி தேவமாயா. அது ரத்தத்துல ஊறிப் போச்சு. நம்மை அது விடாது. நாமளும் அதை விட முடியாது.”

ஒவ்வொருவரிடம் இருந்தும் ஒவ்வொரு கருத்து வந்து மோதியது. தேவமாயன் நடுவில் ஒரு அமட்டல் சிரிப்பு சிரித்தான்.

“என்னய்யா சிரிக்கறே... நீ எதையோ நினைக்கறே... ஆனா எப்படிச் சொல்றதுன்னு தெரியலை உனக்கு...”

“எதுவா இருந்தாலும் சொல்லு மாயா... நாம எதைப் பாக்கல...”

தேவமாயனும் மெல்ல வாயைத் திறந்தான்: “சகாக்களே... உங்க பேச்சக் கேக்கக் கேக்க சந்தோசமா இருக்கு. நமக்கும் மனசு, அதுல உணர்ச்சி, நமக்குள்ளையும் மனுசத்தன்மை, கூடவே கொஞ்சம் போல தேவகுணமும் இருக்குது. இது காசுக்காரங்களுக்குத் தெரியாம இருக்கலாம். ஆனா கலப்பை புடிச்சு உழுவற ஒரு கூலிக்கார விவசாயிக்குத் தெரியும்.

ஒரு வட்டம் ஒரு வயல்ல நான் நடந்து போனப்ப என்னை யார்னு தெரிஞ்சுகிட்ட ஒரு விவசாயி என் காலடி மண்ணை எடுத்து தன் நெத்தியில பூசிக்கிட்டான்.

‘என்னலே இது... நான் என்ன சாமியாரா, இப்படிக் கோட்டித்தனமா என் காலடி மண்ணை எடுத்து பூசிக்கிறியே?’ன்னு நானும் கேட்டேன். அப்ப அவன் சொன்னான் - ‘எம்புட்டோ கவர்மெண்ட்டு வந்தும் சட்டம் போட்டும் ஏழை பணக்காரன் வித்தியாசத்தைப் போக்க முடியலை. அதேசமயம் பணக்காரன் திமிரையும் அடக்க முடியலை. ஆனா இந்த வட்டாரமே உங்களால அடக்கமா இருக்குது. காசு உள்ளவன்கூட தன்னை ஒரு பிச்சைக்காரன் மாதிரிதான் இங்க காட்டிக்கறான். நீங்க இல்லாட்டி கலப்பைல மாட்டுக்கு பதிலா எங்களைத்தான் கட்டி

உழவடை செய்வாங்க'ன்னு சொன்னப்போ எனக்கு அப்பவே இந்த வாழ்க்கை போதும், செத்துடலாம்னு இருந்துச்சு. எதுக்கு சொல்றேன்னா, நாம களவாண்டு பணக்காரங்களை மிரட்டினதைவிட ஏழை ஜனங் களுக்கு இந்தமாதிரி சகாயம் செஞ்சிருக்கறதுதான் பெருசு.

இப்ப கூட ஒரு முக்கியமான விசயத்தைச் சொல்லப் போறேன். நம்மை எல்லாம் சாமர்த்திய மான கள்ளங்களா மட்டும் அந்தப் பாளையக்காரர் நினைக்கல. நமக்குள்ள ஒரு சத்தியம் இருக்கறதா அந்த ஆளு நம்பறான். அதனால தான் பாளையக் காரர் மவளை நாம இங்க கொண்டுகிட்டு வந்தும் அந்தாளு கலங்கலை. போலீசுக்கும் போகலை. இத் தனைக்கும் போலீஸ்காரனே மருமவன். கட்டிக்கிட்டு வான்னா வெட்டிக்கிட்டே வர்றவன். அந்தப் பொண்ணு சொர்ணமும் நம்மைக் காட்டிக் கொடுக்கலை. ஆகை யால..."

தேவமாயன் இடைவெளி விட்டு, வட்டம் கட்டி கைகளை நீட்டியபடி நிற்கும் தன் சகாக்களைப் பார்த்தான். அவர்கள் திறந்த மார்பில், புஜங்களில் வியர்வையின் வடிசல். அவர்களோ, தேவமாயன் சற்றும் எதிர்பார்க்காத ஒரு விஷயத்தைக் கூறப்போவ தாக நினைத்தனர்.

"சொல்லு தேவா... என்னத்த சொல்லப் போறே... அதனால பாளையத்தார் அரம்மனைல கைவைக்க வேண்டாம்னு சொல்லப் போறியா?"

"எதுக்கு இம்புட்டு அடிக்கோடு- நீ எங்க வரேன்னு தெரியுது. பாளையாதிபதி கொஞ்சம் வித்தியாசமான ஆளுதான். ஆனா அதுக்காக நம்ம மாதிரி ஏழை பாழைங்க மேல அக்கறை உள்ளவன்னு நினைச் சிடாதே.

அவன் ஊட்டுல வேலை பாக்கற மேஸ்திரிங்களைக் கட்டிவெச்சு தோலை உரிச்சிருக்கான்...

அவனைவிட அவன் மகன் செண்பகப்பாண்டி ஊட்ட சுத்தி கண்ணிவெடியா புதைச்சு வெச்சுருக்கான். அது தெரியுமா உனக்கு?"

திரும்பவும் சகாக்கள் குமுறினர். ஆனால் தேவமாயன் திரும்பவும் சிரித்தான்.

"யப்பா... சட்டுன்னு விசயத்துக்கு வா. எம்புட்டு நேரமா இப்படி கைய நீட்டிக்கிட்டே நிக்கறது?"

வீரண்ணன் அலுத்துக்கொள்ள தேவமாயனும் வாயைத் திறந்தான்.

"சகாக்களே... எம்புட்டோ பேசறீங்க. ஆனா உங்களுக்கு என் மனசு தெரியல. நல்லா கேட்டுக்குங்க. நாம பாளையத்தார் ஊட்டை தேட்டை போட்றோம். அதுல எந்த மாற்றமும் இல்லை. அதேசமயம் தங்கமுத்துப் பாண்டியர் கிட்டதான் ரொம்ப எச்சரிக்கையாக இருக்கணும். அந்த மனுசன் மத்தவங்க மாதிரி இல்ல. எல்லாரும் ஆளுங்கள வெச்சும், ஆயுதத்தை வெச்சும் நம்மைப் பிடிக்க நினைக்கறாங்க. ஆனா பாளையத்தார் நம்மளை நம்மைக் கொண்டே பிடிக்க நினைக்கறாரு..."

தேவமாயன் அப்படிச் சொல்லவும் ஒருவருக்கும் ஒன்றும் விளங்கவில்லை.

"அண்ணே- என்னண்ணே சொல்றீங்க?" என்றான் சிங்கத்தேவன்.

"தலை... ரொம்பக் குழப்புறீங்க..." என்றான் கிடாரி.

"குழப்பலை... உள்ளதைச் சொல்றேன். நம்மை எல்லாம் பிடிச்சு ஊர்முன்னால நிறுத்தி வெளிப்படையா மன்னிக்கறதுதான் அந்த ஆளோட எண்ணம்.

அப்படி மட்டும் நடந்துட்டா அதைவிட ஒரு கேவலம் நமக்கு எதுவும் இருக்க முடியாது."

தேவமாயன் எங்கு வருகிறான் என்பது இப்போதுதான் அவன் சகாக்களுக்கு மெல்ல விளங்க ஆரம்பித்தது.

"விளங்குது மாயா... நீ எங்க வரேன்னு நல்லாவே விளங்குது. போலீசுக்குப் போகாம அந்த ஆள் தனியா திட்டம் போடும்போதே தெரிஞ்சுபோச்சு, இப்படி திகிடுதம்பா எதாவது நடக்கும்னு. ஒரு ஏழை நம்மை வாழ்த்தலாம். ஆனா ஒரு பணக்காரன் நம்மளைப் பிடிச்சு மன்னிக்கறது பெரிய கேவலம்."

"ஆகையால ரொம்ப கவனமா நம்ம திட்டம் இருக்கணும்."

"எதுக்குக் கவலை... வழக்கம்போல கருப்பராய சாமி நமக்குக் காவல் இருக்கும்போது நமக்கு என்ன கவலை..."

"அவர் காவலால நான் இன்னொரு வேலை யையும் செய்திருக்கேன்" புதிர் போட்டான் தேவ மாயன்.

"என்ன தல அது..."

"இப்ப பாருங்க... உங்களுக்கெல்லாம் விளங்கும்..." தேவமாயன் சொல்லிவிட்டு சத்தியக் கைகளை விலக்கிக் கொள்ளவும் சொன்னான்.

பிறகு வாய்க்குள் விரலைவிட்டு ஒரு விசில் சப்தம் எழுப்பினான். யாருக்கு இந்த சிக்னல் எனும்போது பக்கமாய் இருந்த மலைப் புதர் ஒன்றுக்குள் இருந்து திபுதிபுவென்று ஒரு பத்துப் பேர் எழுந்து வந்து கையில் கம்புடன் அடியாட்கள் போல நின்றனர்.

சகாக்கள் ஒன்பது பேருக்கும் உதறல் எடுத்தது. யார் இவர்கள்?

"தெரியலயா... இவங்கதான் பாளையத்தார் ஊட்ல வேலைல இருக்கறவங்க. அம்புட்டு பேரும் அந்த மாளிகை மேஸ்திரிங்க. இங்க இப்ப நம்ம ஆளுங்க!" தேவமாயன் கூறவும் அவன் சகாக்கள் வாயைப் பிளந்துவிட்டனர்.

"பாளையாதிபதியோட காவலையே நான் விலைக்கு வாங்கிட்டேன். அடிக்கற கொள்ளைல முதல் பங்கு இவங்களுக்குத்தான். கால காலமா பாடு பட்டும் இவங்க கண்டதெல்லாம் வருஷத்துக்கு பத்து மூட்டை நெல்லும், நூத்திப்பத்து ரூபா சம்பளமும் தான். ஆகையால முத நியாயம் இவங்களுக்குத்தான்..."

தேவமாயன் அப்படிக் கூறியதுதான் தாமதம், சகாக்கள் பலமாகக் கைதட்டி அதை ஆமோதித்தார்கள்.

"இந்த விசயம் பரம ரகசியம். நாம மாறுவேஷத்துலயும் மாயமாவும் போய் பாளையத்தார் எதிர்க்க நிற்கும்போது இவங்கள வெச்சு மடக்கறதாதான் பாளையக்காரர் எண்ணம். ஆனா அப்ப இவங்க நம்பகூட சேர்ந்து களவாடப் போகும்போதுதான் அவருக்கு விஷயமே தெரியப் போகுது."

தேவமாயன் தன் திட்டத்தை விவரித்துக் கொண்டே போனான். அதேசமயம் தேவர்கோயிலுக்குள் பிச்சைக்காரர்கள், பாத்திரக்கூலிகள், மூட்டை தூக்குபவர்கள் ரூபத்தில் ஒரு போலீஸ் கூட்டமே நுழைந்துகொண்டிருந்தது!

# 13

'நினைச்சதெல்லாம் நடந்துட்டா
மனுஷன்தானே சாமி?
சாமியா அவன் ஆயிட்டா
தாங்குமா இந்த பூமி?'

ரகசியமாக தேவர்கோயிலே மெல்ல மாறிடத் தொடங்கியிருந்தது. வாட்டசாட்டமான போலீஸ் காரர்கள் தேர்ந்த மாறுவேடத்தில் பாத்திரங்களுக்கு ஈயம் பூசுகின்றவர்கள் போலவும், பழைய பேப்பர் காரர்கள் போலவும், பல மாதிரிகளில் தேவர்கோயி லுக்குள் நுழைந்து கொண்டிருந்தனர்.

சிறிய கிராமம்.

நாயக்கர் மகால் தூணை நான்கு பேர் சேர்ந்து வளைத்துப் பிடித்துவிடுகிற மாதிரி தேவர்கோயி லையும் நாலாபக்கமும் பொடி நடையாக நடந்தே பத்து நிமிடத்தில் கடந்துவிடலாம். எனவே அங் கங்கே விரவிப் பரவி நிற்க மிக வசதியாகிவிட்டது.

பாளையத்தார் வீட்டு வாசல் புறத்திலிருந்து நீளும் சாலையில் ஒரு மரத்தடியாகப் பார்த்து ஒரு தள்ளுவண்டியில் 'எதை எடுத்தாலும் ஒரு ரூபா' என்றபடி ஒரு சப் இன்ஸ்பெக்டர் வந்து நின்று கொண்டார். உள்ளே விதவிதமான துப்பாக்கிகள். கை எறிகுண்டுகள், லத்திகள், வயர்லெஸ் போன் இன்ஸ்ட்ருமென்ட்டுகள்.

பரமேஸ்வரனும் உருமாறியிருந்தான். அவன் முகத்துக்கு ஒரு தனி அழகைத் தருவதே மீசைதான். அதைத் தியாகம் செய்திருந்தான். தலைப்பாகை கட்டி, முகத்தில் ஒரு செயற்கைத் தழும்பையும் உருவாக்கிக் கொண்டு கெந்திக் கெந்தி நடந்தபடி ஊருக்குள் நுழைந்திருந்தான். அவன் கையில் ஒரு கிளிக் கூண்டு.

அவனது அவதாரம் ஜோசியக்கார அவதாரம்.

ஊருக்குள் உள்ளவர்கள் கூட திடுதிப்பென்று நாலாப்புறமும் பேப்பர்காரன், ஈயம் தேய்ப்பவன், ஜோசியக்காரன் என்று திரியவும் கொஞ்சம் சந் தேகத்தோடுதான் பார்த்தார்கள்.

வைத்தியலிங்க வாத்தியார் சற்று கில்லாடி. கிளி ஜோஸ்யக்கார பரமேஸ்வரனை அடையாளம் கண்டு பிடித்துவிட்டார்.

"தம்பி நீங்களா?" என்று வாயைப் பிளந்தார்.

"உங்... தெரிஞ்சாமாதிரி காட்டிக்காதீங்கய்யா" - அதட்டலாக மறுத்த பரமேஸ்வரன் எதிரில் அதற் கேற்ப நடந்து கொள்ளவும் தொடங்கினார்.

"ரொம்ப சந்தோஷம் தம்பி. இந்த மாறுவேசத் துக்குக் காரணம் எனக்கு நல்லாத் தெரியும். எங்க பிரசிடென்ட்டுக்கு ஆனாலும் வறட்டுப் பிடிவாதம். நல்லவேளை நீங்க வந்தீங்க. இனி கவலையில்ல..." என்றார்.

"நீங்க என்கிட்ட இவ்வளவு பேசினதே தப்பு. கண்டுக்காம போயிருங்க. மாமா மோப்பம் பிடிச்சா அப்புறம் மானக்கேடாப் போயிடும்."

"அட என்ன தம்பி நீங்க... ஊர் பொது தம்பி. யார் வேணா வரலாம் போகலாம். அதுலையும் போலீசு உங்களுக்கு இல்லாத ரைட்ஸா..."

"இது ரைட்ஸ் பேசற டைம் இல்ல... ரொம்ப ஜாக்ரைதயா நடந்துக்கணும். என் மாமா, மாமன் மகன் இவங்க சட்டத்தைக் கைல எடுத்துக்கவும் நான் விடக்கூடாது. அதேசமயம் தேவமாயன் ஒரு கைப் பிடி நெல்லையோ, சல்லிக்காசையோ களவாண்டு கிட்டும் போயிட நான் விடக்கூடாது... சரி சரி நீங்க கண்டுக்கிடாம போங்க..."

பரமேஸ்வரன் வாத்தியாரை விரட்டிவிட்டு கெந்திக் கெந்தி நடந்தபடி ஊருக்குள் நடந்தான்.

**சா**ப்பாட்டு மேஜை மேல் சமைத்து முடித்த அவ்வளவையும் அடுக்கிக் கொண்டிருந்தாள் சொர்ணம். சன்னமாக ரேடியோ வைத்திருந்தாள்.

மதுரை வானொலி அலை வரிசையில் புதிய திரைப் படப் பாடல் வரிசையில் 'அண்ணன் ஒரு கோவி லென்றால் தங்கை ஒரு தீபமன்றோ...' எனும் பாடலை பி. சுசீலா பாடியபடி இருக்க, சொர்ணமும் தன்னை இணைத்துக்கொண்டு பாடினாள்.

கச்சிதமாக செண்பகப் பாண்டியன் சாப்பிட வந்து அமர்ந்தபடி அப்படியே சொர்ணத்தை நோட்ட மிட தங்கமுத்துப் பாண்டியரும் பின்னாலேயே வந்தார். "ஏ புள்ள... அந்தப் பொட்டி எப்பப்பார் பாடிக்கிட்டே இருக்கணுமா என்ன?" என்றபடியே அமர்ந்தார்.

"இருக்கட்டும்ப்பா... நடுவுல செய்தி சொல் வாங்க. அப்ப தேவமாயன் திருவிளையாடல் பத்தியும் சொல்லலாம் இல்லியா?" செண்பகப் பாண்டியன் பதிலோடு ஒரு தொடைக்கறியை எடுத்து நன்கு பொன்னிறமாகச் சிவந்த பாகமாகப் பார்த்து வாயை வைத்து ஒரு கடி கடித்தான். எந்த நேரமும் அவன் தேவமாயன் நினைப்பாகவே இருப்பது பாண்டியரை என்னவோ செய்தது. மேஜைமேல் ஒரு மூடிய பீங்கான் பாத்திரத்தைத் திறந்து பார்த்துவிட்டு திரும்பவும் மூடினான். அப்பொழுதுதான் சொர்ணமே அதைக் கவனித்தாள்.

"என்னண்ணே அது...?" என்று மூடியைத் திறந்து பார்த்தவளுக்கு பகீர் என்றது. உள்ளே ஒரு கைத் துப்பாக்கி.

"அண்ணே... இதுல நான் மீன் கறியில்ல வெச் சிருந்தேன்?"

"அது பக்கத்து பாத்திரத்துக்குள்ள இருக்குது. இந்தத் துப்பாக்கி ஒரு பாதுகாப்புக்கு... ஏன்னா அந்த தேவமாயப் பய வல்லாளகண்டன் ஒரு புடவையைச்

சுத்திகிட்டு உன்னை மாதிரியே கூட வருவான். அப்ப கைக்கு எட்ற தூரத்துல துப்பாக்கி இருக்கணுமுல்ல..."

செண்பகப்பாண்டியன் பேச்சுக்கு தங்கமுத்துப் பாண்டியரிடம் பெரிய ரீ ஆக்ஷன் எதுவும் இல்லை.

"என்னண்ணே... எதுவும் பேசமாட்டேங்க றீங்க?"

"என்னத்தப் பேச... எனக்கென்னவோ அந்தப் பய இனி இந்த ஊட்டுப் பக்கம் வரமாட்டான்னுதான் நான் நினைக்கிறேன். நீயோ அவனை விடமாட்டேங் கூறே..."

"இல்லண்ணே... அந்தக் கள்ளனைப் பத்தி உங்க ளுக்கு சரியாத் தெரியல... என் கணக்கு மட்டும் சரியா இருந்தா இன்னேரம் அவன் ஊருக்குள்ள இறங்கி யிருக்கணும். நம்ம ஆளுங்ககூட பழைய பேப்பர்கார னுங்களும், ஈயம் பூசறவங்களும், பிளாஸ்டிக் சாமான் விக்கிறவங்களும் ஏகத்துக்கும் சுத்தி வர்றதா சொன் னாங்க."

செண்பகப்பாண்டி அப்படிச் சொன்னதுதான் தாமதம் தங்கமுத்துப் பாண்டியர் விருட்டென்று நிமிர்ந்தார்.

"ஜோசியம் பாக்கலையோ ஜோசியம்..." வெளியே இருந்து பரமேஸ்வரனும் குரல் கொடுக்க, "இதுவும் அவன் கூட்டத்துல ஒருத்தன்தான்" என் றான் செண்பகப் பாண்டியன்.

தங்கமுத்துப் பாண்டியர் அடுத்த நொடியே தன் வீட்டு பால்கனி நோக்கித்தான் நடந்தார். மேலிருந்த படியே கீழே பார்த்தார். கையில் கிளியுடன் பரமேஸ் வரன். தங்கமுத்துப் பாண்டியர் தன்னைப் பார்ப் பதைப் பார்த்தவன் அவரைப் பாராதமாதிரி திரும்பி நடக்கத் தொடங்கினான்.

"ஏய் நில்லு..." பாண்டியர் குரல் தடுத்தது.

பரமேஸ்வரனும் நின்று திரும்பினான்.

"உள்ளார வா..." - அந்த அழைப்புக்குப் பணிந்து உள்ளேயும் நுழையத் தொடங்கினான். நடையில் ஒரு தடுமாற்றம்... சின்னச் சின்ன தேக்கம். தங்கமுத்துப் பாண்டியர் விறுவிறுவென்று மேலிருந்து கீழே இறங்கி வந்து அவன் எதிரில்தான் நின்றார். பின்னாலேயே செண்பகப்பாண்டியனும், சொர்ணமும் கூட வந்தனர்.

செண்பகப்பாண்டி துப்பாக்கியும் கையுமாகத்தான் வந்தான். பார்வையிலும் அனலடித்தது.

"ஆருவே நீ?"

"ஜோசியக்காரனுங்கோ."

"எந்த ஊரு?"

"எடமலைப்பட்டி..."

"கம்பளத்து நாயக்கனா, இல்லை காசுக்கு கிளி பிடிச்சு வந்தவனா...?"

தங்கமுத்துப் பாண்டியர் குரலில் அதட்டல். கண்களோ அளவெடுத்தன. இத்தனைக்கும் பரமேஸ்வரன் படுதிருத்தமாக மேக்கப் போட்டிருந்தான். எங்கே பாண்டியர் தன்னை உணர்ந்துவிடுவாரோ என்று தலையைத் தாழ்த்தி கிளிக்கூண்டைத் திறந்தான். வேண்டுமென்றே அதை ஓடவிட்டான். அதுவும் ஓடப் பார்க்க அதைப் பிடிப்பது போல பின்னால் ஓடினான். "நில்லு..." - செண்பகப் பாண்டியின் துப்பாக்கி அவனுக்கு நேரே நிமிர்ந்தது.

"களவாணிப் பயலே... மாறு வேஷத்துல வந்தா எனக்குத் தெரியாமப் போயிடுமா? நில்லுடா. ஓடுனே, முட்டியிலையே சுடுவேன்..."

செண்பகப்பாண்டி முடிவே செய்துவிட்டான். ஆனால் பரமேஸ்வரன் முகத்திலோ ஒரு சிரிப்பு.

"என்னவே சிரிக்கே... எம்புட்டு நெஞ்சழுத்தம் இருந்தா மாட்னப் பொறவும் சிரிப்பே நீ...?"

செண்பகப்பாண்டியின் கைகள் அவனை முன் னோக்கி நெருங்கியது. ஆனால் தங்கமுத்துப் பாண்டியர் செண்பகப் பாண்டியளவு உணர்ச்சி வசப்பட்டு வார்த்தைகளைக் கொட்டவில்லை.

"என்ன மருமவப்பிள்ளை... எதுக்கு இந்த வேசம்? நான் தான் ஊர்ப்பக்கமே நீங்க வரக்கூடாதுன்னு சொல்லியிருக்கேன்ல..." என்று கச்சிதமாக அடையாளம் கண்டுகொண்டார் தங்கமுத்துப் பாண்டியர். பரமேஸ்வரனும் தலைப்பாகையை அவிழ்த்து தன் முகத்தை முழுவதுமாகக் காட்டினான். சொர்ணத் துக்கே பிறகுதான் தெரிந்தது.

"எலே மாப்ள நீயா?" - செண்பகப் பாண்டியும் வியக்க,

"செம்பா... எப்பவும் துப்பாக்கியும் கையுமாத் தாம்ப்பா இருக்கே. என்னையே நீ விழுங்கிட்டே" என்றான் பரமேஸ்வரனும்.

ஆனால் தங்கமுத்துப் பாண்டியர் முகத்தில் அநியாய இறுக்கம்.

"என்ன மாமா என்மேல கோவமா?"

"அட போப்பு... ஆமா, உன் ஆளுங்கதானா ஊருக்குள்ளார இறங்கியிருக்கறது..."

"ஆமாம் மாமா... எனக்கு மனசு கேக்கல மாமா. அத்தோட சட்டத்துலையும் இதை எல்லாம் வேடிக்கை பார்க்க இடம் இல்லை மாமா. நாளைக்கே தேவ மாயன் வந்து களவாண்டுட்டுப் போயிட்டான்னா என் மேலதிகாரிங்களுக்கு என்னால பதிலே சொல்ல

முடியாது. என் மாமாக்கு போலீஸே வர்றது பிடிக்கலைன்னு நான் சொன்னா பின்பக்கமா சிரிப்பாங்க..."

பரமேஸ்வரன் பொறுப்பாகத்தான் பேசினான். ஆனால் தங்கமுத்துப் பாண்டியர் அதைத் துளியும் ஏற்கத் தயாராகவே இல்லை. முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டார். "விடு மாப்ள... அப்பா அப்படிதான். அதேசமயம் ஊருக்குள்ள தேவமாயன் கைல அகப்பட்டா நீங்க பார்த்துக்குங்க. ஆனா இந்த வீட்டுக்குள்ள அவன் வந்தா நான்தான் துப்பாக்கிய எடுப்பேன்" என்று தட்டிக் கொடுத்த செண்பகப் பாண்டியன் கன்னத்தில் அடுத்த நொடியே ஒரு அறை விழுந்தது. தங்கமுத்துப் பாண்டியர் தான் கையை உயர்த்தியிருந்தார்.

"அண்ணே..."

"வாய மூடு.... இவன்தான் கூறில்லாம சட்டம் பேசிகிட்டு திரியறான்னா நீயும் இப்ப ஒத்து ஊத ஆரம்பிச்சிட்டியோ?

முட்டாப் பயலே... நான் ஒண்ணும் பழைய பாளையக்கார நினைப்புல என் சக்தியை மகாசக்தியா நினைச்சுகிட்டெல்லாம் இல்லடா.

தேவமாயன் கூட்டம் யார் வீட்டைக் குறி வெச்சு வர்றாங்களோ அவுகளை மட்டும் தாக்குவாங்க. அதுலையும் அவன் சுட்டதால ஒருத்தர் உசுர் போனது கிடையாது. ஆனா இந்தப் போலீசு அப்படி இல்லடா.... கண்ணுமண்ணு தெரியாம சுடுவாங்க. அதுல யார் வேணா சாவலாம். திருட்டுப் பயலுகளா செத்துட்டா பிரச்சினையில்ல. ஊர்க்காரன் ஒருத்தன் போனாலும் போனது போனது தானே? இளசுகளால உசுரைத் திருப்பி வாங்கித் தர முடியுமா? முதல்மந்திரிகிட்ட

சொல்லி 50,000 ரூவா வரை பணத்தை வேணா வாங்கித் தருவாங்க. அதுவா உசுருக்கு விலை?"

"அண்ணே..."

"என்ன நொண்ணே... நான் படிச்சுப் படிச்சு சொல்லிக்கிட்டிருக்கேன். புரியாம நீ இவனுக்கு ஜால்ரா போட்றியே..."

தங்கமுத்துப் பாண்டியர் கோபத்தில் ஓர உச்சத் துக்கே போய்விட்டார். பரமேஸ்வரனுக்கும் தர்ம சங்கடமாகியது.

"தா மருமவப்பிள்ள. உனக்கு மேலதிகாரியாகற ஆசை இருந்தா வேற எங்கிட்டாச்சும் போய் எதை யாவது பண்ணி ஆய்க்கோ. தேவமாயன் விசயத்துல தலையிடாதே. அது முழுக்க முழுக்க என் தனிப்பட்ட விவகாரம்..."

தங்கமுத்துப் பாண்டியர் அப்படிச் சொன்ன போது வீட்டு மேஸ்திரிகளில் ஒருவன் அப்படியே விக்கித்துப் போய்விட்டிருந்தான்.

'இப்படி ஒரு கொள்கைப் பிடிப்புள்ள மனித ரையா இன்று மடக்கி நிறுத்தப் போகிறோம்...' என்றுகூட அவனுக்குள் ஒரு திகட்டல்.

பரமேஸ்வரனோ திரும்பி நடக்கத் தொடங்கி யிருந்தான்.

"அந்தப் பாத்திரத்துக்கு ஈயம் போட்றவன், பிளாஸ்டிக் டப்பா விக்கறவன்னு அம்புட்டு பேரை யும் கொஞ்சம் கூட்டிகிட்டு போய்டு...

ஒண்ணு நிச்சயம். தேவமாயனால யாருக்கும் எந்த சின்ன பாதிப்பும் வராது. ஊருக்குள்றல்லாம் நீங்க ஒண்ணும் பாரா உஷார் பார்த்து பஜனை பாட வேண்டாம்.

அவன் என்கிட்ட அம்புட்டா அவனை மனுஷனாக்கியே தீருவேன். அவனா உங்க ஸ்டேஷனுக்கு வந்து சரணடைவான். அடைய வைப்பேன்.

அப்ப தெரியும் உங்க அதிகாரத்துக்கும் என் நம்பிக்கைக்கும் இருக்கற சக்தி."

பரமேஸ்வரன் நடக்க நடக்க தங்கமுத்துப் பாண்டியர் பேசிக்கொண்டே போனார்.

சொர்ணமும், செண்பகப்பாண்டியனும் கையைப் பிசைந்துகொள்ள சொர்ணம் மட்டும் ஒரு புதிய முடிவிற்கு வந்திருந்தாள்.

**மி**கப்பெரிய ஒரு வைக்கோல் படப்பு அது... தங்கமுத்துப் பாண்டியரின் வயலில் வண்டி ஒன்றில் ஏற்றப்பட்டிருந்தது. வண்டியைக் களத்துமேட்டில் இருந்து தங்கமுத்துப் பாண்டியர் வீடுநோக்கிச் செலுத்த ஆரம்பித்திருந்த மேஸ்திரி வழியில் அங்கங்கே மாயனின் ஆட்கள் படப்புக்குள் புகுந்துகொள்வதைக் கண்டும் காணாதவன்போல வண்டியைச் செலுத்த, இறுதியாக ஊரின் ஆரம்பத்தில் உள்ள அய்யனார் கோயில் அருகே வந்தபோது அய்யனார் முன்னால் ஒரு கிழட்டுப் பிச்சைக்காரன் வடிவில் தேவமாயன்.

கட்டிக் கற்பூரத்தைக் காலடியில் ஏற்றி வணங்கியவன், வண்டிக்காரன் சமிக்ஞை கொடுக்கவும் அய்யனாரைப் பார்த்தபடியே ஓடிச்சென்று அந்த வைக்கோல் படப்புக்குள் புகுந்துகொண்டான்.

வெளியே பார்க்க ஒரு ராட்சஸ வைக்கோல் படப்பு ஊருக்குள் நுழைகிற மாதிரிதான் இருந்தது.

வண்டிக்காரன் முகத்தில் மட்டும் கொஞ்சம் போல கலக்கம். பதுங்கிக் கிடந்த தேவமாயன் உள் இருந்தபடியே வண்டிக்காரனிடம் மெல்லப் பேச்சு கொடுத்தான்.

"எந்த பிரச்சினையும் எங்கையும் இல்லையே..."

"இல்லண்ணே... பெரியவர் சொன்னமாதிரியே பெரியவராவே இருக்காரு. சின்னவர்தான் எகிறிக் குதிச்சிக்கிட்டு இருக்காரு..."

"மத்தபடி அந்த சப்-இன்ஸ்பெக்டரெல்லாம் ஊருக்குள்ள ஒளியலியே..."

"ஒளியப் பார்த்தான்... ஆனா பெரியவர் அதட்டி அனுப்பிட்டார். நெசமா சொல்றேன், பெரியவர் பெரியவர்தான். அவருக்குப் போய் துரோகம் பண்ணப் போறோமேன்னு இருக்குது..."

"உன் நல்ல மனசைப் பாராட்றேன். பெரியவருக்கு ஒரு குறையும் வராது. கவலைப்படாதே. அதே சமயம் எந்தப் பணக்காரனும் கேக்காம எதையும் தரமாட்டான்."

"என்னவோண்ணே... விசயத்துல இறங்கியாச்சு. இனி நல்லதோ கெட்டதோ தலை எழுத்துப்படி நடக்கட்டும்."

அவன் சடைத்துக்கொண்டே வண்டியை வேகமாய் செலுத்தினான். காளைகளின் கழுத்து மணி சப்தம் கம்பீரமாய் ஒலிக்க தங்கமுத்துப் பாண்டியரின் மாளிகை போன்ற வீடும் கண்ணில் பட்டது.

வண்டி உள் நுழைந்தது. முகப்பில் வாதா மர நிழலில் பிரம்பு நாற்காலியில் நீண்ட குழல் துப்பாக்கி கிடக்க செண்பகப்பாண்டியன்.

வண்டிக்காரன் வண்டியிலிருந்து குதித்தான்.

"என்னடா... களத்துமேட்ல இருந்து வர்றியா?"

"ஆமாங்க... அப்படியே ஒரு விசயமுங்க."

"என்ன?"

"அந்தத் தேவமாயன் ஊருக்குள்ற எங்க இருக்கான்னு அரசல் புரசலா காதுல விழுந்திச்சுங்க..."

செண்பகப்பாண்டியன் சரேலென்று நிமிர்ந்து பார்க்க, "நம்ம நாயக்கர் தோட்டத்து பம்பு செட்டு ரூம்லதான் அவனும் ஆளுகளும் அடங்கிக் கிடக்கறாங்களாம். ராத்திரி வெளிய வர திட்டம் போட்டுகிட்டிருக்காங்களாம்..."

மேஸ்திரி சொன்னதில் செண்பகப்பாண்டியன் நெற்றியில் ஒரு ரேகை மடிப்பு விழுந்தது. சற்றுக் கோபத்துடன் வண்டிக்கார மேஸ்திரியைப் பார்த்த செண்பகப் பாண்டி மிகவும் புத்திசாலித்தனமாக, "உன் காதுக்கு விசயம் வர்ற அளவுக்கு தான் ஒளிஞ்சுக்கற இடத்தை அடுத்தவங்க தெரிஞ்சுக்க விட்றவன் இல்ல தேவமாயன். யார் சொன்னா உனக்கு?" என்றபடியே எழுந்தான்.

அந்தத் தோரணை அவன் வண்டிக்காரனையே சந்தேகப்படுவதை அழுத்தமாகவே சொன்னது. வண்டிக்கார மேஸ்திரி நடுங்கத் தொடங்கும்போது வைக்கோல் படப்பில் இருந்து எழுந்த கிடாரி தன் கையில் இருந்த பூமராங்கைச் சுழற்றிவிட அது செண்பகப்பாண்டியனின் நெற்றிப் பொட்டை நோக்கி வேகமாகப் பறந்தது.

செண்பகப்பாண்டி சுதாரிக்க இடமேயில்லாதபடி பொட்டில் ஒரு போடு.

அப்படியே சுழன்று விழுந்த செண்பகப் பாண்டியைப் பார்த்தபடியே வைக்கோல் போரில் இருந்து ஒவ்வொருவராகக் குதித்தனர். ஒருவன் ஓடிச் சென்று மெயின்கேட்டை அடைத்தான். இன்னொருவன் விறுவிறுவென்று வாதாமரத்தின் மேல் ஏறிக்

கொண்டு ஒரு கையில் பூமராங்கும், ஒரு கையில் துப்பாக்கியுமாய் நின்றான்.

தேவமாயன் சுற்றி ஒரு பார்வை பார்த்தபடியே உள்ளே நுழைந்தான்.

உள்ளே அவனுக்கொரு இன்ப அதிர்ச்சி காத்துக் கொண்டிருந்தது.

அது...

# 14

'சொன்ன சொல்லில்
நின்னுப்புட்டான் தேவமாயன்!
இந்த மண்ணில் எப்பவும்
அவன் பெரும் சகாயன்!'

**மா**ளிகை போன்ற தங்கமுத்துப் பாண்டியர் வீட்டுக்குள் நுழைந்த தேவமாயனுக்கு ஒரே வியப்பு. எதிரில் பாண்டியர் தன் நிலவறைச் சொத்து அவ் வளவையும் குவித்து வைத்திருந்தார். கஜானாக்களில் வைத்திருக்கும் பித்தளைப் பிடி போட்ட இரும்புப் பெட்டி, நகை நட்டுகள், வெள்ளிப் பாத்திரங்கள், பாண்டியர் பூஜை அறையில் வைத்து வணங்கி வழி படும் ஐம்பொன் முருகன் சிலை என்று அவரது அசையும் சொத்து அவ்வளவும் எதிரில்... சுற்றி பாண்டியரசு சகாக்கள்! கையில் உயரமான வேல் கம்புடன் மீசையை நீவிக்கொண்டு... தேவமாயன் உள்ளே நுழையவும் அவர்களிடமெல்லாம் ஒருவித மிரண்ட பார்வை. பாண்டியரும் பார்த்தார்! சிம்மா சனம் போல உள்ள தேக்கு நாற்காலியில் அமர்ந் திருந்தவர் எழுந்து நின்றார்.

சொர்ணமும் ஓடிவந்து ஒரு தூண்பின்னால் நின்றுகொண்டாள். அவள் கண்கள் அகண்டு அச்சத்தை அப்படியே கக்கிக் கொண்டிருந்தன.

தேவமாயனும் பாண்டியரும் ஒருவரை ஒருவர் நேர் பார்வையில் முதல் முதலாகப் பார்த்துக் கொண் டனர். தேவமாயன் அப்படிப் பாண்டியரைப் பார்க்கும் போது அவர் நெற்றி விபூதிப்பந்தலும் மையத்தில் உள்ள குங்குமப் பொட்டும் அவரை ஒரு தெய்வீக மனிதனாகத்தான் காட்டிற்று. அதனாலோ, இல்லை எதனாலோ கைகளை உயர்த்தி, "பாளையத்தாருக்கு என் வணக்கம்" என்றான் தேவமாயன். பாண்டியர் முகத்தில் பதிலுக்கு எந்த எதிரொலியும் இல்லை. தேவமாயன் பார்வை அப்படியே குவிந்து கிடக்கும் அவரின் செல்வங்களின் மேல் சென்றது.

"பரவால்ல பாளையத்தாரே... நான் வர்றது தெரிஞ்சு தயாரா எடுத்து வெச்சுகிட்டு உக்காந்திருக் கீங்களே, ரொம்ப சந்தோசம்..." என்றபடியே தன் சகாக்களில் ஒருவனான மூக்கனைப் பார்த்தான்.

மூக்கன் குனிந்து அங்கு கிடந்த பொருள்களில் ஒன்றை எடுக்கப் போக தடுப்பதுபோல வாயைத் திறந்தார் தங்கமுத்துப் பாண்டியர்.

"நில்லு அப்பு..."

மூக்கனும் நிமிர, தேவமாயன் கூர்ந்து பார்க்க-

"நீ வசதியா கொண்டுகிட்டு போக நான் இதை இங்க வெச்சிருக்கல... நீ வந்தா தெளிவா பாக்க ணும்னுதான் குவிச்சிருக்கேன்..." வித்தியாசமாக பதிலைச் சொல்லி கொஞ்சம் இடைவெளி விட்டார் தங்கமுத்துப் பாண்டியர்.

ஒளிந்துகொண்டு தூண்பின்னாலிருந்து பார்த்த படி இருக்கும் சொர்ணத்தின் கண்களிலோ இமை இரண்டும் அப்படியே துடிக்காமல் நின்றேவிட்டன.

தங்கமுத்துப் பாண்டியர் சட்டென்று அருகில் கிடந்த நாற்காலி ஒன்றைக் காட்டி, "உக்காரு அப்பு...

உன்னை நான் கள்ளனா மட்டும் பாக்கலை. அதுக்கும் மேல ஒரு நல்ல மனுஷனாவும் பாக்கறேன். உக்காரு.... உக்காந்து பேசுவோம்..."

தங்கமுத்துப் பாண்டியர் துளியும் பதற்றம் படபடப்பு இல்லாமல் பேசியதும், தேவமாயன் மேல் காட்டிய மதிப்பும் ஓர் அர்த்தமுள்ள புன்னகையை அவன் உதடிரண்டில் உருவாக்கியது.

"பாளையத்தாரே... நானும் உம்மப்பத்தி ஒரு கணக்கு போட்டுத்தான் வந்திருக்கேன். இது வரை என்னை யாரும் இப்படி வரவேற்று உக்காரச் சொன்னதில்லை. முதல்ல அதுக்கு உங்களுக்கு என் நன்றி.

அதேசமயம் உக்காந்து பேச பெருசா விஷயம் இருக்கறதா நான் நினைக்கல. மிஞ்சி மிஞ்சிப் போனா எங்கிட்ட இருக்கற நல்ல விஷயங்களைச் சொல்லி என்னை களவாணித்தனம் பண்ண வேண்டாம்னு நீங்க சொல்லலாம். நான் மறுத்தா உங்க ஆளுங்கள வெச்சுப் பிடிச்சு என்னை ஊர் முன்னால நிறுத்தி விசாரணை பண்ணுவீங்க. சவுக்கடியோ இல்ல கரும்புள்ளியோ செம்புள்ளியோ குத்தி ஊர்வலம் விடுவீங்க. மொத்தத்துல உங்க பெருமையும் அதிகாரமும்தான் பெருசுன்னு இந்த ஊருக்கும் புரிய வெச்சிடு வீங்க.

ஆனா நீங்க நினைக்கற மாதிரி எதுவும் நடக்கப் போறதில்லை. அதேசமயம் இவ்வளவு சொத்தையும் நான் ஒருத்தனே கொண்டுகிட்டு போவப் போறது மில்லை. இதை நாங்க ஒம்பதுபேர் மட்டும் இல்லை. இதோ உங்கள சுத்தி இருக்காங்களே இவங்க ஒம்பதுபேரும்கூட பங்கு போட்டுக்கப் போறாங்க."

தேவமாயன் அப்படிச் சொன்ன மறுநொடியே அந்தக் காவல் மேஸ்திரிகள் தங்கள் வேல்கம்பைக் கீழே போட்டு விட்டு தேவமாயன் பக்கம் சென்று நின்றனர்.

பாண்டியர் அடுத்த நொடியே நெஞ்சைக் கைகளில் பிடித்துக்கொண்டார். அது அவர் முற்றிலும் எதிர்பாராத ஒரு விஷயம். பின், "டேய்ய்ய்..." என்றார் உச்சஸ்தாயியில்... அவரால் அவர்களது துரோகத்தை ஜீரணிக்க முடியவில்லை என்பது அவர் உச்சஸ்தாயியில் கத்தியதில் அப்படியே துவண்டு அந்த நாற்காலியில் விழுந்ததில் நன்றாக உணர முடிந்தது.

"இவங்க உங்களுக்குத் துரோகம் பண்ணிட்டாங் கன்னு நினைக்கறீங்க. இது நெசம்தான். ஆனா கால காலமா இவுகளுக்கு நீங்க பண்ணியிருக்கற துரோகத் துக்கு இதுதான் பாளையத்தாரே சரியான பதிலடி. வைரத்தை வைரத்தால் தானே அறுக்க முடியும்?

நான் கன்னம் வைக்க முடிவு பண்ணிட்டா பொருள் மேல மட்டும் கவனம் வைக்க மாட்டேன். யாரும் கவனிக்காததை கவனிச்சு அது வழியா உள்ள நுழையறதுதான் என் பலம்.

அதேசமயம் அந்தக் களவுல மட்டும் நாங்க தோத்துட்டா, உசுரையே விட்டுடுவோம். எங்க வரைல களவுங்கறது நெருப்புல குதிக்கறமாதிரி... ஆனா நீங்க அதை எங்களோட சாமர்த்தியமா மட்டும் நினைச்சுட்டீங்க. தர்மமில்லாத எந்த சாமர்த்தியமும் ஜெயிக்காது.

என் தர்மம் இங்க உங்க வேலைக்காரங்க ளுக்கும் நான் பங்கு கொடுக்கறேன் பாருங்க... அதான்..."

தேவமாயன் பேச்சின் முடிவில் தன் சகாக்களுக்கு சைகை காட்ட அவர்கள் அப்போதே அங்கேயே அந்த சொத்தைப் பங்கு போட ஆரம்பித்தனர்.

தங்கமுத்துப் பாண்டியர் அப்படியே வெறித்துப் பார்த்துக் கொண்டேயிருக்க சொர்ணம் மெல்ல தூண் பின்னால் இருந்து விலகினாள். அப்படியே ஒரு அறை முன் சென்றவள் உள்ளே சென்று அங்குள்ள பீரோவை சாவி போட்டுத் திறந்தாள். அதற்கு முன் சாவியை அறை நிலைகால் கதவு மேல் இருந்து தேடி எடுத்தாள். திறந்த பீரோவுக்குள் கையில் துப்பாக்கியோடு பரமேஸ்வரன்! அவனிடம் கூரிய பார்வை...

“பரமேஸ்... நீ சொன்ன மாதிரியே ஆயிடிச்சு. அப்பாவை அந்த தேவமாயன் மடக்கிட்டான். சொத்தை எல்லாம் பங்கு...” - அவள் முடிக்கும் முன் சொர்ணத்தின் வாயைப் பொத்தியவன் பீரோவை விட்டு வெளியே வந்தான்.

அடுத்த சில நொடிகளில் தேவமாயன் முதுகுப் புறம் பரமேஸ்வரனின் துப்பாக்கி முனை அழுத்தமாகப் பதிந்து அவ்வளவு கள்ளர்களையும் அதிர்ச்சியடைய வைத்தது.

“எழுந்திரிங்கடா... அப்படியே ஒண்ணா சேர்ந்து நில்லுங்க. ஏதாவது திருகு வேலை பாக்க நினைச்சா இவன் நெஞ்சுக்குள்ள துடிச்சுக்கிட்டிருக்கற இதயம் சல்லி சல்லியாயிடும். எழுந்திரிங்க... உம்.”

பரமேஸ்வரனின் அதட்டல், தேவமாயனை வளைத்துக் கட்டி நின்றிருக்கும் சாதுர்யம் எல்லாமே அந்தக் கள்ளர்களுக்கும் பெரிய அதிர்ச்சி.

ஆனால் தங்கமுத்துப் பாண்டியரை அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி என்று நடப்பதைப் பார்த்து, “எலே

பரமேசு... உன்னை யாருடா இங்க கூப்ட்டா..." என்று கத்தச் செய்தது.

"கூப்ட்டு வர்றவன் சாதாரண போலீசு மாமா, கூப்டாம வர்றவன்தான் நல்ல போலீஸ்காரன்... படிச்சு படிச்சு நான் சொன்னப்ப கேக்கல. இப்ப பார்த்தீங்களா..?"

பரமேஸ்வரனும் ஓங்கலாகக் கத்தினான். அந்த நிலையிலும் தேவமாயன் முகத்தில் ஒரு செருக்கான சிரிப்பு. அவன் சகாக்களில் சிங்கத்தேவன் என்பவன் "மாயண்ணே... இந்த ஆளைப் போய் பெரிய மனுஷன்னு நம்பி வந்தியே... இப்ப பார்த்தியா? ஊட்டுக்குள்ளேயே போலீசை வெச்சிருந்து நமக்கு எப்படி கடுக்கா கொடுத்துருக்கான் பாத்தியா?" என்றான் உயர்த்திய கைகளோடு.

"தேவா... நம்பிக்கை மோசம் போய்ட்டோமேப்பா. இப்ப என்னய்யா பண்ண?" - அவர்கள் ஒவ்வொருவராகப் பதற்றம், துடிப்பு, ஆவேசம் என்று அலைபாயத் தொடங்கினார்கள். தேவமாயன் பார்வையோ தங்கமுத்துப் பாண்டியர் மேலேயே இருந்தது. சரியான குத்துப் பார்வை. அதில் பலப்பல கேள்விகள். பாண்டியருக்கும் அவன் பார்ப்பது புரிந்தது.

"தேவமாயா என்னை அப்படிப் பாக்காதே... சத்தியமா இவன் வீட்ல இருக்கறது தெரியாது. எனக்கு சொத்து பத்தெல்லாம் பெருசில்ல. சொல்தான் பெருசு. நீ என்கிட்ட இருந்து எதை வேணா திருடலாம். ஆனா அதைத் திருட முடியாது" என்றபடியே பரமேஸ்வரனை நெருங்கியவர் சட்டென்று மின்னல் வேகத்தில் அவன் கைத்துப்பாக்கியைத் தட்டிவிட, அந்த நொடியில் தேவமாயன் சகாக்களில்

ஒருவன் ஓடிப்போய் பரமேஸ்வரன் எதிரில் தன் கைவசம் உள்ள துப்பாக்கியைத் தூக்கினான். தேவ மாயன் இதைத் துளிக்கூட எதிர்பார்க்கவில்லை. தங்கமுத்துப் பாண்டியரோ "அவனை விட்ருங்க... இங்க இருக்கற அம்புட்டையும் எடுத்துக்கிட்டு கிளம் புங்க. நான் எதையும் தடுக்க மாட்டேன்.

என்கிட்ட கை கட்டி நின்ன வேலைக்காரங் களே துரோகியா மாறி என் நெஞ்சுல குத்திட்டதை விடவா இந்த இழப்பு எனக்கு வலிய தந்துடப் போகுது... உம்... பொறப்படுங்க. ஊர் எல்லை வரை நானே உங்ககூட துணைக்கும் வர்றேன். ஒரு பய உங்கமேல கை வைக்க முடியாது... உம்..."

பாண்டியர் சிலிர்ப்பிக்கொண்டு துண்டை உதறினார். சற்றும் எதிர்பாராத இந்தத் திருப்பமும் அவர் பேச்சும் தேவமாயனை அப்படியே திக்கு முக்காட வைத்தது. அவன் சகாக்கள் அதற்கும் மேல்... அப்படியப்படியே விக்கித்துப் போய் நின்றனர். தங்க முத்துப் பாண்டியரே சில நொடிகள் பார்த்துவிட்டு அங்குள்ள பொருள்களை எல்லாம் மூட்டையாகக் கட்ட ஆரம்பித்தார்...

வெளியே பூமராங் பட்டு மயங்கிக் கிடந்த செண்பகப் பாண்டியனிடம் மெல்ல மயக்கம் கலைந்து விழிப்பு ஏற்பட்டிருந்தது. பார்வை சென்ற திக்கில் வாதா மரம் மேல் ஒரு கள்ளன் எதிரே சாலையில் யாரும் வருகிறார்களா என்று பார்த்தபடி.... அப்படியே எழுந்து தள்ளாடியபடி நடந்து உள்ளே சென்று வாசற்படியருகே நின்று பார்த்தபோது தங்கமுத்துப் பாண்டியர் தன் அவ்வளவு செல்வத்தையும் கூறு கட்டிக் கொண்டிருந்தார்.

அவரே பங்கு போடவும் தொடங்கியிருந்தார். தன் வேலைக்கார ஆட்களைப் பார்த்து "எலே கிட்

டான், இது உன் பங்கு. உனக்குத்தான் நாலு பொம்பளப் புள்ளைங்க. அவங்கள கட்டிக் கொடுக் கணுமில்ல - அதான் தடிச்ச தங்க சங்கிலிங்க நிறைய வெச்சிருக்கேன்...

எலேய் இது கோட்டிப் பயலே உனக்குடா. அம்புட்டும் ரூவாதான். இனி யார்கிட்டயும் கடனே வாங்காத நீ..." என்று பார்த்துப் பார்த்து அவர் பிரித்தபடி இருந்தார். அவர்கள் முகங்களில் எல்லாம் கலக்கம், திகைப்பு. சிலரிடம் கண்ணீர்கூட!

பார்த்தபடி இருந்த செண்பகப் பாண்டியனுக்கு விளங்கிவிட்டது. அப்படியே பதுங்கிய செண்பகப் பாண்டி மெல்ல நகர்ந்து ரகசியமாக ஒளிந்து ஒளிந்து கொல்லைப்புறம் வந்தவன் 'சட்'டென்று கதவைத் திறந்துகொண்டு ஓட அதை ஒரு கள்ளன் பார்த்து விட்டு ஓடிவந்து சொன்னான்.

"மாயா... சின்ன பாளையத்தான் ஓடிட்டான். அவன் ஊரைத் திரட்டிகிட்டு வந்தா ஆபத்து. உடனே கிளம்புங்க..." துரிதப்படுத்தினான்.

ஆனால் தங்கமுத்துப் பாண்டியரோ, "கவலையே படாதீங்க. நான் இருக்கேன்... நான் சொன்னா சொன்னது தான். இந்த ஊர்ல ஒரு பய என்னை மீறி நடக்கமாட்டான்... நீங்க நிதானமாவே தப்பிப் போக லாம்" என்றார்.

அதற்குமேல் அவரது வேலைக்காரர்களால் அதைக் கேட்டுக் கொண்டிருக்க முடியவில்லை. ஓடி வந்து அவர் கால்களில் பொத்து பொத்து என்று விழுந்தனர்.

"ஆண்டே எங்களை மன்னிச்சிடுங்க ஆண்டே..." என்று கதற, தேவமாயனும் தன் சகாக்களைப் பார்த் தான். அவர்கள் துப்பாக்கியைக் கீழே போட்டனர்.

தேவமாயன் தங்கமுத்துப் பாண்டியரை மிகச் சமீபத்தில் நெருங்கியவன் உணர்ச்சி மிகுதியோடு கைகளைக் கூப்பினான். உதடிரண்டும் துடிதுடித்தது.

"வளைஞ்சு நிமிர்றதுங்கறது ஒரு வகை... பாளையத்தாரே உங்களை அதுக்கு உதாரணமா சொல்லலாம். நான் தோத்துட்டேன் பாளையத்தாரே... தோத்துட்டேன்.

இதுவரை தோக்கவே தோக்காத இந்த தேவமாயன் இன்னிக்குத் தோத்துட்டான்.

ஆனா ஒண்ணு!

நான் துப்பாக்கிக் குண்டு கிட்டையோ, கத்தி கட்டாரி கிட்டையோ, ஈட்டி வேல்கம்பு கிட்டையோ தோக்கலை. ஒரு சத்தியமுள்ள மனுஷன்கிட்டதான் நான் தோத்துருக்கேன்.

அதேசமயம் எனக்கும் சொல் பெரிசு. என் சகாக்களுக்கும் சொல் பெரிசு. சொல்லுல நீ நின்ன மாதிரியே நாங்களும் நிப்போம்..." - தேவமாயன் சொன்ன சூட்டோடு அங்கிருந்து நடக்க பரமேஸ்வரனும், சொர்ணமும், பாண்டியரும் வெறித்துப் போய் பார்க்க மற்றவர்களும் வெளியேறினர்.

அதேசமயம் செண்பகப் பாண்டியன் ஒரு பெரும் கூட்டத்துடன் தன் வீடு நோக்கி உழுதுபோட்ட வயல் பரப்பில் செம்மண் காவிப் புகை எழும்ப வந்தபடி இருந்தான்.

**வீ**ட்டைச் சுற்றி வளைத்து உள்ளே நுழைந்த போது அவ்வளவு நகைகளும் அங்கேயே இருக்க, பாண்டியர் பிரம்பு நாற்காலியில் - சற்றுத் தள்ளி முற்றத்து சிமெண்டுப் படி மேல் கன்னத்தில் கை வைத்தபடி பரமேஸ்வரன் -

ஒரு தூணில் சாய்ந்து நின்றவளாக சொர்ணம்.

செண்பகப்பாண்டியனுக்கு ஒன்றும் விளங்க வில்லை.

"சொர்ணம்... ஏ புள்ள, எங்க அந்த கள்ளப் பசங்க.... எங்க புள்ள?"

சொர்ணம் பதிலுக்கு வெறித்தாள். செண்பகப் பாண்டி பரமேஸ்வரனிடம் சென்று கத்தத் தொடங் கினான்.

"மாப்ள... எங்கைய்யா அந்தப் பயலுக? என்ன நடந்தச்சு இங்க?"

பரமேஸ்வரனிடம் பெருமூச்சு... செண்பகப் பாண்டி குழம்பிப்போய் "என்ன நடந்துச்சு இங்க?" என்று அந்த மச்சுவீடே நடுங்கும்படி கத்தியபோது உழுது போட்ட வயலில் ஒரு நேர்க்கோடு போல ஒருத்தன் ஓடிவந்து கொண்டிருந்தான்.

"பாளையத்தாரே... பாளையத்தாரே... ஓடி யாங்க... ஓடியாங்க..."

'ஓடியாங்க' என்று அவன் அழைப்பது தேய்ந்து போய் உள்ளே அனைவரின் காதிலும் விழ, எல் லோரும் திடுக்கிட்டுத் திரும்பினர். கத்திக்கொண்டே வந்தவன் உள்ளே மூச்சிரைக்க வந்து தங்கமுத்துப் பாண்டியர் முன் மண்டியிட்டு விழுந்தவனாக "ஆண்டே...." என்றான். பாண்டியர் அவனைக் கூர்மை யாகப் பார்த்தார்.

"இந்தச் சாவியையும், லெட்டரையும் உங்ககிட்ட கொடுக்கச் சொல்லிட்டு தேவமாயனும் அவன் ஆளுங்களும்..." - முடிக்க முடியாமல் மூச்சுத் திணறி னான் அவன்.

சட்டென்று தங்கமுத்துப் பாண்டியரிடமிருந்து கடிதத்தையும் சாவியையும் பிடுங்கிய செண்பகப்

பாண்டி கடிதத்தைப் படித்துவிட்டு அப்படியே ஸ்தம்பிக்க-

தங்கமுத்துப் பாண்டியரும் செண்பகப் பாண்டியும், கூடவே பரமேஸ்வரனும் ஊர்க்கூட்டத்தோடு சேர்ந்து நடந்து ஒன்பது கிளைப் புளியமரத்தை நெருங்க நெருங்க ஒவ்வொருவர் முகத்திலும் பரிதவிப்பு, திகைப்பபு...! ஒன்பது கிளைப் புளிய மரத்தில் கிளைக்கு ஒருவராக தேவமாயனும் அவன் சகாக்களும் தொங்கிக்கொண்டிருக்க அந்தப் பிணக் கூட்டத்தை நெருங்கிய நிலையில் பார்த்த தங்கமுத்துப் பாண்டியருக்கும் நெஞ்சைக் கரித்தது. ஒரு கள்ளர் கூட்டத்துக்கு இத்தனை சொல்லாண்மையா?

அவர் நெஞ்சக்கூட்டில் ஹக் என்று ஓர் அடைப்பு!

அப்படியே கையில் பிடித்த பக்கத்து நபரின் தோள் மேல் விழுந்தவர் அங்கே தொங்கிக் கொண்டிருந்தவர்களோடு சேர்ந்து சில நிமிடத்திலேயே பத்தாவது சவமாகி விட்டார்.

செண்பகப் பாண்டியோ அந்த நிலையிலும் கடிதத்தையும் சாவியையும் இடுப்பில் வேட்டி மடிப்பில் இழுத்துக்கட்டியவனாக...

# 15

'விடாது வினை... அது தருமத்தோட கணை!
யாருமில்ல அதுக்கு இணை.
பெண்ணொருத்திதான் இனி பிணை!'

தேவமாயனும் அவன் சகாக்களும் ஒருபுறம் ஒன்பது கிளைப் புளிய மரத்தில் தூக்கில் தொங்க, அடித்துப் பிழைக்கும் கள்ளர்களிடம் இத்தனை

சொல்திடமா? என்று அந்தக் காட்சியைப் பார்த்து தங்கமுத்துப் பாண்டியரும் ஒரு கவரிமானைப் போல உயிரை விட, அந்த சோகமயமான வேளையில் தேவ மாயன் கொடுத்துவிட்ட கடிதமும் சாவிக்கொத்தும் செண்பகப் பாண்டியர் வசம் அப்படியே மிக ரகசிய மாக முடங்கிப் போனது.

பரமேஸ்வரன் வரையில் நடக்கக்கூடாத ஒன்று நடந்து விட்டதாகத்தான் தோன்றியது. சொர்ணத் திடம் மட்டும் நெஞ்சுக்குத்து. தான் ஒருவேளை பரமேஸ்வரனுக்குத் தன் வீட்டில் அடைக்கலம் கொடுக்காமல் இருந்திருந்தால் தனது அப்பாவுக்கு எதுவும் ஆகியிருக்காதோ என்கிற கேள்வி அவளைப் புரட்டிப் புரட்டி எடுத்துக் கொண்டிருந்தது. அவளே கூட தேவமாயனும் அவன் சகாக்களும் இப்படித் தூக்கில் தொங்கி உயிரை விடுவார்கள் என்பதைத் துளிகூட எதிர்பார்த்திருக்கவில்லை. எல்லாமே அவளுக்கு அதிர்ச்சியாகவும் ஆச்சரியமாகவும் தான் இருந்தது.

அன்றைக்கு ஏற்பட்ட அந்த அதிர்ச்சி இன்றைக் கும் தன் பிள்ளை ராஜேந்திரனிடம் ஒரு கதையாகக் கூறும் பொழுதும் இருக்கத்தான் செய்கிறது சொர்ணத்திடம்!

ராஜேந்திரனும் கிட்டத்தட்ட ஸ்தம்பித்திருந் தான். கூட்டாமல் குறைக்காமல் நடந்த அவ்வளவை யும் சொர்ணம் சொல்லி முடித்திருந்தாள். ஆனால் அவனுக்குள் அதன் எதிரொலிகளாகப் பல கேள்வி கள்.

அப்பா பரமேஸ்வரன் பீரோவுக்குள் இருந்து வெளிப்பட்டு கள்ளர்களைப் பிடிக்க முயற்சி செய்த தில் தான் மொத்த விஷயமே மாறிப் போனது.

அப்படிப்பட்ட அப்பாவுக்கும் தன் அம்மாவுக்கும் எப்படித் திருமணம் நடந்தது...? தனக்கு நினைவு தெரிந்த நாளாக மாமா செண்பகப்பாண்டி வீட்டோடு எந்த ஒட்டுமில்லை... உறவுமில்லை.

விஷயம் தெரிந்த உறவுக்காரர்கள் சிலர் மட்டும், "எலேய்... பட்டணத்துல படிக்கற ரோசாவுக்கு நீதாண்டா முறைப்பையன்" என்று உசுப்பேத்தி விடுவார்கள். சொர்ணம்கூட 'ரோஜா தன் மருமகளாக வந்தால் நன்றாகத்தான் இருக்கும்' என்பாள். ஆனால் அதெல்லாம் இந்த ஜென்மத்தில் நடக்காது என்றும் கூடவே சொல்லுவாள். அப்படி நடக்கமுடியாத அளவுக்கு அதன்பின் என்ன தான் நடந்தது? ராஜேந்திரனுக்குள் அந்தக் கேள்விதான் பிரதானமாக எழும்பியது. கூடவே மிக மிக மிக முக்கியமான இன்னொரு கேள்வியும்.

"அம்மா... தேவமாயன் ஒரு லெட்டரும், சாவியும் கொடுத்து விட்டிருந்தான் இல்லியா? அதைக்கூட மாமா செம்பகப்பாண்டி பாக்கெட்ல வெச்சுகிட்டதா சொன்னியே... அந்த லெட்டர்ல என்ன எழுதியிருந்திச்சு? அந்தச் சாவி எந்தப் பூட்டோட சாவி?"

ராஜேந்திரன் அந்தக் கேள்வியைக் கேட்டே விட்டான். சொர்ணம் தன் நரைவிழுந்த தலைமுடியின் முன்விழுதை ஒதுக்கிக்கொண்டே, கேட்கவேண்டிய கேள்வியைக் கச்சிதமாகக் கேட்ட தன் மகனை ஒரு பார்வை பார்த்துப் பெருமூச்சு விட்டாள்.

"ஏம்மா... இந்தக் கேள்விக்கு உனக்கே பதில் தெரியலியா?"

"உண்மைதான் ராசேந்திரா. இந்த நிமிசம் அதுக்கு பதில் உன் மாமனுக்கு மட்டும்தான் தெரியும்.

அந்த சாவி விவகாரத்துலதான் உங்கப்பாவுக்கும் உன் மாமனுக்குமே மோதல் வந்துச்சு.

தூக்குல தொங்குன ஒன்பது பேர் பொணத்தையும் போலீஸ்காரங்களே வந்து ஒரு லாரியில் ஏத்திகிட்டுப் போனாங்க. முன்ன ஒரு ஜீப்பு... பின்ன ஒரு ஜீப்பு. நடுவுல லாரி... லாரில அந்த ஒன்பது பேர் பொணமும் வரிசையா! கொடுமையான காட்சி அது..."

திரும்பவும் சொர்ணத்திடம் பெருமூச்சு... கொஞ்சம் போல கண்களிலும் ஈரம். அப்படியே தொடர்ந்தாள்.

"வழியிலையே ஒருத்தி போலீஸ் ஜீப்பைத் தடுத்து நிறுத்துனா..! அவ வேற யாருமில்ல... கூளையனூர் செங்கமலம்தான் அவ. தேவமாயன் கருவை வவுத்துல சுமந்துகிட்டிருந்தவ. உங்கப்பாகிட்ட ஓடி வந்தவ, 'எம் புருஷன் சடலத்தையும் மத்தவங்க சடலத்தையும் என்கிட்ட தான் ஒப்புவிக்கணும்'னு சொல்லி தேவமாயன் சடலத்தைக் கட்டிகிட்டு அழுதா. அப்ப அவ தேவமாயன் இடுப்பு அரையணாக் கொடிய பார்த்துட்டு உங்கப்பாவைப் பார்த்து 'அரையணாக் கொடில ஒரு சாவி இருக்குமே... அது எங்க?'ன்னு கேட்டா. அப்பத்தான் அவருக்கே தேவமாயன் சாவியும் லெட்டரும் கொடுத்துவிட்டதும் ஞாபகத்துக்கு வந்துச்சு.

உடனேயே உன் மாமனைத்தான் பார்த்தாரு.

நானும் அண்ணனைத்தான் பார்த்தேன்.

ஆனா உன் மாமா எதோ ஒரு சாவியை எடுத்துக் கொடுத்தாரு. லெட்டரை ஆத்திரத்துல கிழிச்சுப் போட்டுட்டதா சொல்லிட்டாரு...

செங்கமலமோ பெருசா கூப்பாடு போட்டா.

'அது அவரோட கஜானா சாவி. அதுல இருக்கற நகை நட்டுங்களுக்கு ஒரு அளவு கிடையாது'ன்னு சொன்னா! அதை எல்லாம் எடுத்து நான் அரசாங்கத் துக்கே கொடுத்துட்றேன்னும் சொன்னா. ஆனா உன் மாமா கடைசி வரை இந்தச் சாவிதான் அந்தச் சாவின்னு ஒரு பொட்டிச் சாவியைக் கொடுத்து சாதிச்சிட்டார். நான் அந்தச் சாவியைப் பார்த்தப்போ நல்லா ஒரு சாண் நீளமிருந்திச்சு. மாமா கொடுத்த சாவியோ ஒரு விரக்கடை நீளம்கூட இல்லை."

"பொறவு?"

"பொறவுதான் நடக்கக்கூடாததெல்லாம் நடந் துச்சு."

"என்ன ஆத்தா சொல்றே?"

"ஒருபக்கம் உன் தாத்தா பொணம் கிடக்க மறு பக்கம் உன் அப்பா உன் மாமாகிட்ட சாவியையும் லெட்டரையும் நீ மறைக்கப் பாக்கறேன்னு மல்லு கட்டுனாரு. வாக்குவாதம் பெருசாச்சு, உன் மாமன் பேசக்கூடாத வார்த்தையெல்லாம் பேசுனாரு.

'நீ மட்டும் என் வீட்டுக்குள்ள ஒளியாம இருந் திருந்தா எங்கப்பாக்கு இப்படி ஆயிருந்திருக்காது. அந்த ஒன்பது பேரை நான் சுட்டே கதையை முடிச் சிருப்பேன்... எல்லாம் உன்னாலதான் கெட்டுச்சி'ன்னு சொன்னாரு.

உங்கப்பாக்குக் கோபம் பொத்துகிட்டு வந்துச்சு. அப்ப நானும் உன் அப்பாகூட சேர்ந்துகிட்டேன்... 'அண்ணே நீ பேசறது நல்லா இல்ல'ண்ணேன்... உன் மாமா உடனே என்னை முறைச்சுப் பாத்துச்சு.

'வாயை மூடிகிட்டு இரு சொர்ணம். உனக்கு இன்னும் எவ்வளவோ நல்லது கெட்டதெல்லாம் நடக்க வேண்டியிருக்கு, அதை நான்தான் செய்து கொடுக் கணும்'னும் சொன்னிச்சு... ஆனா நான் அதைக் கேட்டு மடங்கலை. 'அந்த சாவியையும் லெட்டரை யும் பரமேஸ் அத்தான்கிட்ட கொடுத்துடு. அது அரசாங்க விசயம்'னேன். உன் மாமன் கேக்கலை. பதிலுக்கு என்னை அறைஞ்சிச்சு. உன் அப்பா குறுக்க வந்து தடுத்தாரு. என் தங்கச்சியை நான் அடிப்பேன்னு உன் மாமா சொல்ல... 'இவ நான் கட்டிக்கப் போற பொண்ணு'ன்னு உன் அப்பா ஒரு வேகத்துல பேச..."

முக்கியமான இடத்தில் கொஞ்சம் நிறுத்தி இறுக்கத்தைக் காட்டினாள் சொர்ணம். பக்கத்தில் சுவரில் போலீஸ் உடுப்பில் பரமேஸ்வரன். ராஜேந் திரன் பார்வை ஒருமுறை அந்தப் படத்தின் மேல் சென்று திரும்பியது. சொர்ணத்தின் கண்களில் கண்ணீர் திரளத் தொடங்கியிருந்தது.

"அம்மா... பொறவு என்ன ஆச்சு?"

"உன் மாமா என்னை 'கட்டிக் கொடுக்க முடியாது. நீ முதல்ல ஊட்டை விட்டுப் போ'ன்னு சொன்னாரு... அப்படியே என்னை உள்ள பிடிச்சுத் தள்ளினாரு. உன் மாமா செய்யறது கொஞ்சம்கூட நியாயம் இல்லேன்னு நல்லாவே தெரிஞ்சிச்சு எனக்கு.

அந்த சாவி தேவமாயனோட கள்ளச் சொத் தோட சாவி. கூமாச்சி மலைல இருக்கற அவன் கஜானாவோட சாவி. அந்த லெட்டர்ல அதை எல்லாம் அரசாங்கத்துக்கிட்ட ஒப்படைக்கச் சொல்லிதான் அவன் எழுதியிருந்தான். அண்ணனுக்கு அந்த நிமிஷம் பேராசை பிடிச்சுகிச்சு. உன் தாத்தாவோ கள்ளங்க கிட்டையும் நல்ல மனசைப் பார்த்தாரு. உன் மாமனோ அவங்ககிட்ட காசு பணத்தைத்தான் பார்த்தாரு.

வாக்குவாதம் முத்துனுச்சு. கடைசில ஊர்க் காரங்க தலையிட்ற அளவு போயிடிச்சு. கடைசி முடிவா என்னைப் பார்த்து நீ யார் பக்கம்னு கேட் டாங்க. ஒரு பக்கம் என் அப்பாவோட பொணம். மறுபக்கம் உன் அப்பா. என் நிலை எப்படி இருக் கும்னு யோசிச்சுப் பாரு! மனசைக் கல்லாக்கிகிட்டு உன் அப்பாகூட கிளம்பிட்டேன்.

சொத்துல சல்லிக்காசு தரமாட்டேன்னார் உன் மாமா.

கொடுத்தாலும் வேண்டாம்னுட்டேன். அதுக் கப்புறம் உன் தாத்தாவுக்கு உன் மாமா கொள்ளி போட்றதைக் கூட சுடுகாட்டுல தூர இருந்துதான் பாத்தேன். பொறவு உன் அப்பா என்னை அவர் வீட்டுக்குக் கூட்டிகிட்டு போய் ஒரு நல்ல நாள் பார்த்து தாலி கட்டி கல்யாணமும் செய்துகிட்டாரு.

அதேசமயம் ஒரு உரசல் உன் அப்பாவுக்கும் மாமாவுக்கும் இருந்துகிட்டே இருந்துச்சு... உன் மாமாவை ரகசிய போலீஸ்காரவுங்க கண்காணிச்சு கிட்டே இருந்தாங்க. அவர் அடிக்கடி கூமாச்சி மலைப் பக்கம் போய் வந்ததும் தெரிய வந்துச்சு... ஒரு நா உன் அப்பாவே உன் மாமாவைத் தேடி கூமாச்சி மலைக்கு அவர் பின்னால ரகசியமாப் போனாரு. திரும்பி வரும்போது பொணமாத்தான் வந்தாரு." - சொர்ணம் விசும்பி அழுதபடியே தலையைத் தாழ்த்திக்கொள்ள ராஜேந்திரனுக்கு நெஞ்சருகே ஒரு பாம்பு கொத்தி யதுபோல இருந்தது.

"எப்படிம்மா... எப்படி... மாமாதான் அப்பாவை ஏதாவது செய்துட்டாரா?"

"ஒண்ணும் தெரியாதுப்பா. மார்புல குண்டு பாஞ்சிருந்துச்சு. தேவமாயனோட உறவுக்காரங்க,

அப்புறம் அவன் வைப்பாட்டி செங்கமலத்தோட ஆளுங்கதான் கூமாச்சி மலைல தேவமாயன் கள்ளச் சொத்தைத் தேடி வர்றதா நினைச்சு கூட்டமா கூடி நின்னு சுட்டுட்டதா சொன்னாங்க. அப்ப நீ வயித்துல இருந்தே...!"

சொர்ணத்துக்கு மயக்கமே வரும்போல இருந் தது.

"இல்லம்மா... இந்தக் குள்ளநரி மாமன்தான் ஏதோ செஞ்சிருக்கணும். எனக்கு இந்தக் கேள்விக்கு மட்டும் பதில் சொல்லும்மா. தேவமாயன் கள்ளச் சொத்து கிடைச்சிச்சா இல்லையா?"

"இந்தக் கேள்விக்கு மட்டும் பதிலை உன் மாம னால மட்டும்தாம்பா சொல்ல முடியும். நான் மறக்க நினைச்சாலும் காலம் விடமாட்டேங்குதே..."

"அப்ப இப்ப வந்திருக்கற தேவமாயன்கறவன் அந்த செங்கமலத்தோட பையனா இருப்பானோ?"

"அவனாத்தான் இருக்கணும். உனக்கு நான் நடந்ததைச் சொன்னமாதிரி அவன் ஆத்தா அவ னுக்கும் சொல்லியிருக்கணும். அதான் திரும்ப வந் துட்டான். ஆனா ஒண்ணு..."

சொர்ணம் சற்று இடைவெளி விட்டு கண் களையும் அகட்டினாள்.

"என்னம்மா... ஏதோ சொல்ல வந்தே... நிறுத் திட்டியே?"

"அன்னிக்கு நடந்ததெல்லாம் பொய்யி... இனி நடக்கப் போறதுதான் மெய்யிங்கறமாதிரி பல விசயங்கள் நடக்கப் போறதா எனக்குத் தோணுது ராஜேந்திரா..."

"என்னம்மா சொல்றே... இப்ப வந்திருக்கற தேவமாயன் மாமனைப் பழிவாங்குவான்னு சொல் றியா?"

"பழிவாங்கறதுங்கறது ரொம்ப சாதாரண வார்த்தைப்பா. அதுக்கு மேல ஏதாவது இருந்தா அதுகூட நடக்கலாம். உன் மாமாவும் உப்பைத் தின்னவர்தானே? தண்ணி குடிச்சுதான் தீரணும்." சொர்ணம் கழுத்து வியர்வையை அழுந்தத் துடைத்த படிக் கூறியதில் சரியான அழுத்தம்.

ராஜேந்திரன் முகத்திலோ அதைக் கேட்டு அதிர்ச்சி, குழப்பம் என்று எல்லாம்!

ஒன்பது கிளைப் புளியமரத்தைச் சுற்றி ஓரளவு ஊரே கூடியிருந்தது. செண்பகப் பாண்டியும் தன் ஃபியட் காரை வெகுதூரத்தில் நிறுத்திவிட்டு மரத் தண்டில் எழுதப்பட்டிருக்கும் அந்த எழுத்துக்களைப் படித்தபடியே தன் தகவலின் பேரில் வந்திருக்கும் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் அருள்மணி என் பவரைப் பார்த்தார். கூடவந்த போலீஸ்காரர் அவர் காட்டிய சமிக்ஞையின் பேரில் ஒரு போட்டோவும் எடுத்துக்கொண்டார்.

"பழைய குப்பை... திரும்ப கிளர்றமாதிரி தெரியுதே?"

"அப்படித்தான் தம்பி நானும் நினைக்கறேன்..."

"இது யார் வேலையா இருக்கும்னு நினைக்க றீங்க?"

"கூளையனூர்க்காரி செங்கமலத்தைப் பிடியுங்க. உங்களுக்கு எல்லாம் விளங்கிடும். ஆனா ஒண்ணு...

ரொம்ப கவனமாவும் தீவிரமாவும் இல்லாட்டி நிச்சயம் ஆபத்துதான்..."

"கவலப்படாதீங்க நான் பாத்துக்கறேன் உங்க வீட்டைச் சுத்திகூட காவல் போட்டுட்றேன். இது ஒண்ணும் அந்தக் காலம் இல்ல. ஏ.கே. 47 ஒண்ணு போதும். மொத்தக் கூட்டத்தை சல்லடை போட்டு சாச்சுப்பிடும்..."

சப் இன்ஸ்பெக்டர் அருள்மணி ஆறுதல் தருவதுபோல் பேசினார். போலீஸ் வந்திருப்பது தெரிந்து ராஜேந்திரனும் அந்த ஒன்பது கிளைப் புளியமரம் அருகே போய் சேர்ந்திருந்தான். நடப்பதை எல்லாம் கண் கொட்டாதபடியும் பார்த்துக் கொண்டிருந்தான். அவனை செண்பகப் பாண்டியனும் பார்த்தார். பார்வையில்லை அது. முறைப்பு!

அவ்வப்போது ஊருக்குள் காருக்குள் போகும் போதும் கண்மாய்க்கரை பக்கத்திலும், வயல்வெளி களிலும் இருவர் பார்வையும் முட்டி மோதிக் கொண்டதுண்டு. இந்த முறை ராஜேந்திரன் முகத்தில் அனலடித்ததுதான் அவர் வரையில் ஆச்சரியம். அவனை முறைத்துக்கொண்டே தன் ஃபியட் நோக்கி சப்இன்ஸ்பெக்டர் அருள்மணியுடன் நடந்தார்.

அங்கு நடக்கும் அவ்வளவு காட்சிகளையும் தூரத்தில் மரக்கிளைமேல் மல்லாந்திருந்த நிலையில் ஒருவன் பார்த்துக் கொண்டிருந்ததை அங்கு ஒருவர் கூடக் கவனிக்கவில்லை.

# 16

'விதையெல்லாம் மரமாகும்
மரமெல்லாம் கிளையாகும்
கிளையெல்லாம் இலையாகும்
அதிலொரு இருட்டு உருவாகும்!'

மரக்கிளை மேல் ஒரு உடும்புபோலப் படுத்திருந்தான் அவன். பார்ப்பதற்கு அந்த நாளைய தேவமாயனைப் போலவே தோற்றம். அதுவே அவன் தேவமாயனின் ரத்த வாரிசாகத்தான் இருக்க வேண்டும் என்று சொல்லாமல் சொல்லிற்று.

கண்கள் இடுங்க அவன் பார்க்கும்விதமே மிகக் கூர்மையாக இருந்தது. அவன் முகத்தில் தான் நினைத்தபடியே எல்லாம் நடக்கத் தொடங்கிவிட்டதாக ஒரு இறுமாப்பு பரவியிருந்தது.

ஃபியட்டை நெருங்கிவிட்ட செண்பகப்பாண்டியனிடம் எஸ்.ஐ. அருண்மளி ஆதரவாகப் பேசிக் கொண்டிருந்தார்.

"நீங்க கவலப்படாம போங்க... இங்க இந்த மரத்துல தேவமாயன் பேரால எழுதுனது யாரு, அவன் நோக்கம் என்னங்கறதை நான் அதிகபட்சம் இரண்டு நாள்ல கண்டுபிடிச்சிடுவேன்" என்றவரை செண்பகப்பாண்டியனும் சற்று நம்பிக்கையோடு பார்த்தார். இருந்தும் தனது கித்தாப்பைக் கைவிடாமல், "நீங்க ஒரு பக்கம் பாருங்க... நானும் என் பசங்க அவ்வளவு பேரையும் ஏவிவிடப் போறேன். அவன் சிக்காமலா போயிடுவான்..." என்றபோது மரக்கிளையில் ஒளிந்தபடி கவனித்துக் கொண்டிருந்த அவன் முகத்தில் ஒரு கேலிச் சிரிப்பு.

**வா**தா மர நிழலை ஊடுருவிக்கொண்டு அந்த ஃபியட் கார் உள் நுழையவும் மரத்தடியில் அமர்ந்து கொண்டு ஆங்கில நாவல் ஒன்றைப் படித்துக்கொண் டிருந்த ரோஜா நிமிர்ந்து பார்த்தாள்.

அப்படி ஒரு வேகத்தில் அந்தக் கார் உள் நுழைந்து அவள் பார்த்ததில்லை. செண்பகப் பாண்டி யனும் கதவை வேகமாகத் திறந்துகொண்டு இறங்கி உள்ளே சென்ற விதமும் சுத்தமாகச் சரியில்லை.

அவளால் யூகிக்க முடிந்தது.

'அப்பா விபரீதமாக எதையோ உணர்ந்திருக்க வேண்டும்!' மூங்கில் சேரை விட்டு எழுந்தவள் உள்ளே சென்றாள். செண்பகப்பாண்டியன் ஹாலில் நாற்காலியில் அமர்ந்து நெற்றியைத் தேய்க்கத் தொடங்கி விட்டிருந்தார். பக்கமாக சுவரில் ஒரு பக்கம் தங்கமுத்துப் பாண்டியர் புகைப்படம். இன்னொரு பக்கம் அவளது தாயான அலமேலு நாச்சியின் புகைப் படம். இரண்டிலும் காகிதப் பூ மாலைகள் தொங்கிக் கொண்டிருந்தன.

அந்த ஹாலில் புகைப்பட உருவில் இருந்து கொண்டு அவர்கள் செண்பகப் பாண்டியனைப் பார்க்கிற மாதிரி கூட இருந்தது.

"அப்பா..."

அவரிடம் நிமிர்வு.

"என்ன குழப்பம்?"

"ஒண்ணுமில்ல ஆத்தா... நீ போய் வேலையைப் பார்."

"சும்மா சொல்லுங்கப்பா... என்ன பிரச்சினை?"

"ரோசா கண்ணு... உனக்கெதுக்கு இந்தக் கேள்வியெல்லாம். நீ படிக்கற பொண்ணு - ஆமா உனக்கு காலேசு எப்ப திறக்கறாங்கன்னு சொன்னே?"

"அதுக்கு இருக்குப்பா நிறைய நாள். அதுவும் நான் விரும்பினா போகலாம். இல்லாட்டி இங்கயே கூட படிச்சு பரீட்சை எழுதிடுவேன். இன்னும் ஒரு பத்துப் பதினைஞ்சு நாள் கிளாஸ்தான் இருக்கு. ஏம்ப்பா...?"

"இல்ல சும்மாதான் கேட்டேன்..."

ஒரு பெருமூச்சை அனல் மூச்சாக விட்டபடி செண்பகப் பாண்டியன் கேட்கவும் அவளுக்கு விளங்கி விட்டது.

"ஏம்ப்பா... நான் இந்த வீட்டை விட்டுப் போகணுமா?" - கச்சிதமாகக் கேட்டாள்.

"ஆங்... என்ன கேட்டே?"

"இல்ல... இந்த வீட்ல நான் இருக்கறதுல எதாவது பிரச்சினை இருக்குதான்னு கேட்டேன்..."

அவள் அப்படிக் கேட்கும்போதே வாடிப்பட்டி வரதன் என்பவன், திபுதிபுவென்று தன் சகாக்களோடு உள்ளே நுழைந்து கொண்டிருந்தான். அவ்வளவு பேரும் தடிதடியாக இருந்தார்கள். எல்லோர் கழுத்திலும் கைகளிலும் மைனர் செயின், மோதிரங்கள். மோதிரங்களில் நவரத்னக் கற்கள் புளியங்கொட்டை சைசுக்கெல்லாம் இருந்தன.

வாடிப்பட்டி வரதன் ஒரு கையில் செண்பகப் பாண்டிக்கு ஒன்றுவிட்ட மச்சினன். மனைவியின் சித்தப்பா மகன். ரோஜாவுக்குத் தாய்மாமன் உறவு.

உள்ளே நுழையும்போதே அந்த உறவுமுறை அளம் பல்கள்.

"மாப்ள... எப்படி இருக்கீங்க? அவசரமா போன் போட்டு பொறப்பட்டு வரச் சொன்னீங்களாம். அதான் ஒரு குவாலிஸ் வண்டியில பசங்களையும் அள்ளிப் போட்டு கிட்டு ஓடியாந்தேன். வழியில காதுல கண்ட கருமாந்திரமெல்லாம் உழுந்துச்சு.

எவன் அவன் தேவமாயன்? புதுசா?

அதான் அந்த புடலங்கா போய் சேர்ந்து இருபது வருசத்துக்கும் மேல ஆவுதல்ல? எவனாவது லோக்கல் பார்ட்டி சினிமா கினிமா பார்த்துப்பிட்டு தேவமாயன் பேர்ல கிளம்பிட்டாங்களா என்ன?"

வரதன் படபடவென்று பட்டாசு கணக்காகப் பொரிந்தான். அப்படியே ரோஜா பக்கம் திரும்பி, "ரோசா... எப்படி இருக்கே... நல்லாருக்கியா?"

சொரசொரவென்ற ஒரு குரலில் அவன் கேட்ட விதமே நெருடியது. இருந்தும் அவள் தலை ஆமோதிப்பாய் ஆடியது. மனதும் நடுங்க ஆரம்பித்து விட்டது.

செண்பகப் பாண்டியன் சட்டென்று ரோஜாவைப் பார்த்தார். " நீ போடா கண்ணு... நீ போய் உன் சோலியப் பாரு..." என்றார். அவளும் அங்கிருந்து நழுவுவது போல நழுவி ஒரு அறை மூலையில் நின்று கொண்டு அவர்கள் பேசப்போவதைக் கேட்கத் தயாரானாள்.

"வரதா... நல்ல நேரத்துலதான் நீ வந்துருக்கே. தேவமாயன் பேரைச் சொல்லிகிட்டு எவனோ ஒருத்தன் திரும்ப வந்துருக்கான். யாருன்னு தெரியல.

அனேகமா அந்தக் கூளையனூர் செங்கமலம் மவனா இருக்கலாம். போலீசும் வந்துட்டு போயிருக்குது. இருந்தாலும் அவங்களுக்கெல்லாம் செங்கமலமும் அவள் மகனும் அழகா வெல்லம் கொடுத்துருவாங்க. அடுத்து நேரா என்கிட்டதான் வந்தாகணும்.

அதான் உன்னைய வரச் சொன்னேன். வருச நாட்டுல சாராயம் காய்ச்சிக்கிட்டிருக்கற பன்னி மூக்கனுக்கும் தகவல் கொடுத்துருக்கேன். நீங்க இரண்டு பேரும் பக்கத்துல இருந்தா போதும்."

"இவ்வளவுதானா மாப்ள? கவலைய விடுங்க. அதான் வந்துட்டேன்ல. பன்னிமூக்கன் ஒருத்தன் போதுமே... பன்னி மண்ணைத் தோண்டறமாதிரி தோண்டிப்புடுவானே தோண்டி... ஆனா காசு காசுன்னு பாய்வானே மாப்ள..."

"எம்புட்டு செலவானாலும் பரவால்ல வரதா. அந்தப் பயலைக் கசக்கி எறிஞ்சிப்பிடணும்."

சொல்லும்போதே செண்பகப் பாண்டிக்கு உடம்பெல்லாம் பதறியது.

"ஏ மாப்ள... தேவமாயன் பேர்ல ஒருத்தன் துள்ளிக் குதிச்சிருக்கான். அதுக்கா இம்புட்டு பயப்படறீங்க?"

வரதனின் கேள்விக்கு சட்டென்று ஒரு பதிலைக் கூற முடியாமல் செண்பகப்பாண்டி மிடறு விழுங்கினார்.

"அதுவந்து மாப்ள..."

"என்ன... அந்த சாவி விஷயம் திரும்ப தலை எடுக்குமோன்னு பயமா இருக்குதா?"

"அது... அது..."

"தெரியும்... அதுக்குத்தான் பயப்பட்றீங்கன்னு நான் நினைக்கறேன். ஆமா, நான் தெரியாமத்தான் கேக்கறேன். அது தேவமாயன் கள்ளச் சொத்தோட கஜானா பெட்டி சாவிதானே மாப்ள..."

"வரதா?"

"சும்மா சொல்லுங்க. அம்பது கிலோ தங்கத்த உருக்கி உருக்கி வித்திருக்கீங்க. நீங்க என்ன ஆசாரியா? இல்ல தங்க வியாபாரியா? சும்மா சொல்லுங்க மாப்ள..."

"உனக்கெப்படித் தெரியும் வரதா?"

"வாங்குன நகைக் கடைக்காரன் என் பள்ளிக் கூட சினேகிதன்தானே... மாப்ள தண்ணிக்குள்ள மூச்சுவிட்டா கொப்பளமா வெளிய வந்துதானே தீரும். எல்லா விஷயத்துக்கும் எனக்கு சொல்லி உட்றீங்க. ஆனா ஒரு கோட்டைப் போட்டு வெச்சுகிட்டு அதைத் தாண்டவும் கூடாதுன்னா எப்படி மாப்ள?"

"வரதா உனக்கு நான் எல்லா விஷயத்தையும் பொறவு சொல்றேன்."

"இப்படியே பலதடவை சொல்லிட்டீங்க. உங்க பொஞ்சாதியான எங்கக்காக்கே நீங்க அந்த விஷயத்துல என்ன பண்ணீங்கன்னு தெரியல. அவளும் போய் சேர்ந்துட்டா. அம்புட்டு ரகசியமா அதை வெச்சிருக்கீங்க. எனக்குத்தானா சொல்லப் போறீங்க!"

வரதன் ஒரு தினுசாக வருந்துவது போலப் பேசினான். ரோஜா கேட்டுக்கொண்டே இருந்தாள்.

அந்த நொடி அங்கே பந்து ஒன்று அவர்கள் மத்தியில் விழுந்து உருண்டு ஓடியது. கைக்கு அடக்கமான பந்து... விழுந்தவிதம் கொஞ்சம் திடுக்கிட வைத்தாலும் ரப்பர் பந்துதான் என்பது அது எம்பி எம்பிக் குதித்ததில் விளங்கிவிட்டது.

"எலே யாருடாது பந்தை எறிஞ்சு விளையாட்ற வன்?" வரதன்தான் குரல் கொடுத்தான். ஓடிச்சென்று வாசல் பக்கமும் பார்த்தான். உள்ளே விழுந்து பந்தும் உருண்டு ரோஜா இருக்கும் அறைக்குள் ஓடி அவளது காலடியாகப் பார்த்துத் தேங்கியது.

அவளும் குனிந்து எடுத்தாள்.

அதில் நீல மையால் எழுதப்பட்ட சில வரிகள் - 'நாளை உன் வீட்டில் ஒரு விலைமதிப்பில்லாத ஒன்று என்னால் திருடப்படும். இது முதல் எச்சரிக்கை. எச்சரிக்கைகள் தொடரும் - சின்ன தேவமாயன்.'

படித்தவளுக்கு பகீர் என்றது. பந்தோடு வெளியே வந்து கலங்கிய முகத்துடன் செண்பகப்பாண்டியிடம் அந்தப் பந்தைக் காட்டினாள். படித்தவர் முகமும் தீப்பிடித்த மாதிரி ஆனது. வரதனும் வாங்கிப் பார்த்தான். சிடுசிடுவென்று மாறி, "என்னா தில்லு... பந்து மூலமா தகவல் தர்றானா அவன்..." என்று நரநரத்தான். ரோஜாவுக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

"மாமா... யார் மாமா இந்த தேவமாயன்... அப்பா எதுக்கு இவ்வளவு தூரம் பயப்பட்றாரு..." என்று வரதனிடம் கேட்டாள்.

"நீ போ தாயி... உனக்கெதுக்கு தாயி இந்தப் பழங்கதையெல்லாம். பாக்க உன் அத்தையப்

போலவே இருக்கே. அவளும் இப்படித்தான் இருபது வருசம் முந்தி கேள்வியா கேட்டா.

வரதா... எனக்கு பயமா இருக்குடா. எங்க திரும்ப அந்தப் பழைய காலம் வந்துடுமோன்னு ஒரே பயமா இருக்குடா..."

செண்பகப் பாண்டி புலம்ப ஆரம்பித்துவிட்டார். அப்படியே ரோஜா அங்கேயே இருக்கவும் தன்னைத்தானே சற்று தேற்றிக்கொண்டார்... சமாளிக்கவும் தயாரானார்.

"ஆமா, ஊர்ல உன் பொஞ்சாதி மக்கள் எல்லாம் நல்லா இருக்காங்களா?" அவர் பேச்சை மாற்றத் தொடங்கிவிட்டது தெரிந்து வரதனும், "எல்லாரும் நல்லாருக்காங்க மாமா" என்றவன், "இப்ப நம்ம பிரதான தொழிலே கேபிள் டி.வி. கனெக்ஷன் கொடுக்கறதுதான்" என்றான்.

"ஓ... ஆமா உன் டூரிங் தியேட்டர் என்ன ஆச்சு?"

"அட என்ன மாமா? யார் இப்ப தியேட்டருக்கு வர்றாங்க. குளுகுளுன்னு ஏசி இருக்கற கொட்டாய்க்கே யாரும் போறதில்ல. ஊத்தப்பம் கணக்கா வட்ட வட்டமா சி.டி.ங்க வந்துருச்சு. அதுலயே பத்து ரூபாய்க்கு மூணு படம் பாக்க முடியுது. அப்புறம் எவன் தியேட்டருக்கு வருவான்? அதுலயும் டென்டு கொட்டாய்க்கு?"

"அப்ப தியேட்டரை என்ன பண்ணே?"

"அப்படியே போட்டு வெச்சிருக்கேன். கல்யாண மண்டபமா மாற்றிப் போடலாம்னு ஒரு எண்ணம்.

உலகம் எம்புட்டு மாறுனாலும் ஆம்பளைக்கும், பொம்பளைக்கும் கல்யாணம் மட்டும் நிச்சயம் நடக்காமப் போகாது. அதேங்..."

அவர்கள் இருவரும் தான் இருப்பதன் பொருட்டு ஊர் விஷயம் பேச ஆரம்பித்துவிட்டார்கள் என்பது ரோஜாவுக்கும் புரிந்துவிட்டது. புத்திசாலித்தனமாக அங்கிருந்து விலகி அறைக்கதவுக்குப் பின்னால் நின்று கொண்டாள். திரும்பவும் அவர்களிடம் தேவமாயன் பற்றிய பேச்சு...

"எலேய் என்னடா பண்ண? மழை விட்டும் தூவானம் விடாத கதையா அந்த தேவமாயன் செத்தும் பிரச்சினை துரத்துதேடா..."

"அதான் இம்புட்டு பேர் இருக்கோம்ல... நம்மை எல்லாம் தாண்டிக்கிட்டு அவன் இந்த வீட்டுக்குள்ள நுழைஞ்சு திருடிப்பிடுவானா?"

"அண்ணே... கூமாச்சி மலைக் கள்ளனுங்க பத்தி உங்களுக்குத் தெரியாது. நம்மகூடப் பேசிக்கிட்டே நம்ம வாயுக்குள்ள கைய விட்டு குடலையே கூட களவாடிக்கிட்டு போயிருவாங்க. பொறவு சோறு திங்கைல எகிறிக்கிட்டு வரும்போதுதான் வவுத்துல குடலே இல்லேங்கற சமாச்சாரமே நமக்குத் தெரிய வரும்."

வரதன்கூட வந்தவர்களில் ஒருவன் படுமிகை யாகப் பேசினான். இருந்தாலும் அவன் அழுத்தமாக எச்சரிக்கிறான் என்பது புரிந்தது.

"எலேய்... நான்லாம் வாடிப்பட்டில என்னடா பண்றேன்? நானே ஒரு ஜெகஜ்ஜால கள்ளன். அவன் என்ன நமக்கும் மேலயாடா?"

"அண்ணே உங்க கள்ளத்தனமெல்லாம் டப்பா லெவல் தான்ணே... தேவமாயன் கள்ளத்தனம் பி.எச்.டி. லெவல். அவனுக்கு சாமியே துணையா நிக்கும்னு சொல்வாங்க. உங்களுக்கு போலீசுல கூட காசு கொடுத்தாத்தான்னே துணைக்கு வருவாங்க..."

வரதனும் அவன் சகாவும் தேவமாயன் பற்றி பிரதாபமாகப் பேசிக்கொண்டே போனது, செண் பகப் பாண்டிக்குள் எரிச்சலைப் பீறிட வைத்தது.

"எலேய்... விஷயத்துக்கு வாடா. அந்தப் பந்துல அவன் அப்படி என்னத்தடா எழுதியிருக்கான்? திரும்ப படிங்கடா."

"என்ன மாப்ள நீ... நாலு வெளி விஷயம் பேசினா உங்களுக்கு கொஞ்சம் ஆறுதலா இருக்கும்னுதானே பேசிக்கிட்டிருக்கோம். இந்த பந்துகிட்டையே வந்து வந்து நிக்கிறீங்களே. இதுல ஒரு விலைமதிப்பில்லாத ஒண்ண களவாடப் போறதா சொல்லியிருக்கான் அந்த நாயி..."

"அது எதுன்னு எப்படிக் கண்டுபிடிக்கறது?"

"அதை எல்லாம் நம்மளால கண்டுபிடிக்கவே முடியாது. களவுபோன பொறவுதான் தெரிய வரும்."

திரும்பவும் குறுக்கிட்டான் வரதனின் கைத் தடிகளில் ஒருவன். செண்பகப் பாண்டி அவனைப் பொசுக்கி விடுவது போலப் பார்க்கவும் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

கூர்ந்து கவனித்தபடி காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்தாள் ரோஜா.

அவளுக்குத் தெரியாது... அவள்தான் அந்த விலை மதிப்பில்லாத ஒன்று என்று!

# 17

'நட்டவிதை பயிராகும் நானிலத்து மண்ணுல
பழைய கதை தொடராகும் தேவர்கோயில் ஊருல.
கெட்ட கனா கண்டது போல்
முட்டவரும் பழைய பகை! கபர்தார்!'

ஏராளமான அளவில் மனப்புழுக்கத்தில் இருந்தாள் ரோஜா. ஹாலில் செண்பகப் பாண்டியும் வரதனும் விடாமல் சின்ன தேவமாயன் பற்றியே பீறாய்ந்து கொண்டிருந்தார்கள்.

ஏதோ நடந்திருக்கிறது...

என்னவோ நடக்கவும் போகிறது...

ஆனால் அதை தன்னால் முழுவதுமாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. அது எதுவாக இருக்கும்? அவளுக்குள் குறுக்கில் ஓடும் பூனைக்குட்டி போல கேள்வி விழுந்து எழுந்து ஓடியது. சட்டென்று ஹால் பகுதியில் பேசிக் கொண்டிருந்தவர்களின் பேச்சு துப்புரவாக அறுபட்டதுபோல் இருந்தது.

மெல்ல எட்டிப் பார்த்தாள்.

செண்பகப்பாண்டியில் இருந்து வரதன் உட்பட ஒருவரும் இல்லை.

ரகசியமாகப் பேசிக்கொள்ள வசதியாக அவர்கள் வாசல்பக்கம் போய்விட்டது தெரிந்தது.

ரோஜாவின் அழகிய சிவந்த முகத்தில் ஈசல் பறக்கத் தொடங்கியது.

அந்த நிலையில் அவளை உற்றுப் பார்த்தபடியே தோள்மேல் ஒரு தவிட்டு மூட்டையுடன் கடந்து போனார் ராமக்கோனார். செண்பகப் பாண்டியின் மாட்டுக் கொட்டகையை சிறுவயது முதலே கட்டிக் கொண்டு அழுபவர். சிறிதுதூரம் வரை சென்றவர் தவிட்டு மூட்டையை சற்றே இறக்கியவராக கழுத்து வியர்வையை வழித்துச் சிண்டினார்.

"கோனாரே..."

"என்ன கண்ணு?"

"உங்கிட்ட ஒண்ணு கேக்கவா?"

"தெரியும் கண்ணு... உங்கப்பாரும் மாமனும் குசு குசுன்னு எதைப்பத்தி பேசிக்கிறாங்கன்னு தானே கேக்கப்போறே?"

ரோஜாவின் தலை ஆமோதித்து ஆடியது.

"வேணாம் கண்ணு... நீ போய் உன் சோலியப் பாரு. அதேசமயம் கவனமா இருந்துக்க. அந்த தேவ மாயன் சங்கதியே ஒரு தெகட்டலான விஷயம்தான். அதுலையும் அவன்கிட்ட ஒரு கணக்கு வேற இருக்கு உன் ஊட்டுக்கு. விடுவானா?" ராமக்கோனார் அவளை அடக்குவது போல ஆர்வத்தை அதிகமாக்கத்தான் செய்தார்.

"கோனாரே... ஏன் நீங்களும் அப்பா மாதிரியே பேசறீங்க... என்னன்னு என்கிட்ட சொல்லக்கூடாதா?" ரோஜா பதிலுக்கு சற்று சீறினாள்.

"ஆத்தி... உன் அத்தையைப் போலவே பேசறியே... அதுவும் இப்படித்தான். உன்னைய பாக்கைல அன்னிக்கு சொர்ணம் கேட்டது போலவே இருக்கு..."

"அத்தை அத்தைங்கறீங்க. ஆனா அவங்களோட ஏன் பேச்சுவார்த்தையே இல்லேன்னு கேட்டா யாரு எதுவும் சொல்லமாட்டேங்கறீங்க..."

"என்ன தாயி பண்ண? நாங்க எதையாவது சொல்லி, நீ எதையாவது பதிலுக்கு பண்ணி, அது ஆண்டே காது வரை போனா எங்க முதுகுத் தோலு தானே உரியும்."

"அதெல்லாம் எதுவும் நடக்காது. நான் இருக்கேன்."

"இல்ல தாயி... உனக்கு உன் குடும்ப வரலாறெல்லாம் தெரியாது. உங்கப்பா சவுக்க எடுத்தா குறைஞ்சது நூறு சவுக்கடியாவது கொடுத்தாத்தான் அவரு ஆத்திரம் அடங்கும். ஒருவட்டம் பண்ணை மாடு ஒண்ணு மேஞ்சுகிட்டே எங்கையோ போயிடிச்சு. நான்தான் அதை யாருக்கோ வித்துட்டேன்னு உன் அப்பா என்னை வெளிய இருக்கற வாதா மரத்துல கட்டி வெச்சு தோல் உரிச்சதையெல்லாம் என்னால மறக்க முடியாது.

அப்பால போன மாடு தானாவே திரும்பி வந்துச்சு. அதைப் பார்த்த பிறகும் ஒரு வருத்தம்கூட தெரிவிக்கல நம்ம ஆண்டே. நானும் பெருசா அதை எடுத்துக்கலை. உங்க தாத்தா மூஞ்சிக்காகத்தான் இங்க வேலைல இருந்தேன். உன் தாத்தாபோல ஒரு சத்திய சந்தனை எல்லாம் இந்த பூமியில பாக்க முடியாது. இல்லாட்டி அந்த தேவமாயனோட கூட்டத்துக்கு சமமா அவங்க உயிர் பிரியவும் இவரோட உயிரும் பிரியுமா என்ன?"

ராமக்கோனார் பொதுப்படையாகப் பேசியதி லேயே பல புதிய தகவல்கள் ரோஜாவைப் போட்டுக் குடைய ஆரம்பித்துவிட்டன. ராமக்கோனாரோ திரும்ப தவிட்டு மூட்டையைத் தூக்கிக்கொண்டு கொல்லைப்புறம் நடைபோடத் தொடங்கிவிட் டார்.

அதேசமயம் வெளியே கைக்கு அடக்கமான குட்டிக் குட்டி துப்பாக்கிகள் செண்பகப் பாண்டி யால் வரதனிடமும் அவன் ஆட்களிடமும் விநியோக மாகிக் கொண்டிருந்தன.

ரோஜாவை உடனேயே பரபரப்பு தொற்றிக் கொண்டது. இவர்களிடம் பேசுவதில் எல்லாம் அர்த்தமே இல்லை போலவும் தோன்றியவளுக்குள் ஒரே குழப்பம். எதிரே சுவரில் தங்கமுத்துப் பாண்டி யருடன் ஒரு பத்து வயதுப் பெண்ணாக சொர்ணம் நின்றுகொண்டிருக்கும் புகைப்படம். சொர்ணத் தையே பார்த்தவளுக்குள் சட்டென்று ஒரு புது முடிவு.

அந்த நாளைய பித்தளை சருவம் அது. உட்புறம் ஈயம் பூசப்பட்டு அதனுள் முள்ளங்கி சாம்பார் தள தளவென்று கொதித்துக்கொண்டிருந்தது. அற்புத மான ஒரு வாசம் ஒரு ஊதுபத்திப் புகையின் வியாபிப்பைப் போல அந்த வீட்டுக்குள் வளைய வர அதை அப்படியே உறிஞ்சியவனாக "அம்மா... என்ன சாம்பாரும்மா வைக்கறே... வாசனை வாசப்படி கிட்ட வரும்போதே தூக்கி அடிக்குது..." என்றபடியே உள்ளே வந்து கொண்டிருந்தான் ராஜேந்திரன்.

"முள்ளங்கி சாம்பாருடா... போய் கால், கை கழுவி கிட்டு வா, சாப்பிட உட்காருவோம்" என்றாள் சொர்ணமும் உற்சாகமாக. அதன் நிமித்தம் கொல்லைப் புறம் சென்றவன் கிணற்றில் கயிற்றுடன் வாளியை விட்டு கீச்சுவீச்சு சப்தமுடன் தண்ணீரை இறைத்தான். அப்படியே முகத்திலும், கழுத்திலும் ஈரப்படுத்திக் கொண்டு குச்சுப்பிடி ஆடுகின்ற மாதிரி கால்களை ஆட்டி அசைத்து நீர்விட்டு கால்களையும் கழுவிக் கொண்டு திரும்பியபோது பின்பக்க இடிந்த மதில் சுவருக்குப் பின்னால் போகும் ஒற்றையடிப் பாதை மேல் சம்முகமணியும், வேலப்பனும் தெரிந்தனர். அவனையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

"என்னா பெருசு... ரெண்டு பேருமா எங்க கிளம்பிட்டீங்க?"

"ஒண்ணுமில்ல ராஜேந்திரா. கம்மாகரை பக்கம் தான் போறோம். ஆமா ஊர் பூரா ஒரே போலீஸ் தலையா இருக்குதே கவனிச்சியா?"

"பாத்தேன் பாத்தேன்... எல்லாம் என் மாமன் வேலை தான். வேற என்ன?"

"விசயம் தெரியுமா உனக்கு?"

"இதுக்குமேல என்ன விசயம் இருக்கு?"

"சரிதான்... பந்து விசயம் உனக்குத் தெரியாதாக்கும்?"

"பந்து விசயமா?"

"ஆமாய்யா... தேவமாயன் திரும்ப வந்துருக்கான்ல? அவன் உன் மாமனுக்கு ஒரு பந்துமேல

விசயத்தை எழுதி அனுப்பியிருக்கான். விலைமதிப்பில்லாத ஒண்ணை அவன் கடத்தப் போறானாம்!"

அதைக் கேட்கவும், முள்ளுள்ள ஒரு மீன் தொண்டையில் சிக்கிக்கொண்டது போல இருந்தது ராஜேந்திரனுக்கு.

"சரி... சரி... நாங்க முன்னால போறோம். கம்மாக் கரை பக்கமா வா. விவரமா பேசலாம். ஒண்ணு நிச்சயம்பா... இனி இந்த தேவர்கோயில்ல டெய்லி தில்லானாதான்." வேலப்பன் வருத்தத்தைக் கிண்டலோடு வெளிப்படுத்தி விட்டு நடந்தான்.

ராஜேந்திரனும் உள் திரும்பவும் தட்டைப் போட்டு சோற்றை எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள் சொர்ணம். மௌனமாக அதன் முன்னால் ராஜேந்திரன் வந்து அமரவும் "என்னாடா... சம்முக மணியும் வேலப்பனும் உன் மாமன் புராணம் படிச்சானுங்க போல இருக்குதே?"

சொர்ணமும் நைச்சியத்தோடு ஆரம்பித்தாள்.

"கேட்டுகிட்டிருந்தியாம்மா...?"

"எல்லாம் காதுல விழுந்திச்சு..."

"என்னம்மா ஆகும்?"

"விரை ஒண்ணு விதைச்சா சுரை ஒண்ணா முளைக்கும்."

"அப்படின்னா...?"

"நீ சாப்பிடற வழியப் பாரு. எது நடந்தா என்ன? வேடிக்கை பாப்போம் நாம..."

"இல்லம்மா... நீ சொன்னதை எல்லாம் கேட்ட பிறகு எனக்கு மாமா விசயத்துல உன்னை மாதிரி யோசிக்க முடியல. ரத்தம் கொதிக்குது..."

"இங்க குழம்பு கொதிக்குது பார். சோத்த தின்னு. எது கொதிச்சா என்ன பிரயோசனம். போன உன் அப்பா உசுர் திரும்பி வரப்போகுதா, இல்லை அந்த தேவமாயன் தான் திரும்பி வரப்போறானா?"

சொர்ணத்திடம் அலுப்பு அரங்கேறியபோது வாசல்படி அருகில் ஒரு பெண் உருவம் நிழலாடியது.

திரும்பி பார்த்த சொர்ணத்துக்குத் தூக்கி வாரிப் போட்டது. ரோஜா நின்றுகொண்டிருந்தாள்.

கூளையனூருக்குள் புழுதி பறக்க நுழைந்திருந்தது அந்த போலீஸ் ஜீப். சாலையில் போவோர் வருவோர் மிரண்டு ஓரம்கட்ட அசுர வேகத்தில் பறந்த அந்த ஜீப் ஒரு சேரி போன்ற பகுதிக்குள் நுழைந்து ஒரு பெட்டிக் கடைமுன் நின்றது.

உள்ளிருந்து குதித்தார் சப் இன்ஸ்பெக்டர் அருள் மணி. கடைக்காரன் சற்று வெலவெலத்துப் போய் பார்த்தான்.

"என்ன பாக்கறே... எம்புட்டு வருசமா இங்க கடை போட்ருக்கே?"

"பத்து பதினைஞ்சு வருசமா இருக்கேனுங்க சாமி..." பணிவும் பயமுமாக பதில் சொன்னான் கடைக்காரன்.

"அப்ப இந்த ஊர்ல எல்லாரையும் தெரியும்னு சொல்லு."

“ஓரளவுங்க சாமி... இப்ப உங்களுக்கு யாரை யாவது தெரியணுங்களா?”

“ஆமாம். கள்ளன் தேவமாயனோட வப்பாட்டி இந்த ஊர்க்காரிதானே?”

அந்தக் கேள்வி அப்படியே அந்தக் கடைக்காரன் வாயை அடைத்துவிட்டிருந்தது. கண்கள் அகண்டு விட்டன.

“எலேய்... உன்னியத்தான்! என்னா முழிக்கறே?”

“அது வந்து சாமி...”

“எது வந்து சாமி. வப்பாட்டி செங்கமலத்தோட ஊர் இதுதானே?”

“ஆமாங்க...”

“ஊரு எங்க இருக்குது?”

“அது வந்துங்க...”

“சும்மா அதுவந்து இது வந்துன்னு ஜிலேபி சுத்தாம ஊடு எங்கன்னு காட்டு.”

“பாவங்க அது...”

“என்னய்யா சொல்றே?”

“அது இப்ப பைத்தியமுங்க. அப்படியே போனீங்கன்னா ஆத்தங்கரை பக்கம் பாக்கலாம்...”

“பைத்தியமா?” அதிர்ந்தார் அருள்மணி.

“ஆமாங்க சாமி... போய் பாருங்க தெரிஞ்சிக்கு வீங்க.”

"ஆமா அவளுக்கு ஒரு மவன் இருந்தான்ல...?"

"இருந்தானுங்க. ஆனா சின்னப் புள்ளையா இருக்கும்போதே பம்பாய் பக்கம் ஓடிப்போயிட்ட தாலே செங்கமலம் அப்படியே ஒடிஞ்சு போய்ட்டா. ஒரு பக்கம் புருஷனும் செத்து, இன்னொரு பக்கம் மவனும் ஓடினா எப்படிங்க தாங்கமுடியும். அதான் மன சொடிஞ்சு பைத்தியமாயிட்டா."

"அப்ப அவ பையன் அவகூட இல்லையா?"

"அவன்தான் ஓடிப்போனானுங்களே. எப்படிங்க கூட இருக்க முடியும்?"

கடைக்காரன் பேசப்பேச அருள்மணி முகத்தில் அசாத்தியமான மாறுதல். தீவிரமான சிந்தனையும் கூட. அப்படியே ஜீப்பைக் கிளப்பினார். ஜீப்பும் முல்லையாற்றுப் பக்கம் ஓடியது.

தளதளவென்று வயல்கள்!

ஆற்றிலும் செக்கச் சிவந்த தண்ணீரின் சீற்றம். ஓரஞ்சாரமாய் கோரைப் புதர்கள் மண்டி வளர்ந் திருந்தன. சில இடங்களில் வாத்துக் கூட்டம் ஆற்றில் இறங்கி அதன் ஓட்டத்தோடு ஓடிக்கொண்டு மிருந்தன.

அந்த ஆத்தோரத்தில் சில இடங்களில் மட்டும் இடிந்த நிலையில் படித்துறை. படித்துறைக்குச் செல்லும் பாதை மேல் ஓர் ஓங்கி உயர்ந்த அரச மரத்தின் கீழ் பிள்ளையார் சிலையும் நாகர் சிலையும் தென்பட்டன. அந்த சிலைகளுக்கு முன்னால் ஒரு அழுக்குப் பையுடன் தலைவிரி கோலமாகப் படுத்துக் கொண்டிருந்தாள் செங்கமலம்.

சப்-இன்ஸ்பெக்டரின் ஜீப் கச்சிதமாக அவள் அருகே வந்து கிறீச்சிட்டு நின்றது. இறங்கியவர் அவளை நெருங்கிச் சென்று பார்த்துவிட்டு சுற்றுமுற்றும் பார்த்தார். அவளோ அதீதமாக பயந்தவள்போல ஆகி எழுந்து உடம்பை ஒடுக்கிக் கொண்டு அமர்ந்தாள்.

"சுட்றாதீங்க சாமி... சுட்றாதீங்க சாமி..." என்று பதற்றத்தையும் பயத்தையும்கூடக் காட்டினாள். சிறிது நேரம் நின்று கவனித்த அருள்மணிக்கு சற்று குழப்ப மாக இருந்தாலும் ஒரு முடிவுக்கு வந்துவிட்டதைப் போல ஒரு தோரணையும்கூட.

திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே ஜீப்பில் ஏறினார். ஜீப் திரும்பி ஓடத் தொடங்கியது. செங்கமலமும் அது போவதையே உற்றுப் பார்த்த படி... அப்பொழுது அவளை நோக்கி ஒரு குரல்.

"தாயி..."

திரும்பினாள். பெட்டிக் கடைக்காரன்!

"நீ சொன்னமாதிரியே அந்த போலீஸ்காரன் கிட்ட் சொல்லிப்புட்டேன்."

அவள் அதைக் கேட்டு அவனை மௌனமாக வெறித்தாள்.

"எம்புட்டு நாளைக்கு தாயி இப்படி வேஷம் கட்ட முடியும். எனக்கென்னவோ இனி தினம் தினம் போலீசு வரும்போல தோணுது."

"வரட்டும். எத்தன தடவை வேணா வரட்டும். ஆனா அவங்களால ஒரு ஒத்த தலைமுடிய கூட புடுங்க முடியாது..."

"ஆமா, சிவந்திப்பாண்டி எங்க?"

"சின்ன தேவமாயன்னு சொல்லு..."

"தப்புதான் - சின்ன தேவமாயன் எங்க?"

"இன்னிக்கு அவனுக்கு முதல் வேட்டை. அவங்க அப்பா சமாதிக்குப் போயிருக்கான்."

சொல்லும்போதே அவள் குரல் உடைந்து போனது!

வரிசையாக இருந்தன அந்த சமாதிகள். ஒன்றுக்கு ஒன்பது சமாதிகள். சுற்றிலும் ஒரே புதர். அந்த சமாதிகள் உள்ள சுடுகாட்டுக்குள் குடுகுடுப்பைக் காரன் வேடத்தில் போலீஸ்காரர் ஒருவர் நுழைந்து கொண்டிருந்தார். எப்படியும் தேவ்மாயன் சமாதிக்கு சின்ன தேவமாயன் வரலாம் என்பது போலீசின் யூகம். அதற்குத் தோதாக அவரிடம் செல்ஃபோன், துப்பாக்கி என்று சகலமும் அந்தத் துணி மூட்டைக் குள் உள்ளடங்கியிருந்தன. ஒரு மரத்தடியாகப் போய் காலை நீட்டி உட்கார்ந்துகொண்டு காது குடையத் தொடங்கிவிட்டார் அந்தப் போலீஸ்காரர். அப் பொழுது பார்த்து அவரது செல்ஃபோனும் சிணு ங்கியது. சுற்றி ஒரு பார்வை பார்த்துவிட்டு எடுத்து காதைக் கொடுத்தார்.

"த்ரீ டுவென்ட்டியா?"

"யெஸ் சார்..."

"எங்கய்யா இருக்கே?"

"தேவமாயன் சமாதி இருக்கற சுடுகாட்டுல சார்."

"வெட்டியா அங்க இருந்துகிட்டு டயத்த வேஸ்ட் பண்ணாம திரும்பிடு. சின்ன தேவமாயன்கறவன் செங்கமலத்தோட மவனில்ல. வேற எவனோ?"

"அப்படியா சார்..."

"ஆமாம். நீ திரும்பிடு. வேற ரூட்ல போய்தான் அவன் யாருன்னு கண்டுபிடிக்கணும்."

"நல்லது சார்..." மரத்தடியில் அமர்ந்திருந்த நபரும் இனி அங்கு வேலை இல்லை என்பது போலப் புறப்படத் தயாராக, அந்த மரத்துக் கிளைமேல் இருந்து அதை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தது ஓர் உருவம்!

# 18

'கனிஞ்சது காலம்!
பணிஞ்சது விதி
நிமிர்ந்தது நியாயம்!
பிறந்தது உறவு'

மரத்தின் மேல் இருந்து கவனித்துக் கொண்டிருந்தவன் தோளில் புறா ஒன்றும் இருந்தது. சரியான பந்தயப்புறா அது. மரத்தில் இருந்து குதித்தவன் அந்தப் புறாவின் காலில் உள்ள ஒரு சிறிய தாயத்தைத் தான் பார்த்தான். அதனுள் அவன் ஒரு சிறிய காகிதத்தில் எழுதி வைத்திருக்கும் செய்தி.

அந்தப் புறாவை வருடியபடியே ஏந்திப் பிடித்தவன், "போடா வீரியா.... கூளையனூர் போய் என் ஆத்தாகிட்ட விசயத்தைச் சொல்லு. நான் அந்தச்

சின்னப் பாளையத்தான் ஊட்டுக்குள்ள எப்படியும் நுழைஞ்சிடுவேன்னு போய் சொல்லு...” என்று அந்தப் புறாவை வானில் தூக்கி வீசினான். அதுவும் சிற கசைத்தபடி பறக்க ஆரம்பித்தது.

அடுத்து அவன் நேராகச் சென்று நின்றது அந்த ஒன்பது சமாதிகள் முன்தான். தேவமாயனை அன்று பார்த்தவர்கள் யாராவது இன்று இருந்தால் துல்லிய மாக அடையாளம் கண்டுகொள்வார்கள். அச்சு அசல் தேவமாயனே திரும்ப வந்து நிற்பது போன்ற தோற்றம். கண்கள் கலங்க சமாதி முன் நின்றவன் சமாதிமுன் உள்ள மண்ணை எடுத்து நெற்றித் திலக மாய் இட்டுக்கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

**சொ**ர்ணம் ரோஜாவைத் துரத்துவதிலேயே குறியாக இருந்து துரத்தியும்விட்டாள். ஆனால் ரோஜா அசரவில்லை.

“அத்தை... எனக்கு எல்லா விஷயமும் தெரிஞ்சே தீரணும். இல்லாட்டி நான் திரும்பி என் வீட்டுக்குப் போகமாட்டேன். வயக்காட்டு கிணத்துக்குத்தான் போவேன். உனக்கும் நான் உயிரை விட்டுட்ட சேதி வரும்...” என்று சொர்ணத்தைப் பதைக்க வைத்து, அன்று நடந்த அவ்வளவையும் ஒருவழியாகத் தெரிந்து கொண்டவள் சிறிதுநேரம் எதையுமே பேச முடி யாதவள் ஆகி ஓர் ஓரமாக அப்படியே உட்கார்ந்து விட்டாள்.

ராஜேந்திரன் அவள்மேல் வைத்த விழியை எடுக்கவில்லை. அவள் கவலைப்படுவதும், கலங்கி அமர்ந்திருப்பதும் அவனையே என்னவோ செய்தது. “அம்மா, அதுக்கு குடிக்க ஏதாவது கொடு...” என்றான். சொர்ணமும் காப்பி தண்ணிக்கு தயார்

ஆகும்போது அவள் வீட்டு வாசலில் செண்பகப் பாண்டியரின் பியட் கார் வந்து தேங்கி நிற்க அதில் இருந்து திபுதிபுவென்று வேலையாட்கள் இறங்கி உள் நுழைந்தனர்.

சொர்ணத்துக்குப் புரிந்துவிட்டது.

"புறப்படு ஆத்தா... இல்லாட்டி இந்தப் பயலுக என்கிட்ட சண்டை இழுப்பாங்க. எங்க இவ்வளவு நேரமா வராம இருக்காங்கன்னு பார்த்தேன்" என்றாள்.

ரோஜா சொர்ணத்தை கலக்கமாய் பார்த்துக் கொண்டே நடந்து சென்று காரில் ஏறினாள். அவளுக்குள் புதிது புதிதாக ஏதேதோ முடிவுகள்!

**வ**ழக்கம்போல ஆடு, மாடு, கோழி, வாத்து என்று மிருகக் கூட்டமுடனும், மனிதக் கூட்டமுடனும் வந்து நின்ற மினி பஸ்ஸில் இருந்து கோடு போட்ட அண்டர்வேர் வெளித்தெரிய, கர்ச்சீப் கட்டிய கழுத்தும், துணியால் சுற்றிய அரிவாள் கட்டுமாக ஒரு சமையல்காரன் தன் அன்னக்கரண்டியுடன் இறங்கும் தோரணையில் இறங்கியிருந்தான் பன்னிமூக்கன் என்கிற வாடிப்பட்டி வரதனின் சினேகிதன். பெயருக்கு ஏற்பத்தான் அவன் மூக்கும் இருந்தது. பஸ்ஸில் இருந்து உதிர்ந்தவன் பிசைந்து பிடித்த மாதிரி இருந்த தன் தோள் இரண்டையும் சிலுப்பிக் கொண்டு நடக்க முனைந்தபோது எதிரில் காத்திருந்தது போல சைக்கிளில் ஒருவன்.

"அண்ணே... பன்னிமூக்கண்ணே..."

“யாருடா நீ... என்னிய எப்படி உனக்குத் தெரியும்?”

“என்னண்ணே உங்களத் தெரியாதாக்கும்? வரதண்ணன் தான் அனுப்புனாரு. இப்ப வரதண்ணனும், சின்ன பாளையத்தாரும் பனங்காட்டுக் குடிசைல இருக்காங்க. உங்களை அங்கதான் கூட்டிகிட்டு வரச் சொன்னாங்க.”

“அப்பாடியா... ஆமா நான் வரப்போற விசயம் வரதண்ணனுக்கு எப்படித் தெரியும்?” - பன்னிமூக்கன் சந்தேகக் கேள்வியோடு கேட்க, “அட என்னண்ணே நீ... போடிநாயக்கனூர்ல நீ பஸ் ஏறும்போதே இங்க விசயம் போனில வந்துடுச்சி... அங்க பஸ் ஸ்டாண்டுல நமக்கு இல்லாத ஆளுங்களா என்ன?” என்று அந்த சந்தேகக் கேள்வியை அழகாகச் சமாளித்து அழைத்தான் சைக்கிள்காரன்.

அதன்பின் பன்னிமூக்கன் எதுவும் பேசவில்லை. அவன் சைக்கிளில் தொற்றிக்கொண்டான். சைக்கிளும் திகிடுதம்பாக உருண்டது. பன்னிமூக்கனின் அரிவாள்கள் துணிக்கட்டுக்குள்ளும் உரசி சப்தமெழுப்பின.

“எப்பவும் அரிவாளும் கையுமாதான் சுத்துவீங்களோ?”

“பொறவு... எந்தப் பக்கம் இருந்து எவன் வந்து என்னை வெட்டுவான்னு கண்டேன். வெட்றதே தொழிலாப் போச்சு. சூதானமா இருக்கணுமில்ல. ஆமா யாருப்பா அது சின்ன தேவமாயன்? நான் பெரிய தேவமாயனுக்கே பீடா மடிச்சுக் கொடுத்தவன்...”

சைக்கிளில் பன்னிமூக்கன் கொஞ்சம்போல பீலா வெல்லாம் விட்டான். அதற்குள் பனங்காடும் வந்துவிட்டது. காய்ந்த மட்டைகள் ஆடிக்காற்றில் உரசிக்கொள்வதில் ஒரே சப்தம். யாராவது தனியாக வந்தால் பயந்துவிடுவார்கள். சைக்கிள் பனங்காட்டு ஒத்தையடிப் பாதைக்குள் நுழைந்தது. கீச்சு வீச்சு என்று எலிபோல் கத்திக்கொண்டு ஓடியது. அதே சமயம் ஒவ்வொரு மரம் பின்னால் இருந்தும் ஒவ் வொரு உருவம் வெளிப்பட்டு அரிவாளோடு நின்றது. பன்னிமூக்கனையே அவர்கள் பார்வையும், தோற்ற மும் வெலவெலக்க வைத்தது. நடு நாயகமாக அங்கே சின்ன தேவமாயன். பன்னிமூக்கன் விளங்கிக் கொண் டான். சுற்றி ஒரு பார்வை பார்த்தான். அவர்கள் ஒவ்வொருவராக மெல்ல நெருங்கிவர ஆரம்பித்தனர்.

"வேணாம்... வேணாம்... நான் கூலிக்கு மாரடிக் கறவன். எனக்கு யாரும் பகையும் கிடையாது, நட்பும் கிடையாது. வலுத்த கை எதுவோ அங்க அடங்கிப் போயிருவேன். ஏன்னா எனக்கு என் உசுரு வெல்லம். நான் மத்தவங்க மாதிரி வெட்டியா தொடை தட்டி வசனமெல்லாம் பேசமாட்டேன். உங்களுக்கு இப்ப என்ன வேணும்... சொல்லுங்க கேக்கறேன்..." என்று அதிகம் அலட்டிக் கொள்ளாமல் வழிக்கு வந்தவன் அப்படியே நிலத்தில் முட்டியிட்டும் அமர்ந் தான்.

சின்ன தேவமாயன் முகத்தில் ஒரு குறுஞ் சிரிப்பு!

'மாப்ள வரதனுக்கு... பன்னிமூக்கன் சொல்லிக் கறது. என்னைய போலீசு தேடுது. நேத்து ஒரு பார்ட்டிய போட்டுத் தள்ளிட்டேன். விசயம் எஸ்.பி.

வரை போய் என்னிய பிடிக்க ஒரு லாரி போலீஸை அந்த ஆளும் அனுப்பியிருக்காப்படியாம். அதான் என்னால நேர்ல வர முடியல. என் சார்பா சிலந்திப் பாண்டிங்கறவனை அனுப்பியிருக்கேன். இவன் என்னியவே விழுங்கி ஏப்பம் விட்றவன். உன் தேவைக்கு ரொம்ப தோதா இருப்பான். உபயோகப்படுத்திக்க. இப்ப நான் வருசநாட்டு மலைல ஒரு குகைல இருக்கறேன். இங்க செல்போன் வேலை செய்யமாட்டேங்குது. அதனால உன்னோட பேச முடியலை. இந்த சலசலப்பெல்லாம் கொஞ்ச நாள்ல அடங்கிடும். பொறவு நானே உன்னிய போன்ல கூப்ட்டு பேசறேன். சின்ன பாளையத்தாரை நான் ரொம்ப விசாரிச்சதா சொல்லு. அந்த சின்ன தேவமாயன்கறவன் நம்ம பையன் முன்னால ஒரு தட்டுப்பூச்சிதான். தட்டிப் போட்ருவான், கவலைப்படாதே... வரட்டுமா?'

அந்தக் கேசட் ஓடி முடிய, அதைக் கேட்டு முடித்த நிலையில் செண்பகப் பாண்டியரும், வாடிப் பட்டி வரதனும்... சற்றுத் தள்ளி அந்தக் கேசட்டைக் கொண்டு வந்தவனான சிலந்திப்பாண்டி என்கிற சின்ன தேவமாயன்.

வரதன் பார்வை அவனை அளந்தது.

சின்ன தேவமாயன் கொஞ்சம்போல தன் உருவை மாற்றிக்கொண்டிருந்தான். இருந்தும் செண்பகப் பாண்டியர் அவனை ஒரு தினுசாகப் பார்த்தார்.

அடையாளம் கண்டுபிடித்துவிட்டவர் போல முகம் மாறினாலும் குழம்பவும் செய்தார்.

இடையில் இடையில் தடதடவென்று பக்கத்து அறைக்கதவு தட்டப்படும் சப்தம்...

"மாப்ள... போய் திறந்து விடுங்க. இனி ரோஜா வுக்கு காவல் தர இந்த சிலந்திப் பாண்டிதான்" என்றான் வரதன். அவனே போய் கதவைத் திறந்து விட சற்றே தலைவிரி கோலத்தில் ரோஜா அறைக்குள் இருந்து வெளியில் வந்தாள். சின்ன தேவமாய னாகிய சிலந்திப் பாண்டியும் அவளைக் கூர்ந்து பார்த்தான்.

அவளோ கத்தத் தொடங்கினாள்.

"என்னை ரூம்ல போட்டு பூட்டியா வைக்கறீங்க. நீங்க யாரு, எப்படிப் பட்டவங்கன்னெல்லாம் நல்லா தெரிஞ்சு போச்சு. அத்தை எல்லா விசயத்தையும் சொல்லிட்டாங்க. திருடன்கிட்டையே திருடின பெரிய திருடன் நீங்க. என் தாத்தா ஒரு அரிச்சந்திரன்னா நீங்க ஒரு பயங்கர சீட்."

ரோஜா தன்னை மறந்து வெடித்து அழுதாள்.

"மாப்ள.. இதை இங்க வெச்சிருந்தா நம்ம நிம்மதிதான் கெடும். அந்த சின்ன தேவமாயனும் இவளைக் குறிவெச்சு தான் வரணும். ஏன்னா பாட்டன் சொத்து பேரன் பேத்திக்குங்கற கதையா இவளைத் தூக்கிட்டுப் போனாலே போதும்... உன் சொத்தையே தூக்கிட்டுப் போனமாதிரி தானே?"

வரதன் கொஞ்சம் சாமர்த்தியமாகவே செண்பகப் பாண்டியரை மிரட்டினான். அவரும் மிரண்டார். அப்படியே சின்ன தேவமாயன் அருகே வந்தவன், "எலேய் சிலந்தி... இவளை பத்ரமா கூட்டிகிட்டு நம்ம தென்னந்தோப்பு பங்களாவுக்குப் போயிடு. அங்க வெச்சு இவ கழுத்துல தாலிய கட்டப் போறவன்

நான்... ஒரு பக்கம் சின்ன தேவமாயனுக்கும் ஆப்பு, இன்னொரு பக்கம் என் மாப்ளைக்கும் ஆப்பு...

ஒரு கள்ளப்பய சபதம் போட்டு சொத்தை கொண்டு கிட்டு போக விட்றக்கூடாது. நான் சொன்னதை மனசுல வெச்சு சாக்ரதையா இவளைக் கூட்டிகிட்டு போ... வாசல்ல சுமோ கார் நிக்குது பார்..." என்று அவன் காதில் கிசுகிசுத்தான்.

சின்ன தேவமாயனுக்கு அந்தக் கணம் வாடிப் பட்டி வரதன் ஒரு மனித நரியாகத்தான் தெரிந்தான். அடுத்த ஐந்தாவது நிமிடம் ரோஜாவை இழுத்துக் கொண்டு சுமோவில் ஏறிக்கொண்டு சுமோவையும் கிளப்பினான்.

அவளோ உள்ளே உச்சபட்ச குரலில் கத்தினாள். "என்னை விடு... உங்களுக்கு அந்த சின்ன தேவமாயன் ஆயிரம் மடங்கு மேல்... என்னை விடு... என்னை விட்டுடு..." என்று கதறினாள்.

சின்ன தேவமாயன் முகத்திலும் ஓர் அர்த்த முள்ள புன்னகை. காரை டிரைவ் செய்தபடியே திரும்பியவன் "என்னம்மா நீ... பெத்த தகப்பனை இப்படித் தூக்கி எறியறே? சின்ன தேவமாயன் ஒரு [illegible] [illegible] ஆளை அடிச்சு உலைல போட்டவன்..."

"[illegible] நீயெல்லாம் அப்படித்தான் பேசுவே. அவன் ஒரு ஜெனுவைன்' பர்சன். திருடங்களா இருந்தாலும் அவங்களுக்கு இருந்த சத்தியப் பற்றும் நேர்மையும் என்னை பிரமிக்க வெச்ச விஷயங்கள். தப்பிச்சுப் போக வழியிருந்தும் ஒருத்தருக்கு ஒன்பது

பேர் தூக்குல தொங்கியிருக்காங்கன்னா அவங்கள என்னன்னு சொல்றது?

என் தாத்தாவை எவ்வளவு நம்பியிருந்தா அவன் தன் திருட்டு சொத்தையெல்லாம் கொடுத்திருப்பான். அதையே திருடின பெரிய திருடன் என் அப்பா. நீயெல்லாம் அவர் வீசி எறியற பணம்கற எலும்புக் கூட்டுக்கு ஆசைப்பட்டு பாவம் பண்ற கேவலமான ஜென்மம்..."

ரோஜா சீறினாள்.

"நீ அப்படியே உன் தாத்தா மாதிரி..." அவனும் சுமோவை நிறுத்திவிட்டு காரை நிறுத்தினான். அவள் எதிரில் நெற்றி புருவம், மீசை என்று தான் ஒட்டிக்கொண்டிருந்தைப் பிரித்து எடுத்தான்.

"நீ... நீ... நீ..." அவள் நாக்கு துடித்தது.

"சொன்னபடியே செய்து காட்டிட்ட சின்ன தேவமாயன். ஆனா நீ என் அப்பா மேலயும் கூட்டம் மேலயும் வெச்சிருக்கற பற்றுதலைப் பார்த்தபிறகு உன்னைக் கடத்திக்கிட்டு போறதோ உன் கழுத்துல ஒரு தாலிய கட்டி உன் அப்பாவுக்கு நான் பாடம் புகட்ட நினைக்கறதோ பெரிய தப்புன்னுதான் எனக்குத் தோணுது... நான் வேற வழிய பாத்துக்கறேன். நீ இறங்கி ஓடிப்போ. இல்லேன்னா உன்னை உன் மாமன் வாடிப்பட்டி வரதன் தாலிய கட்டி தன் சொந்தம் ஆக்கிக்குவான். ஜாக்ரதை."

சின்ன தேவமாயனின் அந்த தீர்க்கம், அவனது பெருந்தன்மை, சாமர்த்தியம், இறுதியாக வரதன்

பற்றிச் சொன்னது எல்லாமே அவளை உலுக்கி எடுத்தது! அவனை அப்படியே வெறித்தாள்.


அவனையே, வெறித்த ரோஜா அப்படியே சுமோவை விட்டு இறங்கினாள். இறங்கிய இடத்தில் அய்யனார் கோயில். பக்கத்து மரத்திலும் நிறைய நேர்த்திக் கயிறுகள், தொட்டில்கள், மெல்ல அந்த மரத்தை நோக்கி நடந்தவள் அதில் ஒரு மஞ்சள் கயிற்றைத் தேடி எடுத்தவள் அத்துடன் சின்ன தேவ மாயனை நோக்கி வந்தாள். அவனை நோக்கி நீட்டியவள், "மனசாரவும் சத்தியமாகவும் சொல்றேன். இதை தாலியா நினைச்சு என் கழுத்துல கட்டுங்க. என் அப்பாவோட தப்புக்குப் பரிகாரம் தேட நான் நினைக்கறேன். என் தாத்தாவோட ஆத்மாவுக்கு சாந்தி தரவும் விரும்பறேன்... ப்ளீஸ்..."

தேவமாயன் ஸ்தம்பித்தான். அவள் அவன் காலில் பொத்தென்று சரிந்து விழுந்தாள். இறுக்கமாகக் கட்டிக்கொண்டு கண்ணீரும் பெருக்கினாள். அவனோ சிலைபோல நெடுநேரம் நின்றான். அவளோ எழுந்து "உம் சீக்கிரம்... இந்தக் கயிறுதான் உங்களுக்கு எல்லா நியாயத்தையும் வாங்கித் தரும். எனக்கும் நிம்மதியைத் தரும். என்வரைல கேரக்டர் தான் பெரிய செல்வம். அந்த செல்வம் உங்ககிட்ட தான் இருக்கு... உங்க செல்வமே என் அப்பாகிட்ட இருக்கு. செல்வத்தோட செல்வம் சேரட்டும். இது உணர்ச்சி வசப்பட்டு எடுத்த முடிவு இல்ல. இதுதான் சரியான முடிவு. இது அவசரமான முடிவு இல்ல. இதுதான் ஆரோக்கியமான முடிவு..."

அவள் சொல்லச் சொல்ல அவனும் நெகிழ்ந்து போனான். அய்யனார் முன்னால் அவள் கழுத்தில் தாலியைக் கட்டினான். யதார்த்தமாக அந்தப் பக்க மாக வந்து அவ்வளவையும் பார்த்துக் கொண்டிருந்த ராஜேந்திரன் ஓடிப்போய் மணியை அடித்து தன் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டான்.

அது வெற்றிச் சப்தமாய் தேவர்கோயில் முழுக்க எதிரொலிக்கத் தொடங்கியது.

❑❑❑


திருமகள்
நிலையம்